கல்கி



KALKI அக்டோபர் 9,1955 4 அணா

கல்கி

மலர் 15
இதழ் 10

மன்மத
புரட். 23

பொருளடக்கம்

1955 அக்டோபர் 9

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


இருமலுக்கு
வீட்டிலேயே
குணம்
அளிப்பது!



மலர் 15 | இதழ் 10

மன்மத ௵ புரட்டாசி 23

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

வளரும் பயிர்கள்

காந்தி மகான் உலகுக்குச் செய்த மிகப் பெரிய சேவையை எடுத்துக் கூறும் போது, ராஜாஜி ஒரு விஷயத்தை நன்கு விளக்கி யிருக்கிறார். மகாத்மாஜி பாரத பூமியிலே நிகழ்த்திய அறப்போர் என்ற அற்புதத்தின் விளைவாக, இனி உலகிலேயே ஒரு நாடு இன்னொரு நாட்டைப் பலாத்காரமாக அடக்கி ஆளுவது என்பது முடியாத காரியம் என்று நிருபணம் ஆய்விட்டது. ஆக்கிரமிக்கும் நாடும், ஆக்ரமிக்கப்பட்ட நாடும் இரண்டுமே இந்த உண்மையை உணர ஆரம்பித்து விட்டன என்பதை ராஜாஜி மிகத் தெளிவாக விளக்கி யிருக்கிறார். காந்தி மகான் உலகுக்கு அளித்த இந்த வரப் பிரசாதத்தை 'யுக தர்மம்' என்றே அழகாக அழைக்கிறார் ராஜாஜி.

இப்பொழுது இந்த யுக தர்மத்தை இங்கே நினைவூட்ட வேண்டிய அவசியம் என்னவென்றால், இந்த யுக தர்மத்தை நன்றாக உணர்ந்து செயலாற்ற வேண்டிய பொறுப்பு நமது இளைஞர் சமூகத்தையே முக்கியமாகச் சாரும் என்பதுதான்

அன்னிய ஆக்கிரமிப்புக்கு இனி இடமில்லை. நம்மை நாம் ஆளுகிற புதிய சூழ் நிலையில் இந்த அகில உலகமே இருக்கிறது. இந்த நிலையில் நாம் 'புரட்சி' என்றும், 'சத்தியாக்ரகம்' என்றும் கிளம்பும்போது, ஒரு முறைக்குப் பல முறை யோசிக்க வேண்டியது அவசியமாகும். முக்கியமாக நமது இளைஞர்கள் இந்த விஷயத்தைத் தீவிரமாக ஆலோசிக்க வேண்டும்.

காந்திஜி நமக்கு வழங்கிய 'சத்தியாக்ரகம்' என்ற ஒப்பற்ற ஆயுதம், தீர்க்க தரிசனத்தோடு அமைதியிலும் அறத்திலும் உருவான புனிதமான படைக்கலம். இந்த ஆயுதத்தைக் கையாளுமுன் எத்தனை முன் யோசனையும், அதைக் கையாளுவதற்கு வேண்டிய திட்டமும் காந்திஜி வகுத்தார், பிறகு இந்த ஆயுதத்தைக் கையாளும் தொண்டர்களைப் பொறுக்குவதிலும், அவர்களுடைய செயல் முறைகளை வகுப்பதிலும் எத்தனை ஜாக்கிரதையும் கண்காணிப்பும் காந்திஜீ செலுத்தினார் என்பதை யெல்லாம் நமது பிரதம மந்திரி நேரு அவர்கள் சென்னைப் பொதுக் கூட்டத்தில் தெள்ளத் தெளிவாக எடுத்து விளக்கி யிருக்கிறார். "நமது இளைஞரிடையே இப்பொழுது ஒழுக்கக் குறைவும், ஆத்திரத்தினால் ஏற்படுகிற அர்த்தமற்ற கிளர்ச்சி மனப்பான் மையும் கண்டு துன்பப்படுகிறேன்" என்று நேருஜி குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தக் குறைபாடு முக்கியமாக வடநாட்டிலேதான் அதிகமாகக் காணப்படு கிறது என்றும், அலாகாபாத் மாணவர்கள் தங்கள் கலாசாலையில் செய்த கிளர்ச்சி தமக்குப் பெரும் துக்கத்தைத் தருகிறது என்றும், இம்மாதிரிச் செயல்கள் உலகத்தின் சிரிப்புக்கே இடமாகும் என்றும் மிக்க உணர்ச்சியோடு குறிப்பிட்டார். ஆனால் சென்னை யின் அமைதியான சூழ்நிலை அவருடைய மனக் கொதிப்பைத் தணிக்கும் வகையில் இருக்கிறது என்று நேருஜி சொன்னபோது, சென்னைக் கடற்கரையிலே கூடியிருந்த இரண்டு லக்ஷத்துக்கும் மேலான மக்கள் கரகோஷம் செய்து ஆரவாரித்தார்கள். உண்மையில் அப்பொழுது நம் அனைவருடைய மனமும் குளிர்ந்தது. அந்தக் குளிர்ச்சி வாழ்க என்று வாழ்த்துவோம். ஆனால் அதேசமயம் நமது இளைஞர்களும் மாணவ சமூகமும் நேருஜி விளக்கிக் காட்டிய அறநெறியையும், கட்டுப்பாட்டையும், ஒழுங்கு

மனப்பான்மையையும், எப்பொழுதும் நினைவிலே வைத்துக் கொண்டு நமது பிரதம மந்திரியின் மனம் சென்னையை நினைத்தால் எப்பொழுதுமே குளிர்ச்சி அடையும் வகையில் பேணிப் பாதுகாக்கவேண்டும் என்று பெரிதும் விரும்புகிறோம்.

நமது தமிழ் நாட்டின் பெரியோர்களும், மகான்களும், கவிஞர்களும் எத்தனையோ வண்ண வண்ணக் கவிகளிலே அழகழகாகப் பாடிய தர்மத்தைத்தான் இக்காலத்தில் நம் கண் முன்பு காந்தி மகான் நமக்கு எடுத்துச் சொன்னார்.

"அறத்தினூங்கு ஆக்கமும்
இல்லை: அதனை
மறத்தலி னூங்கில்லை
கேடு!"

'அறத்தைப் போல் ஆக்கமானது ஒன்று இல்லை. அதனை மறப்பதைப் போல் கேடானது வேறு ஒன்று கிடையாது' என்று தமிழ் நாட்டு ஞானி வள்ளுவர் பெருமான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அற்புதமாகக் கூறினார். அறிவும், உணர்ச்சிகளும் பக்குவமாகிற தமிழ் இளைஞர் குலம், வள்ளுவர் கண்ட இந்த வான் மறையை ஒரு நாளும் மறக்காது என்று நிச்சயமாக நம்புகிறோம்.

அந்த அறத்தையே அரசியல் வாழ்வில் கடைப்பிடிக்கும் என்றும் திண்ணமாக எதிர்பார்க்கிறோம்.

வயல்களில் நடுவதற்கு வேண்டிய பயிர்களுக்காக 'நாற்றங்கால்' என்று உண்டல்லவா ! அத்தகைய பண்ணைகள் நமது கல்லூரிகளும், பயிற்சிக் கூடங்களுமே. இந்தப் பண்ணைக் கால்களில் வளர்கிற முளைகள் நலமாக ஆரோக்கியமாக வளர்ந்தால்தான் குடியாட்சி எதிர்காலத்தில் செழிப்பாகப் பயன் தரும். அதனாலேதான் இன்றைய இளைஞர்களின் போக்கைக் கண்டு தாம் மிகவும் வேதனைப் படுவதாக நேருஜி குறிப்பிட்டார். எனவே, நாற்றங்காலில் இப்பொழுது வளர்ந்து கொண்டிருக்கும் இளம் பயிர்களான நமது இளைஞர் சமூகம், அறம் என்ற நல்ல சூரிய வெளிச்சத்திலே, நல் உணர்வு என்ற தண்ணீரின் வளப்பத்தில், கட்டுப்பாடு என்ற வரப்புக்களுக்குள்ளே நின்று சீராக வளர்ந்து பயன்தர 'ஆதி பகவன்' அருள்வானாக!

ஹிந்தியும் ஆங்கிலமும்


பாஷைப் பிரச்னையைப் பற்றித் தென்னாட்டு மக்களுக்குத் தலைவர்கள் பின் தலைவர்களாகச் சமாதானம் பேசி வருகிறார்கள். "பலாத்காரமாக உங்கள் மீது ஹிந்தியைச் சுமத்துவதில்லை" என்று சொல்லி வருகிறார்கள். ஆயினும் இதன் பொருள் ஐயமற விளங்கவில்லை. கவலைப்படுகிறவர்களுக்குச் சமாதானம் சொல்லி நாட்டில் சாந்தி நிலையுண்டாக்குவது நல்லதே யாயினும், பிரச்னையை உண்மையில் தீர்ப்பதற்கு வழிகளைத் தேடிக் காணாமல் சொற்பொழிவுகளில் திருப்தியடைய முடியாது.

இந்த ராஜ்யத்திலிருந்து வெளியே அனுப்ப வேண்டிய கடிதம், அறிக்கை, சட்ட மசோதா இவையெல்லாம் ஆங்கிலத்தில் அல்லாமல் ஹிந்தியிலேயே போவதா யிருந்தாலும், பிற ராஜ்யங்களிலிருந்தும் மத்திய அரசாங்கத்திலிருந்தும் இந்த ராஜ்ய அதிகாரிகளுக்கு வரும்படியான சகல எழுத்தும் ஹிந்தியிலேயே வருவதாயிருந்தாலும் ஹிந்திப் பயிற்சி பெற்ற எத்தனை உத்தியோகஸ்தர்கள் இந்த ராஜ்யத்தில் அமைக்கப்பட வேண்டும்! இதை யோசிக்க வேண்டும். அவர்களுடைய ஹிந்திப் பயிற்சி தற்போது உத்தியோகஸ்தர்கள் அடைந்திருக்கும் ஆங்கிலப் பயிற்சியின் அளவுக்கு இருக்க வேண்டுமல்லவா ! ஆனபடியால் அந்த உத்தியோகஸ்தர்கள் வடநாட்டிலிருந்துதான் வந்து இறங்க வேண்டும். ஹைகோர்ட்டுத் தீர்ப்புகளும் சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்புகளும் ஹிந்தி பாஷையில் எழுதப்பட வேண்டும்.

நூற்றைம்பது வருஷ ஆங்கிலப் பயிற்சியைக் கடலில் போட்டு விட்டு மேலே விளக்கப்பட்ட அளவு ஹிந்திப் பயிற்சி தமிழ் மக்களுக்கு இன்று முதல் எவ்வளவு ஆண்டுகள் தீர்ந்தபின் உண்டாகும் ! பள்ளிக்கூடத்தில் குழந்தைகளுக்கெல்லாம் நல்ல உபாத்தியாயர்களை அமைத்து இன்று முதல் கட்டாய ஹிந்திப் படிப்புக் கொடுக்க ஆரம்பித்தால் குறைந்தபட்சம் இன்னும் பன்னிரண்டு வருஷங்களாகும், சரியான பயிற்சி யடைந்து உத்தியோகம் பார்க்கும் திறமையை அடைவதற்கு. பரஸ்பர ராஜ்ய விவகாரங்களுக்கும் மத்திய சர்க்கார் விவகாரங்களுக்குமே ஹிந்தி பாஷை என்று சமாதானம் சொல்லுவதின் பொருளும் விளக்கமும் இது. பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் கட்டாய ஹிந்திப் படிப்பு சரியாக ஆரம்பித்து முடிந்திருந்தால் இப்போது கவலைக்கு இடம் இருந்திருக்காது. ஆனால் அதைப்பற்றி இப்போது பேசிப் பயனில்லை. கட்டாய ஹிந்திப் படிப்புக்குப் பள்ளிக்கூடங்களில் ஏற்பாடு செய்துவிட்டு, பதினைந்து வருஷமாவது தவணை வைத்தால் தான் ஆங்கிலத்தை நீக்கி இந்திய அரசியல் பொது நிர்வாக பாஷையாக ஹிந்தியைச் செய்ய முடியும். இல்லாவிடில் தென்னாட்டு மக்களின்மேல் அபாரச் சுமை சுமத்துவதாகத்தான் ஆகும்.

மொத்தத்தில் எல்லாச் சங்கடங்களையும் யோசித்தால் ஆங்கில பாஷையை நீக்கிவிடாமல் வைத்துக் கொண்டு ஹிந்தி பாஷையின் முன்னேற்றத்தைக் காலத்தின் போக்குக்கு விட்டு விடுவதே உசிதமாகத் தோன்றுகிறது. உள்நாட்டு ராஜ்ய விவகாரங்களில் தமிழ் நாட்டில் தமிழும், ஹிந்திப் பிரதேசங்களில் ஹிந்தியும் நிர்வாக மொழியாகச் செய்வது தான் நியாயம். அப்படி யில்லாமல், நிர்வாகத்தில் ஆங்கிலத்தின் ஸ்தானத்தை ஹிந்தி பாஷைக்கு உடனே எல்லாப் பிரதேசங்களிலும் அளிப்பது சிக்கல்களுக்கும் அநீதிகளுக்கும் அடிகோலுவதாகும்.

பாரத ரயில் வண்டி



சென்னையில் ரயில் பெட்டித் தொழிற்சாலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் நேருஜி, நாட்டின் ஐக்யத்தையும், மக்களுக்குள் இருக்க வேண்டிய இணைப்பையும் பற்றிக் குறிப்பிட்டார்.

நகரசபைத் தேர்தல்கள்

சென்னை மக்களைப் பாராட்டுகிறோம். சென்னை நகரசபைக்குப் பெருவாரியான காங்கிரஸ் அங்கத்தினர்களை அனுப்பி மீண்டும் தங்களுக்குக் காங்கிரஸ் கட்சியிலுள்ள பற்றுதலைச் செவ்வனே காட்டிக் கொண்டார்கள். காங்கிரஸ் கட்சியில் குற்றமும் குறைபாடுகளும் இருக்கலாம். ஆனால் அந்தக் காரணத்தைக் கொண்டு மாறான முடிவுக்கு வராமல் காங்கிரஸ் அபேட்சகர்களையே தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் சென்னை மக்கள்.

டில்லியில் ஆளும் கட்சி காங்கிரஸ், சென்னையில் ஆளும் கட்சி காங்கிரஸ். நகர சபையிலும் காங்கிரஸ் ஆட்சியே இருந்தால்தான் நாட்டின் முன்னேற்றத்துக்காக வகுக்கப்படும் பல திட்டங்களில் ஒன்றுக்கொன்று துணையாக இருந்து மக்களுக்குப் பயனுள்ள காரியங்களைச் செய்ய முடியும். இல்லையேல் முன்னேற்றம் தடைப்படும். நகரசபையும் ஸ்தல ஸ்தாபனங்களும்தான் மக்களுடன் நேரிடையான தொடர்பு கொள்வன. சர்க்காரின் திட்டங்கள் ஸ்தல ஸ்தாபனங்களின் உதவியோடுதான் பயனுறும் வகையில் அமுலாக முடியும்.

பொதுஜனங்களை இவ் வகையில் நாம் பாராட்டினாலும் மற்றொரு வகையில் அவர்கள் காரியம் வருத்தத்தையே அளிப்பதாக இருக்கிறது. சென்னையில் நடைபெற்ற தேர்தல்களில் முப்பது சத விகிதத்தினரே வோட்டு அளித்தனர். தமது உரிமையை நிலைநாட்டினர். ஜனநாயக நாட்டில் மக்கள் தங்கள் கடமையைச் சரியானபடி செய்யவில்லை.

சென்னை நகரில் நடந்த தேர்தல்களில் ஒரு அதிசயம் கண்டோம். எத்தனையோ பேர் தங்களுக்கு வோட்டுரிமை இல்லை என்பதைக் கண்டார்கள். சென்ற முறை வோட்டுப் போட்டவர்களுக்கு இம்முறை வோட்டர் ஜாபிதாவில் அவர்கள் பெயர்களையே காணோம். ஒரு வீட்டில் ஒரு குடும்பத்தில் நான்கு பேர் இருந்தால் அவர்களில் இருவருக்கு வோட்டுரிமை யிருக்கிறது, மற்ற இருவர் பெயரை அடியோடு காணோம்! ஏன் இந்த ஊழல் என்பது தெரியவில்லை.

இப்படி ஜனநாயக உணர்ச்சியுள்ள மக்கள் பலர் தங்களுடைய பெயரையே காணாமல் மிகவும் மனம் நொந்திருக்கிறார்கள். இத்தகைய தவறுகள் நேராமல் சென்னை கார்ப்பரேஷன் அதிகாரிகளும் ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளும் பார்த்துக்கொள்ள வேண்டும். அல்லாதபக்ஷம், முப்பது சத விகிதம் பேர்தான் வோட்டுக் கொடுத்திருக்கிறார்கள் என்று மக்களை மட்டும் குறை கூறுவதில் அர்த்தம் இல்லையல்லவா!

இந்த முறை கார்ப்பரேஷன் தேர்தலில் ஏற்பட்ட இந்த அனுபவம் இனி வரும் தேர்தலுக்கு ஒரு நல்ல படிப்பினையாக விளங்குவதோடு, இம்மாதிரிக் குறைகள் இனி நேராதவாறு பார்த்துக் கொள்ள உதவும் என்று எதிர்பார்க்கிறோம்.

அர்ஜண்டீனாவில் அரசியல் மாற்றம்

இந்த உலகில் பெரும்பாலான நாடுகளில் முடியாட்சி மறைந்து குடியாட்சி ஏற்பட்டு விட்டது. சென்ற மகாயுத்தத்துக்குப் பின் இந்த உலகிலே சர்வாதிகார ஆட்சிக்கு இடமில்லை என்பது உறுதியாகி விட்டது. இவ்விதம் எட்டுத் திசைகளிலும் ஜனநாயக முழக்கம் கேட்டு வரும் இக் காலத்தில், சென்ற பத்து ஆண்டுகளுக்கு மேலாகத் தென் அமெரிக்காவில் உள்ள அர்ஜண்டீனா நாட்டில் சர்வாதிகார ஆட்சி தாண்டவமாடி வந்ததெனில் அது விந்தையல்லவா!

எனினும் கடைசியாக, அந்த சர்வாதிகார ஆட்சிக்கும் முடிவு ஏற்பட்டு விட்டது. அங்கு உண்டான அரசியல் சூறாவளியின் பயனாக, அர்ஜண்டீனா சர்வாதிகாரியாக விளங்கிய ஜுவன் பிரான் அந்த நாட்டிலிருந்து வெளியேறி வெளி நாட்டில் அடைக்கலம் புகுந்துள்ளார். லொனார்டி என்ற இராணுவத் தலைவரின் கீழ் அர்ஜண்டீனாவில் புதிய அரசாங்கம் ஏற்பட்டிருக்கிறது.



பிரானின் ஆட்சியில் அர்ஜண்டீனாவில் பத்திரிகை சுதந்திரம், பேச்சு சுதந்திரம் முதலிய எவ்வித உரிமையுமின்றி மக்கள் அவதிப்பட்டனர். மக்களின் சார்பில் போரிட்ட பத்திரிகைகள் நசுக்கப்பட்டன. எனினும், உலகில் எந்த நாட்டிலும் சர்வாதிகார ஆட்சி நிலை பெற முடியாது என்பதை அர்ஜண்டீனா நிகழ்ச்சிகள் உலகத்துக்கு மீண்டும் நிரூபணம் செய்திருக்கின்றன.


அர்ஜண்டீனாவில் ஏற்பட்டுள்ள புதிய சர்க்காரைப் பாரத நாடு உள்படப் பல நாடுகள் அங்கீகரித்திருக்கின்றன. எனினும் புதிய ஆட்சியின் கீழ் அங்கு அமைதியும் அந்த நாட்டு மக்களுக்கு நன்மையும் ஏற்படுவதற்கான மார்க்கத்தை எதிர்காலந்தான் காட்ட வேண்டும்.

<u>அட்டைப்படம்</u>


அமரதாரா

எவ்வளவோ இன்ப நினைவுகளுடன் குங்குமத்துறைக்கு வருகிறான் அமரதாரா. குங்குமத்துறையில் மிகுந்த குதூகலத்துடன் ஒரே நாள்தான் இருக்கிறான். அந்த வேளையில் அவன் மீது கொலைக் குற்றம் சாட்டிக் கைது செய்ய உத்தரவுடன் இன்ஸ்பெக்டர் வந்து விடுகிறார். அமரதாராவுக்கு உலகமே சுழலுகிறது. அவன் கையிலிருக்கும் கடிதம் அவன் எதிர்கால வாழ்வையே நாசப்படுத்தி விட்டதாக நினைத்துத் துடிக்கிறான். அவன் அவல நிலையைக் கண்டு கவுண்டரும், வள்ளியும் கதிகலங்கி நிற்கிறார்கள். இன்ஸ்பெக்டரோ கடமையைக் கருத்தில் கொண்டு நிற்கிறார். இந்தச் சூழ்நிலையைச் சித்திரிக்கிறார் இந்த வாரத்து அட்டையில், ஓவியர் மணியம்!








என்ன சேதி?

பி. ஸி. ஜி

ஹைதராபாத் சட்ட சபையில் பி. ஸி. ஜியைப் பற்றிக் கேள்வியும் பதிலும் நிகழ்ந்தது. மத்திய ஸர்க்காரினுடைய உத்தரவு, ராஜாஜியின் எதிர்ப்பின் வேகத்துக்கு இசைந்து அதுவும் தீவிரமாக நடைபெறுகிறது. ஆனால் வேகத்தைக் கண்டு மயங்கிவிட வேண்டியதில்லை. இது ஒருவித ஜுரம் — க்ஷய வியாதியில் ஜுரம் ஏறுவது போல். ஹைதராபாத் சுகாதார மந்திரி பதில் அளிக்கும்போது சொன்னாராம், "ஆட்சேபணைகளை ஒட்டி விசாரிக்க விசாரிக்க பி.ஸி.ஜியின் நன்மைகள் மிகத் தெளிவாகக் காணப்படுகிறது" என்று. ஆயுள் முழுதும் காப்புத் தருகிறது என்று கூட— முதல் நம்பர் அறியாமையோ அல்லது பச்சைப் பொய்யோ தெரியவில்லை — சொன்னாராம். ஆயுள் முழுதும் காப்புத் தருவதாக பி. ஸி. ஜி யைக் கண்டவராவது அதைப் போற்றிப் பிரசாரம் செய்கிறவர்களாவது இதுவரை சொன்னதில்லை. இது ஹைதராபாத் மந்திரிகளின் அற்புத பக்திப் பணி.

கனம் சென்னை மந்திரியைச் சட்ட சபையில் பி. ஸி. ஜியைப் பற்றிக் கேட்டதற்கு இந்தப் பிரச்னையைக் கட்சிப் பிரச்னையாக்க வேண்டும் என்கிற முறையில் பதிலளித்திருக்கிறார். நோயும் வைத்தியமும் கட்சிக் கட்டுப்பாட்டில் அடங்குமா என்பதைக் கூட யோசிக்காமல் பேசியிருக்கிறார். பி. ஸி. ஜிப் பிரயோகம் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் வைத்து முடிவு கட்டாமல் ஆரம்பிக்கப்பட்டது; பிடிவாதத்தில் இயங்கி வருகிறது. எதிர்ப்புக்கு மட்டும் இப்பொழுது கட்சிக் கூட்டம் போட வேண்டும் என்கிறார். இது எந்த நியாயமாயினும், விஞ்ஞானத்தையும் வைத்திய ஆராய்ச்சியையும் கட்சிச் சிமிழுக்குள் அடக்கப் பார்ப்பது அவிவேகம். அரசாங்க நிர்வாக தர்மத்துக்கு விரோதம்.

ஒரு வைத்தியரின் கடிதம்

தமிழ் நாட்டில் டாக்டர்கள் பல காரணங்களினால் பேசாதிருந்தாலும் அலகாபாத்தில் சிலர் சும்மா இருக்கவில்லை. டாக்டர் ஜே. ஆர். பாட்டியா என்பவர் அடியிற்கண்டவாறு அலகாபாத் "லீடர்" பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார்:—

டி. பி. நோயைத் தடுக்கும் முறைகளில் பி. ஸி. ஜி ஒன்றெனக் கொள்வதினால் யாதொரு பிரயோஜனமுமில்லை என்று தான் பி. ஸி. ஜி எதிர்ப்பாளர்கள் கூறுகிறார்கள். அதற்கு இன்னும் சில காரணங்கள் இருக்கின்றன.

1. டி. பி. நோய் ஒருவனுக்கு முதல் தடவை ஏற்பட்டு சொஸ்தமானால், அவன் உடலில் ஓரளவு டி. பி. நோயைத் தடுக்கும் சக்தி ஏற்படுகிறது. அந்த அளவு தடுப்புச் சக்திதான் பி. ஸி. ஜியும் அளிப்பதாகக் கருதப்படுகிறது. ஆனால் உண்மையில் அதைவிடக் குறைவான தடுப்புச் சக்திதான் அளிக்கிறது.

2. இயற்கையில் தடுப்புச் சக்தி பெற்றவராயினும் சரி, பி. ஸி. ஜி மூலம் பெற்றவராயினும் சரி, இரண்டாம் முறை கடும் டி. பி. தொத்து ஏற்பட்டால் அதற்கு உள்ளாகித்தான் போகிறார்கள். அதனால் பி. ஸி. ஜி குத்தப்பட்டவன், குத்தப்படாதவனைவிட மோசமான நிலையில் இல்லை என்று பி.ஸி.ஜி ஆதரவாளர்கள் கூறலாம். இதுதான் பி. ஸி. ஜி க்குக் கூறக்கூடிய மிதமிஞ்சிய ஆதரவு மொழிகள்!

3. பி. ஸி. ஜி அம்மைக் குத்தினால் ஏற்படும் தடுப்புச் சக்தி குத்திய சில ஆண்டுகளில் வேகமாகக் குறைந்து, ஐந்து ஆண்டுகளில் பூரணமாக அற்றுப் போகிறது. இந் நிலையில் பி. ஸி. ஜி பொதுஜன இயக்கமாக நடத்துவதனால் இன்று ஏற்படக்கூடிய நோயை ஐந்து ஆண்டுகள் கழித்து வர ஏற்பாடு செய்வதற்கு ஒப்பாகும். இது மிகவும் ஊறனிகரமானது. பி. ஸி. ஜி குழந்தைப் பருவத்தில் உள்ளவர்களுக்குக் குத்தப்படுகிறது. அந்தப் பருவத்தில் தேகத்தில் வெளியிலிருந்து தொத்து நோயை எதிர்க்கும் சக்தி இயற்கையாக இருக்கிறது. அந்தப் பருவத்தில் டி. பி. நோய் வந்தால்கூட தேகம் சமாளித்து விடும். வயதாகிவிட்டால் அவ்வளவு தடுப்புச் சக்தியிருப்பதில்லை. தொத்துகள் வந்தால் உடம்பு இடம் கொடுத்து விடுகிறது. ஆகவே டி.பி. தொத்தைத் தேகம் எதிர்த்து நிற்கக்கூடிய பருவத்தில் பி. ஸி. ஜி யைக் குத்தி ஐந்து ஆண்டுகள் வர விடாமல் செய்கிறார்கள். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, தேகத்தில் இயற்கையாகவுள்ள எதிர்ப்புச் சக்தியும் போய்விடுகிறது. பி. ஸி. ஜி யின் சக்தியும் போய் விடுகிறது. அந்நிலையில் டி. பி. நோய்க்கு எவ்வித காப்பும் இன்றிப் பலியாகிறான்! இதுதான் குழந்தைப் பருவத்தில் பி. ஸி. ஜி குத்துவதால் ஏற்படும் விபரீத பலன். இத்தகைய பலனை அளிக்கக்கூடிய பி. ஸி. ஜி யைக் குத்துவானேன்?

4. வயது வந்தவர்களுக்கு பி. ஸி. ஜி யின் தடுப்புச் சக்தி குறைந்து விட்டது

என்று தெரிந்தவுடன் மறுமுறை பி. ஸி. ஜி குத்தலாம் என்று பி. ஸி. ஜி வாலாக்கள் வாதாடலாம். ஆனல் மறுமுறை பி.ஸி.ஜி குத்துவதனல் நல்ல பயனுண்டு என்பதற்கு விஞ்ஞான உலகில் போதிய சான்றுகளே இன்னும் கிடைக்கவில்லை!

5. ஐரோப்பிய நாடுகளில் டி. பி. நோய்க்கு உட்படுபவர்களின் தொகையும் இறப்பவர்களின் தொகையும் சென்ற ஐம்பதாண்டுகளில் பெரிதும் குறைந்திருக்கின்றன. அந்நாடுகளில் எல்லாம் பி.ஸி.ஜி பெருவாரியான மக்களுக்குக் குத்தப்பட்டுத்தான் இருக்கிறது. இருப்பினும் அவர்கள் பி. ஸி. ஜி யினுல் மேலே கூறிய நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது என்று கூற அவர்கள் தயாராயில்லை. ஹில்லர்மன் பின்வருமாறு கூறுகிருர்: "அமெரிக்காவில் சில மாகாணங்களில் பி. ஸி. ஜி ஊசி குத்தும் இயக்கம் நடத்தப்பட்டது. டி. பி. நோய்க்குட்பட்டவர்களின் தொகையும் இறந்தவர்களின் தொகையும் பெரிதும் குறைந்திருப்பது பி. ஸி. ஜி ஊசி குத்தும் இயக்கம் நடத்தப்படாத மாகாணங்களில்தான்!"

அமரர் உலகு சென்ருர்


மகா கவி பாரதியின் மனைவியாக வாழும் பாக்கியம் பெற்ற ஸ்ரீமதி செல்லம்மா பாரதி அவர்கள் சென்ற மாதம் இருபத்தொன்பதாம் தேதி இம் மண்ணுலகை விட்டு விண்ணுலகு சென்று விட்டார். தமது அறுபத்தைந்தாம் வயதில் அருமைக் குமாரிகள் தங்கம்மாள் பாரதியும், சகுந்தலா பாரதியும், உற்ற நண்பர்களும் உடனிருக்க அமைதியாக இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

பாரதிக்கு அவர் பிறந்த எட்டையபுரத்திலே மணிமண்டபம் கட்டி, அந்த மண்டபத்தைக் கண்டு உலகமே வியந்த காட்சியை நேரிலே பார்த்து மனம் களித்தார்கள். பாரதியாரின் அமர கவிதைகள் தமிழ் நாட்டில் வீட்டுக்கு வீடு முழங்கும் அற்புதத்தைக் கேட்டு மகிழ்ந்தார்கள். பாரதி கண்ட கனவு நனவாவதைப் பார்க்கும் பாக்கியம் பெற்ருர்கள். சுதந்திர நாட்டில் 'ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே! ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்!' என்று தமிழ் மக்கள் ஆடிப் பாடி மகிழ்ந்ததைக் கண்டு மனம் பூரித்தார்கள்.

இதைவிடப் பெரிய பாக்கியம் உண்டா? இத்தகைய பெறற்கரிய பாக்கியத்தைப் பெற்று, நிறைந்த உள்ளத்துடன் அமைதியாக மறைந்த ஸ்ரீமதி செல்லம்மாள் பாரதியை வானுலக வாசலில் கவியரசர் பாரதியார் எதிர்கொண்டழைத்து ஏற்றுக் கொண்டிருப்பார். தம்முடைய கனவுகள் எல்லாம் மண்ணுலகிலே நனவாகியதை



சென்னையில் நேரு




4

நமது பாரதப் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு காந்தி மகான் பிறந்த புனித தினமான அக்டோபர் இரண்டாந் தேதி சென்னைக்கு வந்தார். பெரம்பூரில் இருக்கும் ஆசியாவிலேயே மிகப் பெரிய ரயில் வண்டி கட்டும் தொழிற்சாலையைத் திறந்து வைத்தார். புதிதாகக் கட்டப்பட்டிருந்த ஒரு ரயில் வண்டியை வெள்ளோட்டம் விட்டார். மாலையில் பொதுக் கூட்டத்தில் பேசினார். மேற்படி நிகழ்ச்சிகளின் காட்சிகள் சிலவற்றை இந்தப் பக்கங்களில் உள்ள படங்களில் காணலாம்.

1. ஜவாஹர்லால் நேரு அவர்களைத் திரு கே. சடகோபன் வரவேற்கிறார். 2. ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் கடவுள் வணக்கம் பாட விழா ஆரம்பமாகியது. மேடை மீது ஸ்ரீமதி இந்திரா காந்தி, திரு டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், கனம் ஸ்ரீபிரகாசா, நேருஜி, திரு லால் பகதூர் சாஸ்திரி, திரு காமராஜ் நாடார், திரு ஓ.வி. அளகேசன் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். 3. விழாவுக்கு வந்திருந்த பிரமுகர்கள் சபை. 4. மாலையில் நடந்த பொதுக் கூட்டத்தில் நேருஜியுடன் முதல் மந்திரி காமராஜரும், கனம் பக்தவத்சலமும். 5. ஸ்ரீபிரகாசாவும் நேருஜியும். 6. கடற்கரைக் கூட்டம்.



5



6

உடனிருந்து கண்டு வந்ததற்காக மனம் மகிழ்ந்து வரவேற்றிருப்பார்.

மகா கவிஞரின் வாழ்க்கைத் துணைவி அமரர் உலகிலே தமது துணைவருடன் அருவமாக நின்று, தமிழ் மக்களை என்றென்றும் வாழ்த்திக் கொண்டிருப்பார்களாக!

பாராட்டுகிறோம்

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு பாரத சர்க்கார் ஆய கலைகள் அறுபத்து நான்கையும் வளர்க்கும் பணியில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். அக் கலைகளின் அபிவிருத்திக்கான பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள். சமீபத்தில் இந்திய சர்க்கார் இருபத்து ஒன்பது இளம் கலைஞர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கி அவர்களுடைய கலை வளர்ச்சிக்கு உதவி யிருக்கிறார்கள்.

கர்நாடக சங்கீதத்தில் வாய்ப்பாட்டுக்கு ஸ்ரீ கேதார நாதனைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். வேலூரில் சங்கீதச் சிறப்பு மிக்க குடும்பத்திலே பிறந்த ஸ்ரீ கேதார நாதன் ஆறு வருஷங்கள் திருவனந்தபுரம் சங்கீத கலாசாலையில் இசை பயின்றார். சங்கீத கலாநிதி ஸ்ரீ செம்மங்குடி சீனிவாசய்யர் அவர்களிடம் மேலும் ஆறு ஆண்டுகள் குருகுல வாசம் செய்து சங்கீத மும்மூர்த்திகள் வளர்த்த நமது கர்நாடக சங்கீத சம்பிரதாயங்களை முறையோடு பயின்று தேர்ச்சி பெற்றிருக்கிறார். இப்படி எல்லா வகையிலும் தகுதி உடைய ஒருவரை இந்த உபகாரச் சம்பளத்துக்குத் தேர்ந்தெடுத்தது மிகப் பொருத்தமான காரியம். குரு பக்தியும், சங்கீதப் பண்பும் நிரம்பிய இந்த இளங் கலைஞருக்கு நமது மனமார்ந்த பாராட்டுக்கள் உரியன.



ஸ்ரீ கேதாரநாதன்

பிரமுகருக்குக் கௌரவம்

இலங்கை பிரபல இந்தியத் தோட்ட அதிபரும் பதிவுப் பிரஜையுமான ஸ்ரீ ஆர். ஏ. நடேசனுக்கு இலங்கை அரசாங்கம் சென்ற வாரம் சமாதான நீதிபதி (J. P.) என்ற பட்டம் வழங்கி யிருக்கிறது. சுமுகமான குணமும் சகலருடனும் சகஜமாகப் பழகும் பண்பும் தொழில் நிபுணத்துவமும் உடைய ஸ்ரீ நடேசனுக்கு இலங்கை அரசாங்கத்தினிடம் செல்வாக்கு உண்டு. மகாராணியின் சென்ற பிறந்த தினத்தின் பொழுதுதான் அவருக்கு ஓ. பி. இ. என்ற கௌரவப் பட்டமும் வழங்கப்பட்டது.



89. "நாராயணன் தானோ?"

அங்கதனுடைய தேற்றுதலினால் வானரர்கள் தைரியம் கொண்டு ஒன்று சேர்ந்து கும்பகர்ணனைத் தாக்கினார்கள். பெரிய மரங்களையும் பாறைகளையும் பறித்தெடுத்து அவன் மேல் வீசி எறிந்தும் அடித்தும் நொறுக்கியும் பார்த்தார்கள். அவனோ இவற்றைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் சிரித்துக்கொண்டே வானரர்களைத் துவம்சம் செய்தான். கும்பகர்ணனுடைய வீராவேசமும் குரூர யுத்தமும் வானரர்களைச் சிதறியடித்தது. கடலிலும் தாங்கள் கட்டின சேதுவிலும் ஆகாயத்திலும் காட்டிலும் ஓடி மறையப் பார்த்தார்கள். மறுபடியும் அங்கதன் வானர வீரர்களுக்கும் வானரப் படைக்கும் தைரியம் சொல்லி, ஒன்று சேர்த்து கும்பகர்ணனைத் தாக்கச் செய்தான். துவிவிதன், ஹனுமான், நீலன், விருஷபன், சரபன் முதலிய வீரர்கள் கும்பகர்ணனைப் பலமாகத் தாக்கினார்கள். அவனோ அதையெல்லாம் லட்சியம் செய்யவில்லை. வானர வீரர்களை ஒருவர் பின் ஒருவராக அடித்து நொறுக்கிக் கீழே தள்ளினான். வானரச் சேனைக்குப் பயங்கர நாசம் விளைவித்தான். அங்கதனே அடிபட்டு நினைவற்றுப் பூமியில் விழுந்தான். சுக்ரீவனும் அடிபட்டு பிரக்ஞையற்றுக் கீழே விழுந்தான். நினைவற்றுக் கிடந்த சுக்ரீவனை எடுத்துத் தூக்கிக் கொண்டு கும்பகர்ணன் வெகு மகிழ்ச்சியுடன் லங்கையை நோக்கி ஓடினான். ராக்ஷச சேனை பெரு மகிழ்ச்சியடைந்து ஆரவாரித்தது. அண்ணன் ராவணனிடம் வானர ராஜனைக் கொண்டு போய்த் தான் தந்த பரிசாகக் கொடுக்க கும்பகர்ணன் சென்றான்.

* * *

இவ்வண்ணம் பிரக்ஞை இழந்த வானர ராஜனைத் தூக்கிக் கொண்டு லங்கா நகர ராஜ வீதியில் வெற்றிகரமாகச் சென்ற கும்பகர்ணன் மேல் மாட மாளிகையிலிருந்து அரக்கர்களும் அரக்கிகளும் புஷ்பமும் சந்தனக் குழம்பும் ஏராளமாகப் பொழிந்தார்கள். சிறிது நேரம் கழிந்ததும் சுக்ரீவன் நினைவு அடைந்தான். "என்ன இது? எங்கே இருக்கிறேன்?" என்று நாற்புறமும் பார்த்து விஷயம் அறிந்து கொண்டான். திடீர் என்று அரக்கனுடைய காதுகளையும் மூக்கையும் பல்லால் கடித்தும் நகங்களால் கிழித்தும் ரணமாக்கித் துன்பப்படுத்தினான். அரக்கன் அந்த வேதனையைப் பொறுக்க மாட்டாமல் சுக்ரீவனைக் கீழே போட்டுக் காலால் துவைக்கப் பார்த்தான். உடனே சுக்ரீவன் குதித்தெழுந்து ஆகாய மார்க்கமாக ராமசந்திரனிருந்த இடத்துக்குப் பாய்ந்து போய் விட்டான்.

ராஜாஜி

இப்படி சுக்ரீவன் செய்வான் என்பதை

முன்னமேயே ஹனுமான் உணர்ந்து கொண்டு, கலங்கிப் போன வானர சேனையை வியூகப்படுத்தி அமைதியாகவும் தைரியமாகவும் நிற்கச் செய்து, மறுபடி யுத்தத்துக்கு ஆயத்தமாக்கினான். காதுகளும் மூக்கும் அறுபட்டு ரத்த வெள்ளமாக கும்பகர்ணன் சாயங்கால மேகத்தைப் போல் செக்கச் சிவந்து ஏமாற்ற மடைந்த பெருங் கோபத்தோடு காலாந்தகனைப் போல் யுத்தகளத்துக்கு, ஒரு பெரிய இரும்பு உலக்கையைக் கையில் தூக்கிக் கொண்டு மறுபடி திரும்பினான்.

* * *

யாராலும் கும்பகர்ணனைத் தடுக்க முடியவில்லை. கொன்றும் தின்றும் வானர சேனையை அழித்துக் கொண்டே வந்தான். அவன் மேல் வானரர்கள் ஏறி, மலை போன்ற அவன் தேகத்தைக் குத்தியும் கிழித்தும் பார்த்தார்கள். அவனோ இதை ஒன்றும் லட்சியம் செய்யவில்லை. ஈயை ஓட்டி உதறுவது போல் உதறித் தள்ளினான். வானரத் தலைவர்கள் யாராலும் அவனை அடக்க முடியவில்லை. லக்ஷ்மணனும் அம்புகள் எய்து எதிர்த்தான். ஆனால் அரக்கன் அவனை விட்டு விட்டுத் தாண்டிச் சென்று ராமனை எதிர்க்க ஓடினான்.

ராமசந்திரன் அரக்கனோடு நெடு நேரம் போர் செய்தான். ஏழு மராமரங்களையும் வாலியின் வஜ்ர தேகத்தையும் துளைத்துச் சென்ற அம்பு கும்பகர்ணனுடைய உடலை ஒன்றும் செய்ய முடியவில்லை. கூரிய வேறு பலமான அம்புகளை எய்து கைகளை வெட்டியும் கால்களை வெட்டியும் தீர்த்தான். ஆயினும் அரக்கன் யுத்தத்தை நிறுத்தவில்லை. முண்டமான கால்களைக் கொண்டே யுத்த களத்தில் நாலாபுறமும் சென்று வானரர்களை வாயால் விழுங்கிக் கொண்டு வந்தான்.

கடைசியாக ராமன் தன் வில்லை வளைத்து, ஒரு அம்பு செலுத்தி, அரக்கனுடைய தலையை அறுத்துத் தள்ளினான். அறுக்கப்பட்ட தலை இராமன் செலுத்திய சரத்தின் வேகத்தால் ஆகாயத்தில் கிளம்பி லங்கா நகரத்தில் ஒரு மலை விழுவது போல் ஜ்வாலையுடன் விழுந்தது.



* * *

"**கா**லாந்தகனைப் போன்ற உமது தம்பி கும்பகர்ணன் உத்தம லோகம் அடைந்து விட்டான். அனேக ஆயிரம் வானரர்களைக் கொன்று தின்று வெகுநேரம் ராமலக்ஷ்மணர்களுடைய வானர சேனையைத் தத்தளிக்கச் செய்தான். பிறகு ராமனுடைய சரத்துக்கு இரையானான். அவனுடைய தேகம், புஜங்களும் கால்களும் அறுபட்டு விகாரமடைந்து, காட்டுத் தீயால் எரிபட்ட ஒரு மகா விருக்ஷத்தைப் போல்கிடக்கிறது. வெட்டுண்ட அவன் தேகத்தின் துண்டுகள் பாதி கடலில் விழுந்தும் பாதி கோட்டை வாசலை ஒரு மலைபோல் அடைத்துக்



கொண்டு பிருக்கின்றன. தலை அறு பட்டு ஆகாய மார்க்கமாக லங்கையில் விழுந்தது. தங்களுடைய அன்புக்குரிய சகோதரன் வீர சுவர்க்கம் அடைந்து விட்டான்.”

இவ்வாறு ராக்ஷசர்கள் ராவணனிடம் தெரிவித்த போது தன் உயிரே போய்விட்டதாக எண்ணினான் ராவணன். சோகத்தால் நினைவு இழந்தான்.

பிறகு பிரக்ஞை வந்த பின் “ஹா வீரனே! எல்லையற்ற பலவானே! என்னைத் தனியாக விட்டுவிட்டு யமலோகம் சென்றாயே! என் வலது கை வெட்டுண்டது! எந்தச் சத்துருவும் கிட்ட நெருங்க முடியாதிருந்த நீ ராமனால் கொல்லப்பட்டாயா? வானத்தில் தேவர்கள் சந்தோஷப்படுவதைக் காண்கிறேன். வானரர்கள் ஆனந்தக் கூத்து ஆடுகிறார்கள். இனி இந்த ராஜ்யம் எனக்கு என்னத்துக்கு? என் அருமைத் தம்பி போனபின் என் உயிரை நான் எதற்காக வைத்திருக்க வேண்டும்? தம்பியைக் கொன்ற ராமனை நான் சித்திரவதை செய்ய வேண்டும்” என்று துக்கமும் ரோஷமும் மேலிட்டுக் கதறினான்.

மீண்டும் “ஐயோ! விபீஷணன் வார்த்தையைக் கேளாமற் போனேனே!” என்று பிரலாபித்தான்.

திரிசிரன் முதலிய மக்கள்மார் ராவணனைத் தேற்றினார்கள். “பிரலாபிப்பதில் ஒரு பயனுமில்லை. பிரம்மாவிடம் சக்தியும் கவசமும் வில்லும் பாணங்களும் கிடைத்திருக்க ஏன் மனத்தளர்ச்சி அடைகிறீர்?” என்று சொல்லித் தேற்றினார்கள். திரிசிரன் யுத்தத்துக்குப் புறப்பட்டான். “நான் முந்தி” “நான் முந்தி” என்று வேறு பலரும் யானை மேலும் ரதங்களில் ஏறியும் திரிசிரனைத் தொடர்ந்து சென்றார்கள்.

* * *

பெரும் யுத்தம் நடந்தது. நராந்தகன் ஒரு குதிரையின் மீது ஈட்டி எடுத்துக் கொண்டு வானர சேனையைத் திணறச் செய்தான். சுக்ரீவனையே நோக்கிச் சென்ற நராந்தகனை அங்கதன் ஆயுதமின்றி எதிர்த்து, அவன் குதிரையையும் அவனையும் கொன்று வீழ்த்தினான்.

இப்படியே தேவாந்தகனும் திரிசிரஸும் மாருதியாலும் மகோதரன் நீலனாலும் கொல்லப்பட்டார்கள். அதிகாயன் லக்ஷ்மணனுடைய அஸ்திரத்திற்கு இரையானான்.

இந்த நால்வரும் நான்கு யமன்களைப் போல் கோர யுத்தம் செய்து வானரப் படைக்குப் பெருஞ் சேதம் இழைத்த பின்னரே மாண்டார்கள்.

அதிகாயனும் மாண்டான் என்று அறிந்ததும் ராவணன் மனம் கலங்கிப் போனான்.

"என்ன ஆச்சரியம்! மலை போன்ற தேகங்களும் கடலைப் போன்ற கலங்கா தைரியமும் கொண்ட என் வீரர்கள் ஒருவர்பின் ஒருவராக இந்தச் சத்துருக்களால் மாண்டார்கள். இதுவரையில் தோல்வி என்பதை அறியாத என் சூரர்கள் எல்லாரும் இப்போது தோல்வியடைந்து வீழ்த்தப்பட்டார்கள். என் மகன் ஒப்பற்ற இந்திரஜித்து கட்டிய நாகபாசத்தையுங்கூட எப்படியோ தெறித்து விட்டு நிற்கிறார்கள். இந்த ராமனுடைய பராக்கிரமம் எனக்கு விளங்காத ஒரு விந்தையாக இருக்கிறது. இவன் நாராயணனே என்று எண்ணுகிறேன்."


இவ்வாறு ஆச்சரியப்பட்டும் கவலைப்பட்டும் யோசிக்கலானான். மனமுடைந்தான் என்றே சொல்லலாம்.

கோட்டைக்குள் சத்துருப்படை புகுவதற்கில்லாமல், முக்கியமாக அசோக வனத்துக்குள் சத்துருக்கள் நுழையாமலிருப்பதற்குத் தீவிர ஏற்பாடுகள் செய்துவிட்டு, அரமனைக்குள் தனனுகப் போய்ச் சேர்ந்தான்!

இலங்கைக்கு ஒரு நண்பர்

பாரத நாட்டு வர்த்தகப் பெருமக்களும், இலங்கை வர்த்தகர்களும் மகிழ்ச்சியடையக் கூடிய செய்தி சென்ற வாரம் வெளியாயிற்று. சென்னையில் ஏற்றுமதி இறக்குமதி பிரதம டிபுடி கண்ட்ரோலராக இருக்கும் ஸ்ரீ கே. ரங்கசாமி இலங்கையில் உள்ள இந்திய ஸ்தானீகராலயத்தின் வர்த்தகத் துறைக்குக் காரிய தரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரு கே. ரங்கசாமி தமது நீண்ட நாளைய அனுபவத்தில் வர்த்தக சமுதாயத்தின் கஷ்டசுகங்களை நன்கு உணர்ந்தவர். சுங்க இலாக்காவில் ஏற்றுமதி, இறக்குமதியாகும் பொருள்களின் மதிப்புப் போடும் அதிகாரியாகச் சேர்ந்தார். யுத்த காலத்தில் பொறுப்பான பதவியில் இருந்தார். பின்னர் கொச்சியில் ஏற்றுமதி, இறக்குமதி கண்ட்ரோலர் காரியாலயத்தைத் திறந்து வைத்துப் பணிபுரிந்தார். இப்படிப் பல முக்கியமான பதவிகள் வகித்து அனுபவமும் திறமையும் பெற்ற இவர் இப்பொழுது இலங்கைக்குச் செல்லுவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய காரியமாகும்.



பாரத நாட்டிலிருந்து பொருள்களை வாங்கும் முக்கியமான நாடுகளில் ஐந்தாவது ஸ்தானம் வகிக்கிறது இலங்கை. ஆண்டுக்குச் சுமார் இருபது கோடி ரூபாய் பெறுமானமுள்ள சாமான்களைப் பாரத நாடு இலங்கைக்கு ஏற்றுமதி செய்து வருகிறது.

அங்கு பாரத நாட்டின் ஏற்றுமதி வர்த்தகம் அதிகரிக்க நிறைய வாய்ப்பிருக்கிறது. பிஸ்கோத்துகள், மிட்டாய்கள், மின்சார சாமான்கள், எனுமல் பொருள்கள், தையல் மிஷின்கள், மருந்துகள், கார்களுக்குத் தேவைப்படும் பாட்டரிகள், ஆணிகள் இப்படி எத்தனையோ இலங்கைக்குத் தேவையிருக்கின்றன. அவற்றை அனுப்பி அதிக விலை வைக்காமல் நேர்மையும் தர்மமும் வியாபாரத் துறையில் கையாண்டால் இலங்கையில் நமது வர்த்தகம் பெருக வழியிருக்கிறது என்று அபிப்பிராயப்படுகிறார் திரு கே. ரங்கசாமி.

தற்சமயம் நாம் இலங்கையிலிருந்து நாலு கோடி ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் தான் வாங்குகிறோம். "இன்னும் சற்று அதிகமாகவே இலங்கையிலிருந்து, கொப்பரைத் தேங்காய் எண்ணெய், கோக்கோ, ரப்பர் முதலிய பொருள்களை இறக்குமதி செய்ய முயல வேண்டும். அதன்பயனாக இலங்கை இந்திய நட்பு உறுதிப்படும்" என்கிறார்.

இலங்கையில் தமிழ்நாட்டு லுங்கிகளுக்கு ஏக கிராக்கியிருக்கிறது. இலங்கை சர்க்கார் ஏகப்பட்ட தடைவிதிகள் விதித்திருக்கிறார்கள். அவற்றின் காரணமாகக் கைத்தறித் துணிகளும், பட்டுத் துணிகள், பனியன்கள் முதலியவையும் இலங்கையில் எளிதில் பிரவேசிக்க முடியாமலிருக்கின்றன.

இந்தப் பிரச்னைகளையெல்லாம் சமாளிக்க வேண்டிய பொறுப்பு திரு கே. ரங்கசாமி அவர்களைச் சேர்ந்திருக்கிறது. இவற்றையெல்லாம் வெற்றிகரமாகச் சமாளிக்கக்கூடிய திறமை அவருக்கு உண்டு. அவருக்கு இப்பொழுது ஐம்பத்தைந்து வயதாகிறது. ஆயினும் ஓர் இளைஞரின் உற்சாகமும் ஊக்கமும் நகைச் சுவையும் அவரிடம் மிளிர்கின்றன. அவரைப்போலவே அவருடைய மனைவியாரும் சமூக நல சேவைகளில் மிகவும் ஆர்வம் கொண்டுள்ளவர் என்பது அறிகிறோம்.

எனவே இந்தத் தம்பதிகளுடைய இலங்கை விஜயத்தின் பயனாக இந்திய-இலங்கை வர்த்தகமும் நட்புறவும் சிறந்து ஓங்கும் என்று இரு நாட்டினரும் நிச்சயம் எதிர்பார்க்கலாம்.



உங்கள் கூந்தலின் கவர்ச்சிகரமான சுருள்களை அப்படியே நிலைத்திருக்கச் செய்யுங்கள்



கூந்தலுக்கான டாம்கோவின் வாசனைத் தேங்காய் எண்ணெய் உங்களுடைய கேசத்தைக் கச்சிதமாகப் படிய வைக்கிறது. எனினும், உங்கள் கூந்தலின், இயற்கையாயமைந்த சுருள்களை அமுக்கி விடாமல், எடுத்துக் காட்டும் முறையில் மென்மையாயமைந்துள்ளது. மல்லிகை, ரோஜா, லெவண்டர் ஆகிய நறுமணங்கமழும் எண்ணெய் வகைகளிலிருந்து உங்களுக்குத் தேவையானதைக் கொள்ளலாம்.

25 வருஷங்களாக இந்தியாவின் மிகவும் விரும்பப்பட்ட கூந்தல் தைலம்.



வாரத்திற்கொருமுறை கூந்தலுக்கு டாம்கோவின் தேங்காய் எண்ணெய் ஷாம்பூவை உபயோகித்து ஸ்நானம் செய்யுங்கள். இதனால் உங்கள் கூந்தல் மிருதுவாய் இயற்கையான சுருள்களுடனிருக்க உதவும்.


டாம்கோ

கூந்தலுக்கான வாசனைத் தேங்காய் எண்ணெயும் ஷாம்பூவும்

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

வட இந்திய யாத்திரை 11





பிராயம் —

யந்திரங்கள் கதை சொல்லுமா!

பேஷாகச் சொல்லும்.

"அதெப்படிச் சொல்லும்!" என்று சந்தேகப் படுபவர்கள் சிலர் இருக்கலாம். அப்படிப் பட்டவர்களுடன் வாதாடிக்கொண்டு காலத்தைவிணுக்குவதில் பிரயோஜனமில்லை.

சில மாதங்களுக்கு முன்னுல், ஜூன் இருபதாம் தேதி டேராடூன் பூமி ஆராய்ச்சி நிலேயத்தில் நாங்கள் பார்த்த யந்திரங்கள் என்னென்னவோ அதிசயமான கதைகள் கூறின.

உலகிலேயே மிகப் பெரிய இமய மலேயின் சரித்திரத்தைப் பற்றி ஒரு நிருபர் கேட்டார்.

ஒரு யந்திரம் இமயமலேயின் கதையைக் கூறியது. வானத்தைத் தொடும் அதன் உயரத்தை அங்குலம் பிசகாமல் கணக்குச் சொல்லிற்று.

கடலின் விசித்திரக் கதையைத் தெரிந்துகொள்ள ஒரு நிருபர் ஆசைப்பட்டார்.

கடல் அலேகளின் வேகத்தையும், அதன் உயரத்தையும், அடிக்கடி மாறி மாறி அலேக்கும் அதிசயத்தைப் பற்றியும் ஒரு யந்திரம் பதில் சொல்லிற்று.

இரும்பினுலும், செம்பினுலும், கண்ணுடியினுலும் செய்து வைக்கப்பட்டிருந்த அதிசய யந்திரங்கள்தான் இப்படி நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் கூறின. விசித்திரமான பலப்பல கதைகளே எடுத்துக் கூறின. யந்திரங்களுக்கு உயிர் உண்டு என்பது மட்டுமல்ல; அது பேசும், கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லி உறவாடும், கதை சொல்லும் என்றெல்லாம் அந்த அதிசயமான பூமி ஆராய்ச்சி நிலேயத்தில் உள்ள நுணுக்கமான பல யந்திரங்களேப் பார்த்தபோது தெரிந்து கொண்டோம்.


யந்திரங்கள் பேசிக் கதை சொல்லும் அப்பேர்ப்பட்ட அதிசயமான இடத்துக்குப் போனதும் நாங்கள் கண்ட காட்சிகள் வர்ணிக்க முடியாதவை. ஏகாந்தமான இடத்தில் குளிர்ந்த நிழல் தரும் பெரிய மரங்கள் அடர்ந்த தோட்டத்துக்கு மத்தியில் கம்பீரமாகக் காட்சி தரும் பெரிய கட்டடங்களும், சிறு கட்டடங்களும் எங்களேப் பேசாமல் பேசி 'வாருங்கள்' 'வாருங்கள்' என்று வரவேற்பு கூறின.

அவைகளின் மௌன வரவேற்பை ஏற்றுக்கொண்டு அந்தக் கட்டடத்துக்கு உள்ளே செல்வோம்.

இந்த நிலேயத்துக்குள்ளும், நிலேயத்துக்கு வெளியிலும் அபூர்வமான பல யந்திரக் கருவிகள் இருக்கின்றன. கட்டடத்துக்குள் எல்லாம் பல நூதனக் கருவிகள். கட்டடத்தின் பின் கூடத்தில் எல்லாம் வரிசை வரிசையாகப் பல ஆராய்ச்சிக் கருவிகள், கட்டடத்தின் வெளியில் திரும்பிப் பார்க்கும் இடங்களில் எல்லாம் அதிசயமான யந்திரக் கருவிகள், பெரிய பிரம்மாண்டமான யந்திரக் கருவிகள், மிகச் சிறு நுட்பமான கருவிகள்.

அடாடா! அந்தக் கருவிகளில்தான் எத்தனே எத்தனே விதங்கள்! என்னென்ன மாதிரியான விவரிக்க முடியாத நூதன அற்புதங்கள்.

மலேயின் உயரத்தை, மனிதன் ஏறி எட்டிப் பிடிக்க முடியாத உயரத்தை அளந்து சொல்லும் அதிசயக் கருவிகள்; ஓயாமல் அலேக்கும் கடலின் அலேகளேக் கணக்கிடும் கருவிகள்; அதன் வேகம், உயரம், ஏன் அப்படி ஓயாமல் அலேக்கிறது என்ற அதிசயத்தைக் கணக்குப் பிசகாமல் கூறும் கருவிகள்; வானத்தில் உள்ள நட்சத்திரங்களின் போக்கைக் கண்டு பிடிக்கும் கருவிகள்; புயலின் வருகையை முன்கூட்டியே சொல்லும் கருவிகள்; சூரியகிரகணம், சந்திரகிரகணம் முதலியவைகளேக் கண்டுபிடித்துக் கூறும் கருவிகள்; உலகில்




யந்திரங்கள் சொன்ன கதை

உள்ள பல தேசங்களில், எந்த எந்த தேசங்களில் இப்பொழுது என்ன என்ன மணி என்பதைக் காட்டும் விந்தைக் கடிகாரம்; உலகத்தில் எந்த எந்த பாகத்தில் என்ன என்ன மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்ற விசித்திரத்தை விளக்கிக் கூறும் விஞ்ஞானக் கருவிகள்! தூரதிருஷ்டிக் கண்ணாடிகள். அதில்தான் எத்தனை எத்தனை மாதிரிகள்! விமானத்திலிருந்து புகைப் படம் பிடிக்கும் காமிரா. அதன் மூலமாக எடுத்த புகைப் படத்தை நம் கண் முன்னால் நேரில் பார்த்தால் எப்படித் தோன்றுமோ அதேபோல பல வர்ணங்களிலும் காட்டும் விநோதக் கண்ணாடிகள் எல்லாம் இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒரு அதிசய சாதனை; அற்புத விளக்கம். மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கு, ஆராய்ச்சித் திறனுக்கு அபூர்வமான எடுத்துக்காட்டு. ஒவ்வொரு யந்திரமும் பார்த்துப் பார்த்து வியக்க வேண்டிய அதிசயப் பொருள்தான்!

இந்த யந்திரங்களைப் பார்த்தவுடன் ஒவ்வொன்றையும் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய ஆவலில் எது எது கண்ணில் படுகிறதோ அங்கெல்லாம் சென்று இது என்ன, அது என்ன என்று கேட்கத் தோன்றியது. ஆனால் அப்படிக் கேட்க முடியவில்லை. பின்னால் அவர்களே விளக்கிக் கூறுவார்கள் என்று எண்ணி எங்களை அழைத்துச் சென்ற அதிகாரியின் பின்னாலேயே சென்றோம்.

விநோத யந்திரங்கள்

பல கட்டடங்களைத் தாண்டி, தோட்டத்தில் புகுந்து இரு புறமும் புஷ்பச் செடிகள் நிறைந்த சிறு பாதையின் வழியே சென்று அதிசய முறையில் அமைக்கப்பட்டுள்ள ஒரு சிறு கூடத்தை அடைந்தோம்.



பகீரதன்

அந்தக் கூடத்துக்குள் ஒரு யந்திரம், பலப் பல கடிகாரங்களை ஒரே பலகையில் அடித்து வைத்திருப்பது போல இருந்தது.

இந்த அதிசய யந்திரம்தான் கடல் அலைகளின் அளவைக் கண்டு பிடித்துக் கூறும் யந்திரம். சூரிய கிரணங்களினாலும், சந்திர கிரணங்களினாலும் ஏற்படும் மாறுதலுக்குத் தகுந்த வண்ணம் கடலில் அலைகள் வேகமாக அலைப்பதும், குறைவாக அடிப்பதும் நிகழ்கின்றன. அத்துடன் கடற்கரையை ஒட்டியுள்ள பூமியின் சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்ற வண்ணமும் கடலில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஆண்டுதோறும் ஒவ்வொரு கடற்கரைத் துறைமுகத்திலும் இது போன்ற யந்திரக் கருவியை வைத்துக் கடலின் தன்மையைக் கண்டு பிடிக்கிறார்கள். பிறகு அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய முயலுகிறார்கள்.

இந்த யந்திரங்கள் இல்லாத காலத்தில் இதைப் பற்றி யெல்லாம் தெரிந்து கொள்ளாமலா இருந்தார்கள்! அந்தக் காலத்திலும் நவீன யந்திர வசதிகளின் உதவி இல்லாமல் இதைக் கண்டு பிடித்துத்தான் வைத்திருந்தார்கள். பெரிய பெரிய வான சாஸ்திரிகள் நட்சத்திரங்களின் போக்கையும், இதர கிரகங்களின் நிலைமையையும் ஆராய்ந்து, தம் வாழ்நாளெல்லாம் ஓயாமல் பாடுபட்டு இது போன்ற முடிவுகளைத் தெரிந்து வந்தார்கள். ஆனால் அவர்கள் மறைந்ததும் அவர்களுடைய அறிவும் அநுபவமும் அவர்களுடனேயே மறைந்து வந்தன. இப்பொழுதோ எவ்வித சிரமமும் இல்லாமல் நவீன யந்திரங்களின் உதவியைக் கொண்டே வெகு சுலபமாகக் கண்டுபிடித்து வருகிறார்கள்.

சூயஸ் கால்வாயிலிருந்து, சிங்கப்பூர் வரையில் சுமார் முப்பத்திரண்டு துறைமுகங்களில் கடலின் நிலைமைகளைக் கண்டு பிடித்து அதன் தன்மையை அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆனாலும் இயற்கை எப்பொழுதும் ஒரே நிலையில் இருக்கும் விஷயம் இல்லையல்லவா! ஆகையால் இன்னமும் ஆண்டுதோறும் இயற்கையில் ஏற்படும் எதிர்பாராத மாறுதல்களைக் கண்டு பிடித்துக் கொண்டேதான் இருக்கிறார்கள்.

இந்த யந்திரத்தை அமைத்திருக்கும் முறை அதிசயமானது. பல நூற்றுக்கணக்கான சின்னஞ் சிறு சக்கரங்களால் அமைக்கப் பட்டது இந்த யந்திரம். இந்தச் சக்கரங்கள் இயற்கையில் ஏற்படும் சீதோஷ்ண மாறுதல்களுக்கு ஏற்ற வண்ணம் தானே இயங்குகின்றன. அதனால் அந்த அதிசய யந்திரம் வேலை செய்கிறது. அப்படி இயங்கும்போது இயற்கையில் என்னென்ன மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதை நிமிஷம் தவறாமல் ஒரு கடிதத்தில் குறித்து வருகிறது. கடிதத்தில் உள்ள கோட்டின் ஏற்ற இறக்கத்தைப் பார்த்துப் பல விஷயங்களை ஆராய்ச்சி நிபுணர்கள் புரிந்து கொள்கிறார்கள்.

இதுபோன்ற இரண்டு பெரிய யந்திரங்கள் இங்கு இருக்கின்றன. ஒன்று பழைமையானது. மற்றொன்று தற்கால முறைப்படி அமைக்கப் பட்டது. இந்த யந்திரங்களைக் கொண்டுதான் வானத்திலுள்ள நட்சத்திரங்களின் போக்கைத் தெரிந்து கொள்கிறார்கள். பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரத்தையும் இந்த யந்திரம் ஒரு அங்குலத்தில் நூற்றில் ஒரு பங்குகூட வித்தியாசம் இல்லாமல் அளந்து சொல்லும் தன்மை வாய்ந்ததாயிருக்கிறது.

இந்த யந்திரத்தில் அதிசயமான தூரதிருஷ்டிக் கண்ணாடி இருக்கிறது. ஒரு விநாடியில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட வித்தியாச மில்லாமல் காண்பிக்கும் அபூர்வமான கடிகாரம் இருக்கிறது. தந்தி இல்லாமல் செய்திகளைச் சேகரித்துக் குறிக்கும் யந்திரம் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்தின் தூரத்தை உடனே தெரிந்து கொள்ளும் அதிசயமான வசதியும் இதில் இருக்கிறது.

பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் எத்தனை எத்தனையோ கிரகங்கள் ஒன்றுடன் ஒன்று குறிப்பிட்ட தூரத்தில் தொங்கிச் சுழன்று கொண்டிருக்கின்றன. அப்படித் தொங்கிச் சுழலும் கிரகங்களையும், அதன் தூரங்களையும் கண்டு பிடித்து விட்டார்கள். ஆனாலும் அவைகள் ஏன் அப்படி இயங்குகின்றன என்ற உண்மையை இன்னமும் விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்க முடிய வில்லை. இந்த இடத்தில் தான் எவ்வளவோ மதிநுட்பமும், அறிவும் நிறைந்த விஞ்ஞானிகள் மனித சக்திக்கும் அப்பால், இயற்கையின் அதிசய சக்திக்கும் அப்பால், ஒரு தெய்வீக சக்தி உலகை இப்படி ஆட்டிப் படைத்து வருகிறது! அதுதான் ஆண்டவன் சக்தி! எல்லாம் ஆண்டவனின் திருவிளையாடல்தான் என்ற மறுக்க முடியாத உண்மையைத் தெரிந்து கொள்கிறார்கள். தங்கள் பகுத்தறிவின் மூலம் ஆண்டவனைக் கண்டு தலைவணங்குகிறார்கள்.

இந்தக் கடவுள் தத்துவத்தை நம் நாட்டுச் சித்தர்கள் எத்தனையோ காலத்துக்கு முன்னாலேயே கண்டுபிடித்து விட்டார்கள்.

குற்றாலக் குறவஞ்சி பாடிய திருகூட ராசப்பக் கவிராயர் அற்புதமாக இந்த உண்மையை விளக்கிப் பாடியிருக்கிறார். விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு கஷ்டப்படாமலே கண்டு பிடித்து அருமையாகப் பாடியிருக்கிறார்.

" சாட்டிநிற்கும் அண்டமெலாம்
சாட்டையிலாப் பம்பரம்போல்
ஆட்டுவிக்கும் குற்றாலந்து
அண்ணலார் !"

என்று மிகத் தெளிவாக மனம் உருகிப் பாடியிருக்கிறார்!

இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ தமிழ்ப் பாடல்கள் இருக்கின்றன. நவீன விஞ்ஞானக் கருத்துக்களை நட்சத்திரங்களின் அபூர்வ தத்துவத்தைக் கொண்டு கண்டு பிடித்து ஆராய்ந்து பாடிய பாடல்கள் பல இருக்கின்றன. பழங் காலத்து ஞானிகள் உண்மையை உணர்ந்து பாடியிருக்கிறார்கள்.

அந்தப் பாடல்களைப் பொருள் தெரிந்து ஆராய்ந்து பகுத்தறிவில் ஏற்றி அநுபவிக்கும் நாள் என்று வருமோ!


பூகம்பத்தைக் காட்டும் கருவி

இந்த அதிசயக் கருவிகளிலிருந்து தெரிந்து கொள்ளும் விஷயங்கள் தேசப் படங்கள் தயாரிக்கப் பெரிதும் உதவிபுரிகின்றன. இந்தக் கருவிகளின் துணையால்தான் தேசப் படத்தைக் குறையில்லாமல் தயாரிக்க முடிகிறது.

இப்படி அனேக விசித்திரமான யந்திரங்களைப் பழுது பார்க்கும் தொழிற்சாலை ஒன்றும் அங்கு இருக்கிறது. மனித உயிர்களைவிட நுட்பமான யந்திரங்களைப் பழுது பார்க்கும் வசதிகளைக்கொண்ட விலை மதிப்பிட முடியாத அபூர்வமான தொழிற்சாலை அது.

இப்படிப் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டிருந்த போது "பூகம்பம், எரிமலையின் குமுறல் முதலியவைகளை முன்னதாகவே கண்டு பிடிக்கும் யந்திரம் எங்கிருக்கிறது?" என்று கேட்டார் ஒரு நிருபர்.

அந்த யந்திரம் இருக்கும் இடத்துக்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். யந்திரம் என்றால் ஏதோ பல பல சக்கரங்களும், இன்னும் சில சாமான்களும் கொண்டதாக இருக்கும் என்று எண்ணிய நாங்கள் அதைப் பார்த்ததும் ஏமாந்து போனோம்.



மேலே : விமானப் படங்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்யும் அதிசய யந்திரம். கீழே : தேசப் படங்கள் தயாரிக்கும் காரியாலயத்தின் கம்பீரமான தோற்றம்.

சிறிய குன்றின் மத்தியில் ஒரு கம்பம் நிற்கிறது. அந்தக் கம்பத்தில்தான் ஏதோ அதிசய முறையைக் கையாண்டிருக்கிறார்கள். அந்தக் கம்பத்திலிருந்து ஒரு கம்பியைக் கொண்டுபோய் அருகில் உள்ள கட்டடத்துக்குள் இருக்கும் ஒரு யந்திரத்துடன் இணைத்திருக்கிறார்கள். இந்த யந்திரத்தில் உள்ள கடிதத்தில் அந்தக் கம்பி ஏதோ ஏற்றம் இறக்கமாகக் கோடுகள் போட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தக் கோடுகளைக் கொண்டுதான் அந்த இடத்தில் இருந்து இத்தனை மைல் தூரத்துக்கு அப்பால் எந்த இடத்தில் பூகம்பம் ஏற்படப் போகிறது, எரிமலை வெடிக்கப் போகிறது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு விடுகிறார்கள்.

அதாவது இயற்கையில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ற வண்ணம் குன்றின்மீதுள்ள அந்தத் தூணில் அவ்வப்பொழுது அசைவுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த அசைவுகளைத்தான் இன்னொரு யந்திரத்தின் மூலம் தெரிந்து கொள்கிறார்கள். பூமி அதிர்ச்சியோ, எரிமலையோ ஏற்படுவதாயிருந்தால் அந்தக் கம்பத்தில் அதற்கு ஏற்றாற்போல் அசைவுகள் உண்டாகும். அதைக் கொண்டு வெகு சுலபமாகப் பூமி அதிர்ச்சி ஏற்படும் இடத்தைக் கண்டுபிடித்து அங்குள்ள மக்களை வெளியேற்றி விடுவார்கள். ஆகா! எவ்வளவு அபாரமான விஞ்ஞான சாதனை!

இந்த அதிசய இயந்திரங்களை எல்லாம் நேரில் பார்த்ததும், "சுதந்திர சர்க்கார் என்னென்ன சாதனைகளை யெல்லாம் மிகுந்த கவனத்துடன் செய்யவேண்டியிருக்கிறது!" என்று எண்ணத் தோன்றியது.

இங்கு ஒரு கண்காட்சியும் இருக்கிறது. அதில் பல அபூர்வ விஞ்ஞான யந்திரக் கருவிகளைச் சேர்த்து வைத்திருக்கிறார்கள். நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னால் இந்த நவீனக் கருவிகள் எப்படி இருந்தன! இப்பொழுது அவை எப்படி வளர்ச்சி அடைந்திருக்கின்றன என்பதை அங்குள்ள யந்திரக் கருவிகளைப் பார்த்துத் தெரிந்து கொள்ள முடிந்தது.

நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னால் பெரிய வண்டியில் ஏற்றிக் கொண்டு செல்லும் அளவுக்குப் பெரிதாக இருந்த யந்திரக் கருவிகள், ஆராய்ச்சி யந்திரங்கள் இப்பொழுது சட்டைப் பையில் போட்டுக்கொண்டு செல்லும் அளவுக்குச் சின்னதாக மாறியிருக்கும் அதிசயத்தைப் பார்த்தோம்.

முதன் முதலில் இமயமலையின் உயரத்தைக் கண்டுபிடித்து வெளியிட்டானே எவரெஸ்டு என்னும் பூமி ஆராய்ச்சி நிபுணன், அவன் உபயோகித்த மலைகளின் உயரத்தைக் கண்டுபிடிக்கும் விஞ்ஞான யந்திரக் கருவியும் இங்கு உள்ள கண்காட்சியில் இருக்கிறது.

மேற்கூறிய யந்திரக் கருவிகளையும், அதைக் கொண்டு ஆராய்ச்சி செய்யும் நிலையத்தையும்

கண்காட்சியையும் தவிர, இன்னுமொரு அபூர்வமான பயிற்சிக் கழகமும் அங்கு இருக்கிறது.

விமான போட்டோ கழகம்

கங்கையிலும், பிரமபுத்திரா நதியிலும் அடிக்கடி வெள்ளம் பெருக்கெடுத்து வருவதும் அதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவதிப்படுவதும், பல லட்சக்கணக்கான சொத்துக்கள் நாசமடைந்து வருவதையும் நேயர்கள் பத்திரிகைகளில் படித்திருப்பார்கள். அந்த வெள்ள நிவாரணத்துக்காக வென்றே, அதை எப்படிக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காகவே விமானத்திலிருந்து பூமியைப் படம் பிடித்து ஆராய்ச்சி செய்யும் பயிற்சிப் பள்ளி ஒன்று இங்கு ஆரம்பித்திருக்கிறார்கள். வெள்ளத்தை எப்படித் தடுப்பது! வெள்ளம் வந்த போது எப்படி விமானத்திலிருந்து படம் பிடிப்பது! அப்படிப் பிடித்த படத்தைக் கொண்டு எப்படி ஆராய்ச்சி செய்வது என்ற விவரங்கள் எல்லாம் இந்தப் பள்ளியில் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

இந்தப் பள்ளி 1954-ம் ஆண்டுதான் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பள்ளிக்கூடத்தில் விமானத்தில் இருந்தபடியே படம் எடுக்கும் அதிசயமான காமிராக்கள், அதாவது புகைப் படம் எடுக்கும் கருவிகள் இருக்கின்றன. இந்த விமானக் காமிரா அமெரிக்காவினால் நமக்கு அளிக்கப்பட்டது. அந்தக் காமிராவுடன் கொலன் கேகன் என்ற விமானப் படம் எடுக்கும் நிபுணரையும் அனுப்பி வைத்தனர். அவர் டேராடூனில் பதினெட்டு மாதங்கள் தங்கி யிருந்து விமானப் படம் எடுக்கும் காமிராவைக் கையாளும் முறையையும், அதில் இருந்து எடுத்த படத்தை வைத்துக் கொண்டு எப்படி ஆராய்ச்சி செய்வது என்பதைப் பற்றியும் பல இந்தியர்களுக்குப் பயிற்சி அளித்து விட்டுப் போய் விட்டார்.

இந்தப் பள்ளியில் ராணுவ இன்ஜினீயர்களையும், சாதாரண அதிகாரிகளையும் மாணவர்களையும் சேர்த்துக் கொண்டு பயிற்சி அளிக்கிறார்கள். இரண்டு ஆண்டுகள் பயிற்சி அளித்துப் பட்டம் கொடுக்கப்படுகிறது.

விமானத்தில் இருந்தபடி ஒரு மைல் சுற்றளவை ஒரு அங்குல அளவுக்கு வைத்துக் கூடப் படம் எடுத்து விடலாம். பிறகு அந்தப் படத்தை அதற்கென்று இருக்கும் இன்னொரு அதிசய யந்திரத்தில் வைத்தால் அது அந்த ஒரு மைல் சுற்றளவில் என்னென்ன இருக்கின்றன என்பவைகளை யெல்லாம் காட்டி விடுகிறது. மலையிருந்தால் அதன் உயரம் என்ன! ஆறு இருந்தால் அதன் ஆழம் என்ன! நகரங்கள் இருந்தால் அதில் உள்ள வீடுகள், பெரிய கட்டடங்கள் எல்லாவற்றையும் விவரமாக விளக்கிக் காட்டி விடுகின்றது.

இந்த யந்திரத்தைச் சம சீதோஷ்ண நிலையில் குளிர்ச்சிச் சாதனங்களுடன் கூடிய விசேஷ அறையில் வைத்திருக்கிறார்கள். அதில் விமானக் காமிராவின் மூலம் எடுத்த படத்தை வைத்துப் பார்த்தால் விமானத்தில் உட்கார்ந்து கொண்டு கீழே பார்த்தால் எப்படி இருக்குமோ அதே போலத் தெரிகிறது.

இந்தக் காமிராவும், அதைக் கொண்டு எடுக்கும் படங்களும் தேசப் படங்கள் தயாரிப்பதற்கு மிகவும் உபயோகமாயிருக்கும்.

நாங்கள் இந்த அதிசய யந்திரங்களின் ஆராய்ச்சிகளைப் பார்த்து வியந்து மகிழ்ந்ததுடன் ஒரு உண்மையையும் தெரிந்து கொண்டோம். சுதந்திர பாரத நாட்டில், எத்தனையோ இயற்கை வளம் கொண்ட இந்திய நாட்டில், நீண்ட கடற்கரையையும், பெரிய மலையையும் கொண்ட தேசத்தில் இந்தத் துறையில் இன்னும் எவ்வளவோ தூரம் முன்னுக்கு வரப் பாடுபட வேண்டும். இது போன்ற பூமி ஆராய்ச்சித் துறையில் இன்னும் பல நிபுணர்களும், ஆராய்ச்சியாளர்களும் பெருக வேண்டும். இப்பொழுது உண்மையாகத் தேசத் தொண்டு செய்வதற்குச் சிறந்த வழி இது போன்ற ஆராய்ச்சித் துறைகளில் ஈடுபட்டு நாட்டை முன்னுக்குக் கொண்டுவரப் பாடுபட வேண்டியதுதான்!

இன்னும் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் பார்க்க வேண்டிய அதிசயங்கள் அனேகம் இருக்கின்றன. பூமி மட்டத்தைத் தெரிந்து கொள்ளும் கருவி, வெகு தூரத்தில் உள்ள பொருளை அங்கிருந்தபடியே பார்த்து அதன் உயரம், அகலம், கனம் முதலியவைகளைக் கணக்கெடுக்கும் கருவி முதலியவைகள் இருக்கின்றன. இதுபோன்ற கருவிகளைப் பார்த்துக்கொண்டே சென்றால் பழைய காலத்தில் வான ஆராய்ச்சி செய்த கருவிகளையும் பார்க்கலாம். நாம் கவனிக்கா விட்டாலும் அது நம் கண்களில் படும். "அது என்ன!" என்று கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் நகர முடியாது.

மற்றும் ஆங்காங்கு இருக்கும் விதம் விதமான மழை அளக்கும் கருவிகள், காலத்தைக் கணக்கெடுக்கும் பல மாதிரியான கருவிகள், அவைகள் படிப்படியாக வளர்ந்து முன்னேறி யிருக்கும் அதிசயம் எல்லாவற்றையும் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

டேராடூனில் அந்த நிலையத்தைச் சுற்றி வந்த போதெல்லாம் உலகத்து ஆராய்ச்சியாளர்களைப் பற்றித்தான் பெரும்பாலும் பேசிக் கொண்டிருந்தோம். இந்த யந்திரங்கள் எல்லாம், இரும்பு, செம்பு முதலியவைகளைக் கொண்டு செய்யப்பட்டவைதான். அப்படியிருந்தாலும், உயிரற்ற, ரஸமற்ற வெறும் உலோகங்களைக் கொண்டு இவ்வளவு அற்புதமான ஆராய்ச்சி யந்திரங்கள் செய்வதற்கு எத்தனை பூமி ஆராய்ச்சி நிபுணர்கள், எவ்வளவு நீண்டகாலம் வேலை செய்திருக்க வேண்டும் என்று நினைக்கும் போது நமக்கு மயிர்க் கூச்சல் உண்டாகாமல் இராது. பயன் கருதாமல் தொண்டாற்றிய அந்தப் பெரியார்களுக்கு ஒரு வணக்கம் செலுத்தி விட்டு அந்த அபூர்வ ஆராய்ச்சி நிலையத்திலிருந்து கிளம்பினோம்.

* * *


இந்த மாதிரி அதிசயங்களை எல்லாம் பார்த்த பிறகு "டேராடூனில் இதைக் காட்டிலும் பெரிய அதிசயம் என்ன இருக்கப் போகிறது" என்றுதான் எண்ணத் தோன்றியது. அது எவ்வளவு தவறான எண்ணம் என்பதை மத்தியானம் வன ஆராய்ச்சிக் கழகத்துக்குள் சென்றபோது தெரிந்து கொள்ள முடிந்தது.

அவ்விதம் தேசப் படங்கள் தயாரிக்கும் அதிசயத்தையும், பூமி ஆராய்ச்சி நிலையத்தையும் தோற்கடித்த அற்புதங்களை அடுத்த இதழில் பார்ப்போம். (தொடரும்)

கால்கேட் குளோரோபில்*

ஈறுகளை பலப்படுத்துகிறது

வைத்திய சோதனை நிரூபிக்கிறது!



ஈறுகளைப் பலப்படுத்து கிறது!

வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது!

சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது!

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை வழக்கமாகத் தேய்ப்பதால், குளோரோபில் மூலம் அது ஈறுகளைப் பலப்படுத்துகிறது.

வேறு சாதாரண பற்பசையை விட மிகமிகத் தீவிரமாகவாய்நாற்றத்தை கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஒழிக்கிறது என்பது ருசுவான உண்மை.

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொருமுறையும், சாப்பிட்டவுடன் தேய்ப்பதால் பல் எனாமலை அரிக்கும் நாச அமிலங்களும், அவற்றை விளைவிக்கும் கிருமிகளும் குறைகின்றன!

வேறு எந்த பற்பசையிலும் இதைவிட வீரிய குளோரோபில் இல்லை

குழந்தைகள் விரும்பும் மதுரமான சுவை. மதுரமான இனிய சுவையுள்ள கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை குழந்தைகள்கூட விரும்புவார்கள்.



குளோரோபில் டூத்பேஸ்டின் பூரண நன்மைகளைத்தரும் விசேஷ கால்கேட் சூத்திரம்!

* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.

CTPA/G/5

காலத்தில் செய்த உதவி



"சுகி"

" கைதிக் கூண்டில் நிற்பவரை உமக்குத் தெரியுமா !"

"தெரியும்" என்றார் நல்லசாமி. அவர் நின்ற இடம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் சாட்சிக் கூண்டு.

"எப்படித் தெரியும் !"

"இவர் எனக்கு வேண்டியவர்; பக்கத்து வீட்டுக்காரர். மில் முதலாளியின் மோட்டாரை ஓட்டுபவர்."

"இவருக்கு முன்பு ஒரு தடவை ஜாமீன் கொடுத்திருப்பது உமக்கு நினைவிருக்கிறதா !"

"இருக்கிறது. நன்னடத்தை ஜாமீன் கொடுத்தேன்."

"கொடுத்தது நன்றாக நினைவிருக்கிறது. சரி! இப்போது இவர் குற்றவாளி என்று தீர்ப்பாகியிருக்கிறது. அதாவது அவர் புதிய குற்றம் செய்து விட்டார். தண்டனையை எதிர்பார்த்து நிற்கிறார். இதற்கு உம்முடைய பதில் என்ன!"

"எனக்கு ஒன்றும் விளங்கவில்லை."

"தகாத நபருக்கு நீர் ஜாமீன் கொடுத்ததற்காக உமக்கு நூறு ரூபாய் அபராதம்; அல்லது ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை."

ஜாமீன் கொடுத்தவர் வெல வெலத்துப் போனார். தாம் செய்த நன்மைக்குப் பலன் கிடைத்து விட்டது. நண்பன் என்ற முறையில் அல்ல, தன் மனைவியின் தொல்லைக்கு உட்பட்டு அவர் ஜாமீன் கொடுத்தார். அவர் மனைவியோ குற்றவாளியின் இளம் மனைவியின் கண்ணீரில் கனிந்து அவரைத் தொல்லைப் படுத்தினள். ஆகவே தண்டனையடையவிருந்த நண்பனை ஜாமீன் கொடுத்துத் தண்டனையிலிருந்து மீட்டுக்கொண்டு போனார் பெரியவர். இன்று, அதற்குப் பலன் கிடைத்து விட்டது. தம்முடைய மனைவியின் பேச்சைக் கேட்டது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்று அவருக்குத் தெரிய வந்தது. தமக்கு சம்மன் சாதரா செய்யப்பட்டபோது, ஆசாமியைப் பற்றி விசாரிப்பார்கள்; தம்மை விட்டு விடுவார்கள் என்று எண்ணினார்.

மாஜிஸ்டிரேட், "எதை ஒப்புக் கொள்ளுகிறீர்! அபராதம் நூறு ரூபாய் ஒப்புக் கொள்ளுகிறீரா! அல்லது ஆறு மாதம் கடுங்காவலை ஒப்புக்கொள்ளுகிறீரா!" என்று கடுமையாகக் கேட்டார்.

"ஒரு வாரம் அவகாசம் கொடுங்கள். பதில் சொல்லுகிறேன்" என்றார் ஐம்பது வயதைத் தாண்டிய பலசரக்குக் கடை ஏழைக் குமாஸ்தா நல்லசாமி.

"பணம் கட்டும் நோக்கம் இருந்தால், அவகாசம் கேட்கலாம். ஆறுமாதம் தண்டனைக்கு உட்படும் நோக்கம் இருந்தால் அவகாசம் கிடையாது" என்று சொன்னார் மாஜிஸ்டிரேட்.

"...அபராதம்... கட்டிவிடுகிறேன்" என்று நல்லசாமி நடுங்கும் குரலில் பதில் அளித்தார்.

விசாரணைக் கூண்டிலிருந்து இறங்கியபோது, கைதிக் கூண்டிலே நின்ற குமரேசத்தை எரித்து விடுபவர் போலப் பார்த்தார் நல்லசாமி. ஏதோ கண்ஜாடை காட்டினான், குமரேசம். அதை அவர் புரிந்து கொள்ளும் அமைதியான மனத்தோடு இல்லையே!

கைதியைப் போலீஸ் வண்டியில் ஏற்றப் போகும் சமயம், அவன் தொலைவில் வேப்ப மரத்தடியில் சிந்தனையோடு நின்ற, நல்லசாமியை நோக்கி "ஒன்றுக்கும் கவலைப்படாதே, பெரியவரே! கடவுள் நல்லதைச் செய்வாரு" என்று சொல்லிக்கொண்டு போனான்.

நல்லசாமி காதிலே என்னமோ விழுந்தது. ஆனால், அவன் என்ன சொன்னான் என்று வார்த்தை தெளிவாக விழவில்லை. ரூபாய் நூறு அபராதத் தொகையைத் தம்முடைய கடை முதலாளி கொடுப்பார் என்று எண்ணமிட்டபடியே கடையை நோக்கிப் போனார்.

"ஏனப்பா ஒருநாள் லீவு எடுத்தவன் அரை நாளிலே வந்தா என்ன செய்யறது! நாளைக் காலையிலே வந்தாப்போதும்" என்று சொல்லி விட்டார் பலசரக்குக் கடை முதலாளி. குமரேசம் என்ற பக்கத்து வீட்டுக்காரனுக்கு ஜாமீன் கொடுத்ததைச் சொன்னபோது முதலாளி திட்டினார், அவர் சொல் பலித்து விட்டது. குமரேசம், மறுபடியும் போலீஸில் அகப்பட்டால் தெரியும் என்று முதலாளி சொன்னார். அதற்கு அர்த்தம் இப்போது தான் நல்லசாமிக்குத் தெரிய வந்தது. அரை நாள் லீவ் எடுத்ததைக் கூட ரத்துச் செய்யாத முதலாளியா அபராதத்திற்கு ரூபாய் நூறு கடன் கொடுக்கப் போகிறார்! நல்லசாமிக்குப் பித்துப் பிடித்தாற் போலிருந்தது. அவர் கோபம் மனைவியினிடம் திரும்பியது. மனைவியைக் கோபிக்க வீட்டை நோக்கிப் போனார்.

வீட்டுக்குள் அவருடைய மனைவி கைதி குமரேசத்தின் இளம் மனைவிக்கு ஆறுதல் சொன்னாள். ஓவெனக் கதறிய அந்தப் பெண்ணின் பரிதாபக் குரல், அவர் நெஞ்சத்திலே கோபத்தைத் தணித்துப் பச்சாத்தாபம் தந்தது. அவருக்கு இருந்த கோபமே போய் விட்டது. நல்லசாமி எரிந்து விழ இருந்தவர் அவிந்துபோன தணலாக உட்கார்ந்தார். அவர் வந்தது, திண்ணையில் அமர்ந்தது எதுவுமே வீட்டுக்குள்ளே இருந்த பெண்களுக்குத் தெரியாது.

"நீ அழாதே அம்மா, சின்னஞ்சிறுசு! உனக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். அவன் யோக்கியன் என்று நினைத்து எங்க வீட்டுக்காரங்களை அவனுக்கு ஜாமீன் கொடுக்கச் சொன்னேன்."

"இல்லேம்மா, நான் உங்களைத் தொந்தரவு செய்து ஜாமீன் கொடுக்கச் சொன்னேன். பெரியய்யாவும் கொடுத்து விட்டார்கள். இப்போதுதான் கோர்ட்டிலிருந்து வந்த ஒருத்தர் சொன்னார். 'அவருக்கு' ஒரு வருஷம் கடுங்காவலாம். உங்களவருக்குத் தண்டனை ஆறு மாசம் அல்லது அபராதம் நூறு ரூபாயாம்."

"சரி, இதற்காக நீ ஏன் அழவேண்டும்! உதவ வேண்டிய காரியத்தில் உதவினேம். உதவி செய்யாமல் இருந்தால் மனுஷ ஜன்மம் எடுத்துப் பயன் என்ன! உதவியை என்னவோ யாவது நல்லவனாக இருப்பான் என்று நினைத்தேன். உனக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை. நீயோ இவனை நம்பி வந்து விட்டாய்.



சேஷசாயி பிரதர்ஸ் ஸ்தாபனங்களின் விளம்பர அதிகாரி ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி அவர்களின் புதல்வி சௌ. பத்மினிக்கும், நேஷனல் ஆர்கைவ்ஸின், மைக்ரோ போட்டோகிராபிஸ்டும், மேற்படி ஸ்ரீ பார்த்தசாரதி அவர்களின் மருகருமான திரு ராமானுஜம், பி.எஸ்ஸிக்கும் திருச்சி கன்டோன்மெண்டில் சென்ற மாதம் 12ம் தேதி வெகு விமரிசையாக விவாகம் நடந்தது. வாழ்க ராமானுஜமும்—பத்மினி!

இனிமேல் உன் பாடு மிகவும் கஷ்டம். அவரிடம் உன்னை என் மகள்போல இங்கே வைத்துக் கொள்ளக் கேட்கப் போகிறேன். உன்னைக் காப்பாற்றுவது யார்!''

வெளியே திண்ணையில் இருந்த நல்லசாமி பாம்பை மிதித்தவர் போலாகி விட்டார். அபராதத் தொகைக்கு வழியில்லாதபடி அவர் திண்டாடும் போது பெண்ணை வைத்துக் காப்பாற்றவும் வேண்டுமா! பல்லைக் கடித்துக் கொண்டார்.

''இல்லேம்மா, எனக்கு ஆறு, குளம் இருக்கிறது. அந்தப் 'பையன்' பேச்சை நம்பி வந்து விட்டேன். நான் சாகப் போகிறேன். உங்களுக்குக் கொடுக்க இதுதான் இருக்கிறது'' என்று தாலியைக் கழற்ற ஆரம்பித்தாள்.

''என்ன பெண்ணடி நீ! தாலியைக் கொடுக்கிறேன் என்கிறாயே! குலதர்மத்துக்கே விரோதமாச்சே அந்தக் காரியம்!'' என்று கூறித் தடுத்தாள் நல்லசாமியின் மனைவி.

மனக் கலவரத்தோடு உள்ளே நுழைந்த நல்லசாமி தம் மனைவியைப் பார்த்தவாறே, ''பெரிய இடி நம் தலையில்விழுந்து விட்டது! நூறு ரூபாய் அபராதம், அல்லது ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை'' என்றார்.

''நீங்கள் ஒன்றும் பயப்பட வேண்டாம், தண்டனைக்குப் பணம் வந்துவிடும்'' என்றாள் அவர் மனைவி. நல்லசாமிக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போல இருந்தது.

''எனக்கு எல்லாம் குழப்பமாக இருக்கிறது. உன்னிடம் பேசவே பிடிக்கவில்லை. எக்கேடும் கெட்டுப் போ'' என்று மிகவும் அலுப்போடு திண்ணையில் வந்து அமர்ந்தார்.

கார் வரும் ஓசை கேட்டது. அந்தத் தெருவுக்குள் கார் வருவது அபூர்வம். பெரிய கார் உள்ளே நுழையவே சிரமப்பட்டு வந்து தெருக்கோடி நாலாவது வீட்டுக்கு முன்னால் நின்று விட்டது. அதிலே இருந்து இறங்கிய டிரைவர், ''குமரேசத்தின் வீடு எது!'' என்று கேட்டுக்கொண்டு வந்தார்.

பெரியவர் நல்லசாமி எழுந்து, ''என்ன வேணும்! எதிர் வீடுதான்'' என்றார்.

''இங்கே நல்லசாமி யார்!''

''நான்தான். என்ன வேணும்!''

''உங்க சம்சாரம் வீட்டிலே இருக்குதா!''

இந்தக் குரல் கேட்டு வந்தாள் அவர் மனைவி. ''நீங்கள்தான் மில் முதலாளி கார் டிரைவரா!'' என்று கேட்டாள்.

''ஆமாம், அம்மா. உங்களிடம் என்ன சொன்னார் குமரேசம்!''

''உங்களிடம் முதலாளி கொடுத்தனுப்பும் பணத்தை என்னை வாங்கிக் கொள்ளச் சொன்னார், குமரேசம்!''

டிரைவர் வீட்டுக்குள் வந்தார். ஒரு கவரை எடுத்து, ''இதிலே ஆயிரம் ரூபாய் இருக்குது. எடுத்துக் கொள்ளுங்கம்மா. அவர் பொஞ்சாதிக்கு ஆறுதல் சொல்லுங்க. உங்க வீட்டுக்காரர் நல்லசாமி கட்ட வேண்டிய அபராதத்தையும், இந்தப் பணத்திலிருந்து கட்டச் சொல்லுங்க. இன்னும் ஆயிரம் ரூபாய் எப்ப கேட்டாலும் மில் முதலாளி கொடுப்பாங்க. ஆனா, இது ரகசியமாக இருக்கட்டும்'' என்று பணத்தை எண்ணிக் கொடுத்தார் டிரைவர்.

நல்லசாமிக்குத் தலை சுற்றியது. டிரைவர் போய் விட்டார்.

''இந்தாங்க. கவலை எதுக்கு! அபராதப் பணத்தைக் கொண்டு போய் நாளையே கோர்ட்டிலே கட்டி விடுங்க'' என்று நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தாள் நல்லசாமியின் மனைவி.

''இதுவெல்லாம் என்ன!''

''நமக்குள்ளே ரகசியமாக இருக்கட்டும். இரண்டு மாசத்துக்கு முன்னாலே இந்தப் பொண்ணு புருஷன், ஒரு கேஸிலே அகப்பட்டான்! ஆனால் பாவம், அவன் ரொம்ப நல்லவன். அவன் கேஸிலே அகப்படல்லே! மில் முதலாளி செய்த குற்றத்தைத் தனதாக ஏற்றுக் கொண்டான், குமரேசம். மில்காரர் அகப்பட்டால் ஊர் உலகம் சிரிக்கும். மோட்டார் டிரைவர் குமரேசம் அகப்பட்டால் ஊருக்கும் உலகத்துக்கும் தெரியாது. முதற் குற்றம் செய்தவரும் அவனுடைய மில் முதலாளிதான். என்னிடம் சொல்லி அழுதாள். எனக்கும் இரக்கமாக இருந்தது. அவன் செய்யாத குற்றத்தையே ஒப்புக் கொள்ளும் போது, நாம் அவனுக்காக ஜாமீன் கொடுத்தால் என்ன! அதனால்தான் ஜாமீன் கொடுக்க உங்களை அனுப்பினேன். இப்போது ஜாமீன் கொடுத்தவருக்கு அபராதம் அல்லது தண்டனை வந்திருக்குது. முதலாளி சொன்னாராம், இனிமேல் தப்பிதமே தாம் செய்வதில்லையென்றும், இந்த ஒரு தடவையும் தன்னைக் காப்பாற்றும்படியும் அவன் காலிலே நிஜமாக விழுந்தாராம். குமரேசம் இரக்கமுள்ள பிள்ளை. இரக்கம் காட்டினவன் ஜெயிலுக்குப் போய்விட்டான். ஒருவருக்கு நல்ல காரியத்துக்காக நாம் உதவி செய்யலாம். நம்மாலே ஆன உதவி, இந்தப் பொண்ணைக் காப்பாற்ற வேண்டியது'' என்று சொல்லியபோது, நல்லசாமிக்குத் தம்மெதிரே நிற்பது கட்டிய மனைவியாகத் தெரியவில்லை; ஒரு தெய்வம் நின்று பேசுவதாகத் தெரிந்தது.

OK ஓ.கே வனஸ்பதி

ருசிகரமான உணவுகள் தயாரிக்க ஏற்றது.

ஏன் தெரியுமா ?

- அதிகமான போஷாக்குச் சக்தி அளிப்பதற்காக ஒவ்வொரு அவுன்ஸ் ஓ. கே. வனஸ்பதியிலும் 700 I. U. வைட்டமின் 'A' சேர்க்கப்பட்டிருக்கிறது.
- ஓ. கே. வனஸ்பதி 'ஏர்-டைட் லீவர் லிட்' டின்களில் பாக் செய்யப்படுகிறது. இதனால் கடைசி அவுன்ஸ் வரை 'ஓ. கே.' வனஸ்பதி புதுமை கெடாமலும், சுகாதாரமாகவும் இருக்கிறது.
- ஓ. கே. வனஸ்பதி கெடுதல் எதுவும் செய்யாத உணவுத் தயாரிப்பு சாதனம். ஏனென்றால் அது நயம் தாவர எண்ணெயிலிருந்து சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படுகிறது.
- காலியானதும், ஏர்-டைட் ஓ. கே. லீவர் லிட் டின்னை, உங்கள் அடுப்பங்கரையில் சுகாதாரமான முறையில் சாமான்களைப் பத்திரப்படுத்தி வைக்க உபயோகியுங்கள்.



¼. 1. 2. 5. & 10 பவுண்டு டின்களில் இப்பொழுது கிடைக்கிறது.



தயாரிப்பவர்கள்

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) லிமிடெட், மதராஸ்.

EP

சிவன் கீர்த்தனைகள்

ஸ்வர அமைப்பு: செம்மங்குடி சீனிவாச ஐயர்

கீர்த்தனம் 4. ராகம்: ஸாவேரி ஆதி தாளம்

பல்லவி

முருகா முழுமதி பழிக்கும்
அறுமுகா - முருந்தன் மருக (முருகா)

அனுபல்லவி

ஒருகால் சரவண பவாஎன்றோதும் மெய்
யன்பரையான வலியவரும் வேல் (முருகா)

சரணம்

உன் பெருமை புகழும் தரமோ—ஹர
ஹுமைபால பரமதயாளா - குற
மின் கலந்த குமரா குஹனே
சரண்யா ஸுப்ரம்ஹண்யா - திரு (முருகா)

ஸாவேரி ராகம் 15-வது மேளமாகிற மாயாமாளவ கௌளையில் பிறந்தது, உபாங்க ராகம்,

ஆரோஹணம்: ஸ ரி ம ப த ஸ்
அவரோஹணம்: ஸ் நி த ப ம க ரி ஸ

இந்த ராகத்தில் பதநிதபம என்று பிடிக்கும்பொழுது நிஷாத ஸ்தானம் சற்று குறைவாகவே பேசும். அதுபோல் ஸரிகரிஸ என்னுமிடத்தில் காந்தாரம் சற்றுக் குறைவாகவே பேசும். அந்தக் காரணங் கொண்டு இந்த ராகத்தை பாஷாங்கமென்று சில கிரந்தங்களில் கூறப் பட்டிருக்கிறது. அன்யஸ்வரம் தனித் தன்மையுடன் எந்த இடத்திலும் இந்த ராகத்தில் பேசப் படாததால் இதனை பாஷாங்க ராகமென்று சொல்வதற்கில்லை.

பல்லவி— 1 களை

	; ; ; ; ; ; ; ;	; ; ; ;	; ; பா தா	‖
			மு ரு	
1	ஸா ; ; ; ; ; மா பா	பா த ம கா ரி	ரி ஸ ரி மா பா	‖
	கா மு ழு	மதி - ப ழி	க்கும் அ - று மு	
	தா ; ; ; ; ; பத நி	பா பதா, பா	ப த த ம பா தா	‖
	கா மு - கு	- ந்தன் - ம	ரு - க - மு ரு	
2	ஸா, ரி கா ஸா ரி ; ம ப தா	ரி ஸ நி த ப ம க ரி	ரி ஸரி மா பா	‖
	கா - - - - மு - ழு	ம - தி - ப - ழி -	க்கும் அ - று மு	
	த பா த நி , ப தா ; தா ஸ் நி	பா ப தா , ப நி	த ப த ம மா பா	‖
	கா - - - - - மு கு -	- ந்தன் ம -	ரு - க - மு ரு	
3	ஸா, ரி கா ஸா ரி ; ப த ரி ஸ்	நி த ப ம ப த ப ம	கரி ஸரி மா பா	‖
	கா - - - - மு - ழு -	ம - தி - ப - ழி -	க்கும் அ - று மு	
	த நி நி ப தா ; ; ; த ரி ஸா	ரி ஸ்நிதா ப நி	த ப த ம த ப தா	‖
	கா - - - - மு - கு	- ந்தன் - ம -	ரு - க - மு - ரு	
	ஸா ; ; ; ; ; ; ;	; ; ; ;	; ; ; ;	‖
	கா			

அனுபல்லவி

	; ; ; ; ; ; ; ;	; ; ; ;	; ; ஸா ஸா	‖
			ஒ ரு	
1	ஸ் நிதா ; பா தா ஸா ஸா ஸா	ரி கா ரி ; ரி	ஸா ; தரி ஸா, ரி	‖
	கா - - ல் ச ர வ ண ப	வா - - எ	ன்றோ ஒ - ரு -	
2	ஸ் நி தா ; த ம தா ஸா ஸ்ரி ப்ம்	கா ; ரி ரி	ஸா ; ஸா தா	‖
	கா - - ல் ச - ர வ ண - ப -	வா - எ	ன்றோ தும் மெய்	

1 தா ரி ஸ்ா ஸ்ா ஸ் நி தா தா தரி ய - ன்ப ரை யா - - ள வ-	ஸ் நி தா பா ப த லி - ய வ ரு ம்-	நி த ப ம பா தா ‖ வே - - ல் மு ரு
ஸா ; ; ; ; ; ; ; கா	; ; ; ;	; ; ; ; ‖
; ; ; ; ; ; ; ;	; ; ; ;	; ; ; தா ‖ மெய்
2 தா க்ரி ஸ்ா ஸ்ரி ஸ் நி தா தா தரி ய ன் - - ப ரை - யா - - ள வ -	ஸ் நி தா பா த நி லி - ய வ ரு ம்-	த ப த ம பா தா ‖ வே - - ல் மு ரு
ஸ்ா ; ; ; ; ; ; ; கா	; ; ; ;	; ; ; ; ‖

சரணம்

1 பா ; ; தா பா ம ப ம க ரீ உன் பெ ருமை - பு - க	ரீ ; ஸா ரீ ழும் த ர	மா ; ; ; ‖ மோ
2 பா ; ; ம ப தா பா,த ப ம க ரி உன் பெ - ரு மை - பு - க -	ரீ ; ஸா ரீ ழும் த ர	மா ; பா தா ‖ மோ ஹ ர
மபாததபமா கா, ரி ரீ ; ஸா ரீ ஹு - மை . - - பா - லா ப ர	மா பா ப ம த ப ம த யா - - -	தா ; ஸ்ா ஸ்ா ‖ ளா கு ற
1 ஸ் நி தா தா ஸ்ா ; ஸ்ா ஸரி ப் ம் மி ன் - - க ல ந்த கு - ம -	க்ா , ரி ; ரி ரா - கு	ஸ்ா ; க்ரி, ஸ்ா ‖ ஹா கு - ற
2 ஸ் நி தா ப த ஸ்ா ; ஸ்ா ஸ் ரி ப் ம் மி ன் - - க - ல ந்த கு - ம -	க்ா , ரி தரி ஸ் ரி ரா - கு - ஹ	ரி ஸ் நி த தா தா ‖ நி - - . ள ச
தா ரி ஸ் ரி ; ; ஸரீ மா , ர - - ண்யா ஸ - ப்ரம்	ப ம த ப தா ; ம - - - ண்யா	நி த ப ம பா தா ‖ தி - ரு - மு ரு
ஸ்ா ; ; ; ; ; ; ; கா	; ; ; ;	; ; ; ; ‖

திருந்திய உள்ளம்



குழந்தை வஸந்தாவின் வாயிலிருந்த தர்மாமீட்டரை எடுத்துப் பார்த்தாள் காமு. ஜுரம் நூற்றிரண்டு டிகிரி இருந்தது.

அந்த ஜுரத்தின் சூடு தன் நெஞ்சையே நெருப்பாகச் சுட்டதுபோலிருந்தது காமுவுக்கு. அனலெனத் தகிக்கும் ஒரு துயரப் பெருமூச்சு அவளிடமிருந்து வெளிப்பட்டது.

நாளை பொழுது விடிந்தால் ஸரஸ்வதி பூஜை. அவளது அருமைக் கண்மணியாகிய வஸந்தா இந்த ஸரஸ்வதி பூஜையை வரவேற்பதற்காக எவ்வளவு குதூகலத்துடன் காத்துக் கொண்டிருந்தாள்! அந்த இளம் உள்ளத்தில்தான் என்னென்ன கற்பனைகள் பண்ணிக் கொண்டிருந்தாள்! புத்தம் புது பாவாடை அணிந்து புத்தகமும் பலகையுமாய். முதன் முதலாகத் தான் பள்ளிக்குச் செல்லப் போகும் அந்த வைபவத்தை எண்ணி எண்ணி மனத்திற்குள் எவ்வளவு இன்பம் அனுபவித்திருப்பாளோ குழந்தை! பாவம்! அந்தப் பிஞ்சு நெஞ்சின் பொற்கனவுகளெல்லாம் இப்படிப் பாலைவனத்தில் பெய்த மழை போல ஆகிவிட்டனவே!

நாளைக் காலையில் குழந்தை பள்ளிக்குச் செல்லும் நிலையிலா இருந்தாள்!

அதை எண்ணிய பொழுதே காமுவின் உள்ளம் தாங்கொணாத வேதனையை அடைந்தது.

நவராத்திரி ஆரம்பத்திலிருந்தே குழந்தைக்கு இலேசாக ஜுரம் இருந்து கொண்டேதானிருந்தது. அப்பொழுதே நன்றாகக் கவனித்திருக்க வேண்டும்:......கவனித்திருந்தால் இவ்வளவு தூரத்துக்கு வந்தே யிருக்காது.

ரகுராமனைக் கல்யாணம் செய்து கொண்டு சென்னையில் முதன் முதலாகக் குடித்தனம் ஆரம்பித்த பொழுது, இந்த உலகத்தில் உள்ள இன்பங்களுக் கெல்லாம் தானே அரசியாகி விட்டதாக எண்ணி மகிழ்ந்தாள் காமு.

ரோஜாவின் நடுவே முள் இருப்பது போல வாழ்க்கைச் செடியிலும் இன்ப மலர்களினிடையே துன்ப முட்களும் மலிந்திருக்கும் என்பதைக் காமு தனது முதல் குழந்தை தவறி விட்ட பொழுதுதான் உணர்ந்து கொண்டாள்.

வாழ்க்கையில் மனிதர்களுக்கு,— அதிலும் முக்கியமாகப் பெண்களுக்கு,—தங்களுக்கு ஏற்பட்ட முதல் அனுபவம் அப்படியே அழியாத உருவமாக மனத் திரையில் பதிந்து விடுகிறது. காமுவுக்கும் தனது முதல் குழந்தையின் மறைவு அவ்விதமே அழியாத வடுவென நெஞ்சில் பதிந்து விட்ட ஒரு துன்பச் சம்பவமாகும். ஊரிலிருந்த தாயார் வருவதற்கு முன்பே அவளுக்கு வேதனை கண்டு, ஆஸ்பத்திரியில், குழந்தை பிறந்து சில மணி நேரங்களில் இறந்து விட்டது. இத் துயர நிகழ்ச்சி அவளுக்கு ஒரு மறக்க முடியாத சம்பவமாகும்.

அவள் கணவன் கொஞ்சம் அக்கறையோடு இருந்திருந்தால் அவள் மனம் அந்தத் துக்கத்தைக்கூட மறந்திருக்கும். அவன் நல்லவன் தான். அவன் தன் மனைவியுடன் இல்லறம் நடத்தியதில் அவனை எந்தவிதத்திலும் குறை கூற முடியாது. ஆனால் ஒரே ஒரு கெட்ட குணம் மட்டும், அவனை அறியாமலேயே அவனிடம் படிந்து விட்டது.

அவன் நண்பர்கள் வந்து சேர்ந்து விட்டால் போதும்! தன்னை மறந்து சீட்டாட்டத்தில் ஈடுபட்டு விடுவான்!


அவனது இந்தச் சின்னஞ்சிறு அலட்சிய குணத்தினால் காமு பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல!......மற்றப் பொழுதில் எல்லாவற்றையும் அவள் சகித்துக் கொண்டாள். ஆனால் அன்று வேதனை கண்டு ஆஸ்பத்திரிக்கு அவள் புறப்பட வேண்டியிருந்த அந்த நேரத்திலும் அவன் சீட்டாட்டத்தை விட்டு வர மனமில்லாமல் தவித்ததானது, அவளுக்குச் சகிக்க முடியாததொரு துன்பமாகப் பட்டது.

அதைப் பற்றி அப்புறம் எத்தனையோ தடவை, அவனிடம் அவள் பேசியிருக்கிறாள்! தேனொழுக அவன் பதில் சொல்லுவதைப் பார்த்தால் இவனுமா அப்படி யிருந்திருப்பானென்று தோன்றும்! ஆனால் சீட்டாடச் சரியான சந்தர்ப்பம் கிடைத்தாலோ மீண்டும் வேதாளம் முருக்க மரம் ஏறிக் கொண்ட கதைதான்.

இப்படியாக அவனோடு அவளும் எட்டு வருஷங்கள் வாழ்ந்துவிட்டாள். ஐந்து வயதான வசந்தாவும் வயிற்றில் வளர்ந்து வரும் கண்மணியுமே அவளுடைய வாழ்க்கையின், மங்காத தீபஜோதிகள்.

குழந்தை வஸந்தாவின் நிலை உண்மையாகவே கவலைக்கிடமாயிருந்தது. காமு பதறி விட்டாள், தன் குழந்தையின் நிலையைக் கண்டு.

பம்பாய், அமால்கமேடட் கெமிகல்ஸ் அன்டு டைஸ்டஃவ்ஸ் கம்பெனியைச் சேர்ந்த திரு எம். வி. சந்திரன் பி. எஸ்ஸி. ஸ்விஸ் நாட்டில் பாஸ்லே நகரத்திலுள்ள J.R. Geigy S.A. யின் தொழிற்சாலையில் பயிற்சி பெறச் செப்டம்பர் மாதம் 27 ந் தேதி விமானம் மூலம் புறப் பட்டார். பிறகு அங் கிருந்து இங்கிலாந்து சென்று மான்செஸ்டர் நகரில் உள்ள Geigy தொழிற் சாலையிலும் பயிற்சி பெறுவார். அவர் பெறும் இந்த மேனாட்டுத் தொழிற் பயிற்சி இந்தியத் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் என்று நம்புகிறோம்.



அடுத்த வீட்டு அம்பியை அழைத்தாவது ஆபீஸிலிருக்கும் தன் கணவனுக்குச் செய்தி சொல்லியனுப்பலாம் என்று அவள் எழுந்து வாசல் பக்கம் வருவதற்கும், வாசலில் ஆபீஸ் பையன் வருவதற்கும்சரியாக இருந்தது.

"அம்மா! பிளாஸ்இலே காப்பியும் டிபனும் ஐயா வாங்கி வரச் சொன்னாங்க. ஐயா ராத்திரி வர நேரமாகும் என்று சொல்லச் சொன்னாங்க!" என்றான் அந்தப் பையன்.

கணவன் இருந்த நிலை காமுவுக்குப் புரிந்து விட்டது. அங்கே வசமாகச் சீட்டாட்டம் போட ஏற்பாடாகி விட்டது என்ற எண்ணம் அவள் உள்ளத்தைக் கலக்கியது.

"அப்பா தம்பி! குழந்தைக்கு ரொம்ப ஜுரம் அதிகமாக இருக்கிறது. நீ போய் ஐயாவைச் சீக்கிரம் வரச்சொல்லு! எனக்கே பயமாக இருக்கிறது" என்று கண்களில் நீர் ததும்பக் கைகளைப் பிசைந்து கொண்டு நின்ற காமுவைக் கண்டதும் ஆபீஸ் பியூன் "சரி அம்மா!" என்றபடியே சைக்கிளில் ஏறிச் சிட்டெனப் பறந்து விட்டான்.

கணவனின் வருகையே எதிர்நோக்கி யிருந்தாள் காமு. மணி ஏறிக்கொண்டே போயிற்று. ரகுராமன் வரும் வழியாக இல்லை. குழந்தை வஸந்தாவின் ஜுரமும் குறைவதாக இல்லை. நேர்மாறாக அதிகமே ஆயிற்று.

துடிக்கும் உள்ளத்துடன் காமு கடிகாரத்தைப் பார்த்தாள். மணி எட்டரை ஆகி விட்டது. இருட்டு வேளை! நிறைக் கர்ப்பிணி!

காமுவுக்கு வெறுப்பினால், எங்கிருந்தோ தைரியம் வந்து விட்டது. அக்கம் பக்கத்தாரிடம்கூட ஒரு வார்த்தை சொல்லவில்லை. வஸந்தாவைத் தோளில் சாத்திக் கொண்டாள். மணி பர்ஸை எடுத்துக் கொண்டு வாசற் கதவைப் பூட்டி விட்டு விடுவிடு வென டாக்டர் வீட்டை நோக்கி நடக்கலானாள்.

நல்லவேளை! டாக்டர் வீட்டிலிருந்தார். வஸந்தாவின் நிலையைக் கண்டதும் அவர் உண்மையாகவே பயந்து விட்டார். "ஜன்னி கண்ட இந்த நிலையிலுமா நீங்கள் குழந்தையை எடுத்துக் கொண்டு வர வேண்டும்! ரகுராமனை அனுப்பி விவரத்தைச் சொன்னால் போதாதா! நானே உங்கள் வீட்டுக்கு வந்திருப்பேனே!" என்றார் டாக்டர்.

காமு பதிலே பேச வில்லை. தன் உணர்ச்சிகளைச் சிரமப் பட்டு அடக்கிக் கொண்டாள்.

தன் மனைவியிடமிருந்து ஆவி பறக்கும் காப்பியையும் சிற்றுண்டியையும் எதிர்பார்த்திருந்த ரகுராமன், அவைகளுக்குப் பதிலாகப் பையன் சொன்ன செய்தியைக் கேட்டதும் சீற்றம் அடைந்தான்.

"குழந்தைக்கு என்ன கேடு! நான் மத்தியானம் வரும் பொழுது கூடச் சரியாகத்தானே இருந்தது! சாதாரணத் தலைவலி, ஜலதோஷம் என்று குழந்தைக்கு வந்து விட்டாலே போதும்! இந்தப் பெண்கள் நம்மைப் படுத்தி வைக்கும் பாட்டைச் சொல்லிமுடியாது" என்று அலட்சியமாகக் கூறிய அவன் சுவாரஸ்யமாக 'ஜாக்கி'யை இறக்கினான்.

ஆட்ட சுவாரஸ்யத்தில் நேரம் போனதே அவர்களுக்குத் தெரியவில்லை.

"மிஸ்டர் நாராயணன்! தந்தி!" என்று வாசலில் தந்திச் சேவகனின் குரல் கேட்டவுடன்தான் அனைவருக்கும் உணர்வு வந்தது.

நடுங்கும் கைகளுடன் தந்தியைப் பிரித்துப் படித்த நாராயணன், மறு கணம் தன்னையும் மறந்து "ஐயோ!" என்று அலறி விட்டான்.

இரண்டே மணிநேர விஷ ஜுரத்தில் சேகர் இறந்து விட்டான். உடன் வரவும்!

என்று ஊரிலிருந்த அவன் மனைவியிடமிருந்து வந்திருந்த தந்தி அது. உடனே மற்ற நண்பர்களும் ரகுராமனுமாக நாராயணனைச் சமாதானப்படுத்தி ரயிலேற்றி விட்டனர்.

ரகுராமனின் உள்ளத்தில் கிலி பிடித்துக் கொண்டு விட்டது. வஸந்தாவும் ஒரு வேளை... என்று எண்ணிய பொழுது அவனுக்கு உடல் நடுங்கியது. வெகு வேகமாகத் தன் வீட்டை நோக்கி நடந்தான்.

ஆனால்......அங்கோ!—

பூட்டியிருந்த கதவே அவனை வரவேற்றது. உடனே டாக்டர் வீட்டுக்கு ஓடினான்.

"என்ன மிஸ்டர் ரகுராமன்! நீங்கள் வீட்டிலிருந்து கொண்டா மனைவியை இந்த நிலையில் இங்கே அனுப்பினீர்கள்! சிகிச்சைக்குச் சற்றுத் தாமதம் ஆகியிருந்தாலும் குழந்தையை இந்நேரம் நாம் காண முடியாது" என்று குற்றம் சாட்டும் குரலில் கூறினார் டாக்டர்.

ரகுராமன் என்ன பதில் சொல்வதென்று தத்தளித்தான். அவன் ஏதோ சமாதானம் சொல்ல வாயெடுப்பதற்குமுன் "அவர் இரண்டு நாட்களாக ஊரிலேயே இல்லையே, டாக்டர். இப்பொழுதுதான் வந்திருக்கிறார் போலிருக்கிறது. அவருக்கு இந்த விவரமே தெரியாது!" என்று தானே முந்திக் கொண்டாள் காமு.

டாக்டருக்கு அவள் வார்த்தையில் நம்பிக்கை விழாமற் போகவே, ரகுராமனைத் திரும்பிப் பார்த்தார். ரகுராமன் தலை குனிந்தவண்ணம் நின்று கொண்டிருந்தான். காமுவின் பெருமையிலே கருத்தைச் செலவிட்ட அவனால் எப்படித் தலை நிமிர்த்து பார்க்க முடியும்!


தெம்பூட்டுகிறது,
மணமூட்டுகிறது!
மலரின் பனித்துளிகள் போல புதுமையையும், ரம்மிய மணத்தையும் உங்கள் மேனியில் பெய்கிறது எக்லா டால்க். குளித்தபின், உடை யணியுமுன் உடம்பில் எக்லா டால்கம் பவுடரைப் பூசுங்கள்.
வெப்ப நாளிலும் குளுமை, இதம் அளிப்பது எக்லா. அது வியர்வையை உறிஞ்சும். மெல்லிய எக்லா ஒரு லட்சிய முகப்பவுடரும் கூட.
கால்கேட்
எக்லா
டால்க்பவுடர்
ÉCLAT
TALC POWDER
COLGATE
இந்தியா விரும்பும் நறுமண டால்க்
EC/G/1

ஆற்றங்கரையினிலே



பேராசிரியர்:
ரா.பி.சேதுப்பிள்ளை

39. திருவாரூர் (தொடர்ச்சி)

தென்னாட்டில் எல்லையற்ற பெருமை வாய்ந்த நகரங்கள் தில்லையும் திருவாரூரும். தில்லையில் உள்ளது திருச்சிற்றம்பலம். திருவாரூரில் உள்ளது திருமூலட்டானம். 'கோயில்' என்ற பெயரைத் தனக்கே உரிய தாக்கிக் கொண்டது தில்லைச் சிற்றம்பலம். 'பூங்கோயில்' என்ற அழகிய பெயருக்கு உரியதாயிற்று திருமூலட்டானம்.

தில்லைத் திருக்கோயில் முந்தியதோ? திருவாரூர்ப் பூங்கோயில் முந்தியதோ? என்ற ஐயப்பாடு திருத் தொண்டர்கள் உள்ளத்தில் ஒருகால் எழுந்தது. "முன்னைப் பழம் பொருட்கும் முன்னவனாகிய" ஈசன் ஒருவனே இவ் ஐயத்தைத் தீர்க்க வல்லான் என்று கருதினார் திருநாவுக்கரசர்.

"மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை
மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ
அணிஆரூர் கோயிலாக் கொண்ட நாளே?"

என்று விடையிரந்து விண்ணப்பம் செய்தார்.

அந்நாளில் திருவாரூரில் நிகழ்ந்த திருவிழாக் காட்சிகளைத் தேவாரப் பாசுரங்களில் இனிய சொல்லோவியமாக எழுதிக் காட்டுகின்றார் திருநாவுக்கரசர். செக்கச் சிவந்த மேனியனாகிய ஆரூர்ப் பெருமான் அந்நகரில் ஆழித் தேரூர்ந்து செல்லும் அழகினைக் கண் குளிரக் கண்ட அவ் அடியார்,

"ஊழித்தீ அன்னானை
ஓங்கொலிமாப் பூண்டதோர்
ஆழித்தேர் வித்தகனை
நான்கண்டது ஆரூரே"
(ஓங்கொலிமா—மறைக் குதிரை)

என்று அகம் குளிர்ந்து பாடுகின்றார்.

ஆரூர்ப் பெருமானிடம் அயராத அன்பு பூண்ட அடியார்களுள் ஒருவர் சுந்தரமூர்த்தி. திருநாவலூரிலே பிறந்த சுந்தரர்க்கு 'நம்பிஆரூரன்' என்று பெயர் இட்டனர் அவர் பெற்றோர். அவரைத் திருமணப் பந்தரில் தடுத்து ஆட்கொண்டான் ஈசன். அன்று முதல் "பாடும் பணியே பணியாக்" கொண்ட நம்பி ஆரூரர், திருவாரூர்ப் பெருமானை நினைந்து உருகினார்; அவரை வணங்க ஆசையுற்றுப் புறப்பட்டார்.

வன்தொண்டர் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற நம்பி ஆரூரர் திருஆரூரை நோக்கி வருவதை அறிந்த நகர மாந்தர் அளவிறந்த ஆர்வம் உற்றனர். அவர் வருநாள் ஒரு திருநாள் எனக் கருதி வீதிகளில் பன்னீர் தெளித்தனர்; வீடுகளில் மலர் மாலை கட்டினர்; மேள தாளங்களோடு நகர முகப்பில் அவரை வரவேற்றனர்.

ஆரூரர் உள்ளத்தில் ஆனந்த வெள்ளம் பொங்கி எழுந்தது. "எந்தை இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வாரா, கேளீர்" என்ற சந்தத் தமிழ்ப் பாட்டிசைத்து அத் திருவீதியில் நடந்தார். அடியார் புடை சூழ ஆலயத்தின் உள்ளே சென்று, உச்சி மேற் கைகுவித்து "அடியேனை ஆட்கொண்ட ஐயனே! ஆரூரில் அமர்ந்த அருமணியே! உன் திருவடியே தஞ்சம்" என்று முறையிட்டுச் செஞ்சொற் பாமாலை பாடினார்.

இவ்வாறு நாள்தோறும் பூங்கோயிற் பெருமானை வழிபட்டு வருகையில், ஒருநாள் நலமெல்லாம் ஒருங்கே வாய்ந்த ஒரு நங்கையை அங்கே கண்டார்; அவள் பேரழகைக் கண்ணுற் பருகிக் களிப்புற்றார். அந்நிலையில் நங்கையும் நம்பியை நோக்கினாள். மாசற்ற இருவர் மனமும் கலந்தது; காதல் பிறந்தது, கடிமணம் நிகழ்ந்தது.

திருவாரூரில் மனையறம் புரிந்தார் நம்பி ஆரூரர். அப்போது சிறந்த மாதவர் கூட்டம் ஒன்று அந்நகரில் திருத்தொண்டு செய்து கொண்டிருந்தது. அத் தொண்டர்கள் மாசற்ற மனத்தினர்; முழு நீறு பூசிய மேனியர்.

" கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர் "

(வீடு - மோக்ஷம்; விறல் - வீரம்)

என்று திருத்தொண்டர் புராணத்தில் புகழப் பெற்றவர் இவரே.

தொண்டர் கூட்டத்தைக் கண்ட நம்பி ஆரூரரின் உள்ளத்தில் ஆர்வம் பெருகி வளர்ந்தது. " இவ்வடியார்க்கு நான் அடியனாகும் நாள் எந்நாளோ " என்று எண்ணி ஏங்கினர்.

" எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின் "

என்னும் பொருளுரைக்கு ஓர் எடுத்துக் காட்டாக ஆரூரர் அரனடியார்க்கு அடியார் ஆயினர். திருத்தொண்டத் தொகை என்னும் பெயரால் ஒரு திருப்பதிகம் பாடினர். அப் பதிகத்திலே குறிக்கப்படும் தொண்டர்கள் ஒரு நாட்டினர் அல்லர், ஒரு குலத்தினர் அல்லர். பூவேந்தர் சிலர்; பாவேந்தர் சிலர்; வேளாளர் சிலர்; வணிகர் சிலர்; மாதர் சிலர்; மறையவர் சிலர்; மற்றுமுள்ள குலத்தினர் சிலர். இவர்க்கெல்லாம் தனித்தனியாக வணக்கம் செலுத்திய பின்னர் தொகையடியாராகிய தொண்டர்களைப் போற்றினர் நம்பி ஆரூரர்.

" பத்தராய்ப் பணிவார்கள்
எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார்
அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே
வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள்
எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி
தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய
முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த
அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில்
அம்மானுக்கு ஆளே "

என்று அவர் பாடிய திருப்பாசுரம் பொன்னே போல் போற்றத் தக்கதாகும். திருவாரூரில் பிறந்தோர் எல்லாம் சிறந்தோர் ஆவர் என்பது அவர் கொள்கை. திருத்தொண்டத் தொகையில் கூறிய அடியார் காலத்திற்கு முன்னும் பின்னும் தமிழ் வழங்கும் நாட்டிற்கு அப்பாலும் உள்ள தொண்டர்கள் அனைவரையும் தொகுத்து " அப்பாலும் அடிச் சார்ந்த அடியார்க்கும் அடியேன் " என்ற அழகிய மொழிகள் நம்பி ஆரூரது பரந்த மனப் பான்மைக்குச் சிறந்த சான்றாகும்.

ஆரூரர் பாடிய திருத்தொண்டத்தொகையின் அடியாக எழுந்த பெருநூல் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம். பக்திச் சுவையொடு பாட்டின் சுவையும் 'சொட்டச் சொட்ட'த் திருத்தொண்டர் பெருமையை விரித்துரைத்தார் சோழ நாட்டு முதல் அமைச்சராகிய சேக்கிழார். அவர் இயற்றிய நூலின் அருமையறிந்த அரசன் "தொண்டர் சீர் பரவுவார்" என்னும் பட்டத்தை அளித்து அவரைப் பாராட்டினன்.

மலை நாட்டை ஆண்ட மன்னனாகிய சேரமான் பெருமாளும் நம்பி ஆரூரரும் உணர்ச்சியால் ஒன்றுபட்டு உயரிய நண்பராயினர். நம்பியைக் காணும் ஆர்வத்தால் திருவாரூரை வந்தடைந்தார் சேரமான். புவி வேந்தரும் கவிவேந்தரும் பூங்கோயிலிற் போந்து வழிபட்டனர். தமிழ்ப் புலமை வாய்ந்த சேர மன்னன் 'மும்மணிக் கோவை' என்னும் பாமாலை அணிந்து திருவாரூர்ப் பெருமானை வழிபட்டார்.

அம் மன்னன் விருப்பத்திற்கு இணங்கி அவனுடன் சேர நாட்டிற்குச் சென்றார் ஆரூரர்; சில நாள் சேரமானோடு அளவளாவி இருந்தார். ஆயினும் அவர் மனம் திருவாரூர்ப் பெருமானையே நாடிற்று. "என்னை ஆளுடைய பூங்கோயிற் பெருமான் பொன்னும் பொருளும் தருவான்; போகமும் ஞானமும் அளிப்பான்; பேதையேன் செய்யும் பிழையெலாம் பொறுப்பான். மேலும் பிழை செய்யாமல் காப்பான். ஏழையேனை இவ்வாறு காத்தருளும் ஆரூரானை மறக்கவும் ஒண்ணுமோ" என்று மனங் கசிந்து பாடினர்.

" பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானை
பின்னை என்பிழை யைப்பொறுப் பானை
பிழையெ லாம்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னைஎளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலும் ஆமே "

என்பது அவர் பாடிய திருப் பாட்டு.

திருவாரூர் ஈசன் இம்மை இன்பமும் தருவான்; மறுமை இன்பமும் தருவான். தன்னையே அடியார்க்குத் தருவான். ஆதலால் தியாகராசன் என்னும் தியாகேசன் என்றும் பெயர் பெற்றான். (தொடரும்)


TEK-981(R)
நூற்றில் ஒரு வார்த்தை ...
பணத்தின் மதிப்புக்கேற்ற
மிகச் சிறந்த டூத் பிரஷ்
டெக்
டூத் பிரஷை
வாங்குங்கள்
ஜான்ஸன் அண்டு ஜான்ஸனின் ஒரு உயர்தர தயாரிப்பு



அத்தியாயம் 50

சமர்ப்பணம்

என் கதை முடியும் தருணம் நெருங்கி விட்டது. இனிமேல் எழுதுவதற்கு என்ன இருக்கிறது? பிறகு நடந்ததெல்லாம் தான் அவருக்குத் தெரியுமே! நான் வளர்த்தி எழுத வேண்டிய அவசியமில்லை.

ஆனால் இதை எழுதுவது எனக்கு ரொம்ப மன ஆறுதலை அளித்து வந்தது. முடிக்க வேண்டியிருக்கிறதே என்று வருத்தமாகக்கூட இருக்கிறது. இந்தச் சம்பவங்களையெல்லாம் எழுதும்போது அவருடன் பேசுவது போலவே இருந்தது. அன்புக்குரியவரிடம் உள்ளத்தைத் திறந்து காட்டும்போது ஏற்படும் இன்பம் வேறு எதிலும் கிடைக்காதென்று தோன்றுகிறது. இதன் மூலம் துர்ப்பாக்கியசாலியான என் வாழ்க்கையை அவர் கண்ணாடியில் பார்ப்பது போல் தெரிந்து கொள்வார். என்னுடைய குற்றங் குறைகளும், கோபதாபங்களும், இன்ப துன்பங்களும் அவருக்குத் தெளிவாகத் தெரிந்துவிடும். என் மாதிரி அன்புக்குரியவரிடம் சகலவிதமான உணர்ச்சிகளையும் எழுத்தின் மூலம் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு வேறு எந்தப் பெண்ணுக்காவது கிடைத்திருக்குமா என்பது சந்தேகம் தான். இதை ஒரு அதிர்ஷ்டமென்று தான் நான் கருதவேண்டியிருக்கிறது.

நேற்றிரவு அப்பாவைப் பற்றிக் கனவு கண்டேன். நானும் அவரும் குங்குமத்துறையில் மலை மீது நடந்து போய்க் கொண்டிருக்கிறோம். அவர் எனக்கு வழக்கம் போல் கதை சொல்கிறார். நான் ஆனந்தமாகக் கேட்டுக் கொண்டே நடக்கிறேன். மகாபாரதத்தில் அபிமன்யு இறந்ததைக் கேட்டு அர்ச்சுனன் உயிர் துறந்து விடாமலிருப்பதற்கு, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பிராமண வேஷத்தில் வந்து யுக்தி செய்கிறாரல்லவா? அந்தக் கதையைச் சொல்கிறார். கண் விழித்த பிறகுதான் சிறையில் இருப்பது தெரிய வந்தது. என்னைத் தேற்றுவதற்காகவே அவர் கனவில் வந்து ஆறுதல் சொன்னாரோ என்று தோன்றியது.


அதன் பிறகும் ஏதோ விவரமில்லாத கனவுகள் வந்தன. சுசிலா தேவி, என் அருமை அன்னை, சுலோசனா, ரமேஷ், மீரா, பாலு இவர்களைப் பற்றியெல்லாம் ஏதேதோ கனவுகள் வந்து கொண்டே இருக்கின்றன. இறந்து போவதற்கு முன்னால் இப்படித்தான் எல்லாம் நினைவுக்கு வரும் போலிருக்கிறது.

கதையை முடிக்க வேண்டியிருக்கிறதே என்று வருத்தமாக இருப்பதால் வேண்டாத கதையெல்லாம் எழுதுகிறேன். என் கனவுகளைப் பற்றியெல்லாம் அவருக்குத் தெரிந்து என்ன ஆகப் போகிறது? அன்று நடந்த விஷயத்துக்கு வருகிறேன்.

* * *

கவுண்டரின் அலறலைக் கேட்டதுமே எனக்கு விஷயம் விளங்கி விட்டது. 'நான் வெகு நாட்களாக எதிர்பார்த்தது நடந்து விட்டது. அந்தப் பாதகன் ஈசுவர மூர்த்தி காட்டிக் கொடுத்து விட்டார். ஐயோ, அவர் என்ன நினைப்பார்? கடவுளே! ராஜாராமாவது இங்கு இருக்கக் கூடாதா? இது என்ன சோதனை?'

இன்ஸ்பெக்டர் என்னைப் பார்த்ததும் அருகில் வந்தார். கையில் ஒரு காகிதத்தைக் கொடுத்தார். அதை என்னால் படிக்க முடிந்தால்தானே! அறையில் ஒரே நிசப்தம் நிலவியது. திரும்பத் திரும்பக் கண்கள் அந்தக்




காகிதத்தை உற்றுப் பார்த்தனவே தவிர ஒன்றும் விளங்கவில்லை. சற்று நேரம் காத்திருந்தார் போலீஸ் இன்ஸ்பெக்டர். பிறகு, "உங்களைக் கைது செய்யும்படி உத்தரவு வந்திருக்கிறது" என்று கூறினார்.

யாரோ விம்மி அழும் குரல் கேட்டது. அதன் பிறகு எனக்கும் தாங்க முடியவில்லை. கால்கள் வெல-வெலத்துப் போய்த் தள்ளாடின. கையிலிருந்த காகிதம் நடுங்கிற்று. அதை இன்ஸ்பெக்டர் வாங்கிக் கொண்டார்.

இன்ஸ்பெக்டர், கவுண்டர் எல்லோரும் குடைராட்டினம் சுற்றுவது போல் என் முன்னால் சுழன்றார்கள்.

நான் தடாலென்று கீழே விழுந்தேன். என்ன செய்வதென்று புரியாமல் திகைத்தேன். என் நினைவு தவறிப் போகாதது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அந்த அதிர்ச்சியை நான் எப்படித் தாங்கினேன் என்பது இன்னும் அதிசயமாக இருக்கிறது

விதி செய்த விசித்திரத்தைப் பாருங்கள். ரங்கதுரையை வெகு நாட்களுக்குப் பிறகு பார்த்து மனத்தைத் திறந்து கொட்டி ஆறுதல் பெற்றேன். அதற்கு முன்னால் என்னைக் கைது செய்திருந்தால் இவ்வளவு அதிர்ச்சியாக இருந்திருக்காது. இனி மேல் நடக்காது என்று மூட்டை கட்டி வைத்திருந்த விஷயங்கள், நடக்கக் கூடியவைதான் என்று ரங்கதுரையைச் சந்தித்த பிறகு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. நம்பிக்கைச் செடி துளிர் விட்டுத் தழைக்க ஆரம்பித்த உடனே,





அதன் வேரைக் களைந்து வெங்கீரைக் கொட்டி நாசம் செய்தார்கள். என்ன கொடுமை!

சற்று நேரம் உட்கார்ந்தபடியே கண்ணீர் பெருக்கினேன். கவுண்டருக்கு ஒன்றும் தெரியாது. எனக்கும் என்ன செய்ய வேண்டுமென்று தெரியாது. இன்ஸ்பெக்டர் கையிலிருந்த இன்னொரு வஸ்து என்னுடைய கண்களை உறுத்திற்று. அதைக் கையில் மாட்டி விடுவார்களோ என்ற எண்ணமே என்னை நடுநடுங்கச் செய்தது. கைது செய்வதை விட விலங்கு மாட்டுவது இன்னும் பயங்கரமான விஷயமாக எனக்குத் தோன்றிற்று. கண்களில் பெருகி வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன்.

கவுண்டரைப் பார்த்து, "அவருக்குத் தந்தி கொடுங்கள்" என்று கூறினேன். அவ்வளவுதான். உடலை எல்லாம் உலுக்கிக் கொண்டு விக்கலும் விசும்பலுமாகப் பொங்கிக் கொண்டு அழுகை வந்தது. வள்ளியின் பாட்டி ஓடி வந்து என்னை அணைத்துக் கொண்டாள். வள்ளியும் அருகில் வந்து நின்றாள். அந்தக் காட்சி என் கண்களை விட்டு அகல மாட்டேன் என்கிறது. இன்ஸ்பெக்டருக்கே அந்தக் காட்சி மனத்தை உருக்கியிருக்க வேண்டும். அவர் வாசல் பக்கம் சென்றார்.

கவுண்டரும் அருகில் வந்து விம்மலுக்கு இடையே, "தைரியமாக இரு. அம்மா! உனக்கு ஒரு குறையும் வராது. ரங்கதுரை நீதிபதி வேலை பார்ப்பவரல்லவா? அவர் உன்னைக் காப்பாற்றுவார். நீ கவலைப்படாதே. இப்போது நீ இவர்களுடன் போய்த்தான் ஆகவேண்டுமாம். நான் ராஜாராமுக்கும், அவருக்கும் உடனே தந்தி கொடுக்கிறேன். இன்ஸ்பெக்டர் நல்லவராகத் தோன்றுகிறார். அவரிடம் உன்னை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளச் சொல்கிறேன்" என்றார்.

என்னால் பதில் பேசவே முடியவில்லை. தலையை மட்டும் ஆட்டினேன். கவுண்டர் வெளியே சென்று இன்ஸ்பெக்டருடன் ஏதோ பேசினார். பிறகு இன்ஸ்பெக்டர் உள்ளே வந்தார்.

"வாருங்கள்" என்று மரியாதையாகக் கூப்பிட்டார். நானும் இயந்திரம் மாதிரி எழுந்து சென்றேன். போலீஸ் வண்டியில் எப்படி ஏறினேனோ தெரியாது. அதில் உட்கார்ந்த பிறகு வள்ளி அழும் சத்தம் காதில் விழுந்

தது. மிகப் பிரயாசைப்பட்டு நான் கண்ணீரை அடக்கிக் கொள்ள வேண்டியிருந்தது. இப்போது கூட அந்த வண்டியில் சுற்றிலும் போலீஸ் காரர்களுடன் திருநெல்வேலியிலிருந்து ஜீவகுடி பாரம் வரையில் வந்ததை நினைத்தாலே மிகவும் வேதனையாக இருக்கிறது.

"ஐயோ! நாளை பத்திரிகைகளில் 'அமரதாரா கைது செய்யப்பட்டாள்' என்று கொட்டை எழுத்தில் பிரசுரிப் பார்கள். ஐயோ! அவருக்கு எத் தனை அவமானமாக இருக்கும்? இனிமேல் அவரை நான் மணந்து கொள்வது சாத்தியமான விஷயமா? ஒருகாலும் முடியாது. விடுதலை அடைந்தாலும் முடியாது. அதைவிட மரண தண்டனை அடைவதே மேல். இத்தனை அவமானத்துக்குப் பிறகு எதற்காக உயிர் வாழ வேண்டும்?' என்ற எண்ணங்கள் தோன்றிக் கொண்டே இருந்தன.

'லாக் அப்'பில் கொண்டு என்னை வைத்த பிறகு தனிமைக்குக் குறை விருக்கவில்லை. முடிந்த மட்டிலும் அழுது தீர்த்தேன். அழுவதற்கு நீர் இல்லாமல் கண்கள் வற்றிப் போகும் வரையில் அழுதேன்.

மறுநாள் பிற்பகல் ராஜாராம் வந்து என்னைப் பார்த்த போது பயந்தேபோனார். "ஐயோ, இந்து! ஒரே நாளில் இப்படிப் போய் விட்டாயே!" என்று மலைத்துப் போனார். அப்படி உருமாறிப் போயிருந்தேன்.

ரங்கதுரை மறுநாள்தான் வந்தார். அவரைப் பார்த்தபோது எனக்கு உள்ளம் நடுங்கிற்று. இரண்டு நாளும் இரவு தூங்கவில்லை யென்று கண் களைப் பார்த்த போதே தெரிந்தது. கண்கள் சிவந்து தலை கலைந்து, முகம் வாடிச் சோர்ந்து, திடீரென்று வயது அதிகமாகி விட்டமாதிரி காணப்பட் டார். எனக்கு என்னுடைய துயரம் கூட மறந்து போய் விட்டது. அவ ரைத் தேற்றினேன்.

என்னை ராஜாராமும், ரங்கதுரை யும் ஜாமீனில் விடுதலை செய்து அழைத்து வந்தார்கள். ஆயினும் ரங்கதுரையுடன் மனம் விட்டுப் பேச எனக்கு அவாவும் ஏற்படவில்லை. சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை. என்ன ஆனாலும் நான் சிறைக்குள் போய் இருந்தவள், அவரை மணந்து கொள் ளவே கூடாது என்று நினைத்தேன்.

அவரைக் கண்டு மனம் கனிந்த போதெல்லாம் இரும்பாக்கிக் கொண் டேன். வக்கீல் வைத்து வழக்கை நடத்தக் கூடாதென்று அவரிடம் சண்டை போட்டேன்.

இன்னொரு அசட்டுத்தனமும் செய் தேன். கோர்ட்டில் என்னை மாஜிஸ்ட் ரேட் விசாரணை செய்த போது, "நீ சொக்கையா என்னும் குங்குமத்துறை சின்ன ஜமீன்தாரைக் கொன்றாயா?" என்று கேட்டார்.

"நான் இல்லை" என்று கூறினேன்.

பிறகு அவர் தந்தப் பிள்ளையாரைக் காட்டி, "இது உன்னுடையதா?" என்று கேட்டார்.

"ஆமாம்" என்றேன்.

"நீ அவரைக் கொல்லவில்லையானால் யார் கொன்றார்கள்? அவர் கொலை செய்யப்பட்ட சமயத்தில் நீ அங்கே இருந்தாய் என்பது நிச்சயமாகத் தெரிகிறதே" என்றார்.

"அது எனக்குத் தெரியாது."

"அன்று நடந்தது முழுவதையும் உன்னால் சொல்ல முடியுமா?" என்று கேட்டார் நீதிபதி.

ராஜாராம் என்னிடம் சொக்கையா எழுதிய கடிதத்தைப் பற்றிப் பிரஸ் தாபிக்க வேண்டாமென்றும், தந்தப் பிள்ளையார் என்னுடையதில்லை என் றும் சொல்லச் சொல்லியிருந்தார். ஆனால் நான் மரணதண்டனை அடைய வேண்டுமென்று நினைத்தபடியால், எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். அதற்காக நான்தான் கொன்றேன் என்றும் சொல்ல மனம் வரவில்லை. 'போன ஜன்மத்தில் என்ன பாவம் செய்தேனோ? இத்தனை கஷ்டங்கள் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இந்த ஜன்மத்தில் பொய் சொல்லிப் பாபச் சுமையை அதிகமாக்கிக் கொள்ள வேண்டாம். நடந்தது நடந்தபடி சொல்லி விடுகிறேன். பிறகு ஈசன் விட்ட வழி ஆகட்டும். இறைவனுக்கு என்மீது சிறிதேனும் கருணை இருக்குமானால் எனக்கு மரண தண்டனை கிடைத்துவிடும் என் றெல்லாம் எண்ணிக்கொண்டு உண் மையைச் சொல்லி விட்டேன்.

'வெயிற்காலத்து வயிற்றுக் கோளாறுகளை' தளதளக்கும் பானம் நிறுத்துகிறது



வெயில் காலத்தில் உங்கள் வயிறு மிகச் சலபமாகக் கெட்டுவிடுகின்றது. உங்கள் வாயில் ஒரு வித துர்க்கந்தம் ஏற்படுகிறது. தவிர நீங்கள் தளர்ச்சியாயும், சோம்பலுடனும் இருக்கின்றீர்கள். ஈனோ உங்கள் வயிற்றை சீராக்கி உங்கள் தேகநிலையை நேர்செய்து அதை ஆரோக்கியமாயும், சுறுசுறுப்பாயுமாக்குகின்றது.

ஈனோ எளிமையானது எனினும் வயிற்றில் புளிப்பை நீக்குவதில் அற்புத சக்தி வாய்ந்தது. எவ்வித கெடுதியும் செய்யாமல் அது புளிப்பு மிகுதியாலுள்ள அஜீர்ணம், நெஞ்செரிச்சல், வாயுப்பொருமல் முதலிய உபாதைகளை துரிதமாயும், நிச்சயமாகவும் நிவர்த்திக்கிறது. எட்டே செகண்டுகளில் நீங்கள் சுகம் பெறுகிறீர்கள்—வயிற்றுக்கு மட்டுமல்ல, வாய்க்குக்கூட!

மிதம் மீறி புசிப்பதாலோ அல்லது உண்பது உங்கள் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாமலிருந்தாலோ ஈனோவின் விசேஷசக்தி, ஜீரண உறுப்புகளை மீண்டும் ஒழுங்குபடுத்த உதவுகிறது. உங்களுக்கு லேசாய் பேதியாக விரும்பினால் காலி வயிற்றில் கொஞ்சம் பெரிய 'டோஸ்' உட்கொள்ளவும். எப்பொழுதும் ஈனோஸ் 'ப்ரூட் ஸால்ட்'டை கையிருப்பில் வைத்துக் கொள்ளவும்.

அது உங்களுக்கு குணம் செய்வதுடன் குளுமையையும் புத்துணர்ச்சியையும் தருகிறது

ஈனோஸ் 'ப்ரூட் ஸால்ட்'



பெரிய புட்டி ரூ. 3/12
சிறிய புட்டி ரூ. 2/8
உள்ளூர் வரிகள் பிரத்தியேகம்

'ஈனோ' மற்றும் 'ப்ரூட் ஸால்ட்' என்ற வார்த்தைகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்குகளாகும்

ENO. 1508 (Tam.)

எல்லா விவரங்களையும் கேட்டார் நீதிபதி. பிறகு, "உனக்கு வந்த கடிதம் இருக்கிறதா?" என்று என்னிடம் கேட்டார்.

"இல்லை, அதை என் தந்தை எரித்து விட்டார்" என்றேன்.

"நீ யாரைப் பார்க்கப் பாதிரித் தோட்டத்துக்குப் போனாய்?" என்று கேட்டார் நீதிபதி.


உடனே என் உடல் நடுங்கிற்று. நான் சொல்லி விட்டால் அவர்மீது பழியைச் சுமத்தி விடுவார்கள் என்ற எண்ணம் தோன்றியதும் அசாத்தியமாகக் கோபம் வந்தது.

"அதைப் பற்றி உங்களுக்கென்ன கவலை?" என்று கேட்டேன்.

அதன் பிறகு நீதிபதியும் கடுமையாக இருந்தார். கடைசியில் அவர் நான் குற்றவாளி என்றார். பிறகு ஸெஷன்ஸ் கோர்ட்டில் விசாரணை செய்தார்கள். இதே மாதிரிதான் எல்லாம் நடந்தது. அப்போதெல்லாம் என்ன நடந்ததென்பது எனக்கே ஒன்றும் சரியாகத் தெரியவில்லை. ஒரு பிரமை பிடித்த நிலையில் நான் இருந்தேன்.

மேலும் இனிமேல் ரங்கதுரைக்கு என்மீது முன்மாதிரி பிரியம் ஏற்பட முடியாது. அவருக்கு அப்படியே இருந்தாலும் அதற்கு இடங்கொடுத்து நான் அவரது வாழ்க்கையைப் பாழாக்கக் கூடாது என்ற எண்ணம்தான் தலைதூக்கி நின்று கொண்டிருந்தது. ஆகவே அவர் என்னிடம் பேசியபோதெல்லாம் அலட்சியமாகவும், வெறுப்பாகவும் பேசினேன். இதனால் அவருடைய மனத்தை நோகச் செய்தேன் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அவருக்கு என்மீது வெறுப்பு ஏற்படுவதே நல்லது என்று நினைத்தேன்.

மரணம் ஒன்றுதான் இந்தப் பாதக உலகிலிருந்து தப்புவதற்கு மார்க்கம் என்ற எண்ணம் வேறு தோன்றிக் கொண்டே இருந்தது. உண்மையிலேயே எதைக் கண்டாலும் வெறுப்பாக இருந்தது. மனமே எட்டிக் கனியாக மாறி விட்டதோ என்று சொல்லும்படி கசந்து போய்விட்டது. ஆதலால் கோர்ட் நடவடிக்கைகளையெல்லாம் நான் உன்னிப்பாகக்



கோவை அட்வகேட் ஸ்ரீ கே. எஸ். சாம்பமூர்த்தி அய்யர் அவர்களின் புதல்வர் ஸ்ரீ கே. எஸ். சங்கரன் பி. ஏ. அவர்களுக்கும் பர்மாஷெல் கம்பெனியின் மார்க்கெட் சர்வீஸ் இலாகாவைச் சேர்ந்த ஸ்ரீ என். ஹரிஹர அய்யர் அவர்களின் புதல்வி சௌ லக்ஷ்மி பி. ஏ.க்கும் நெல்லை ஜில்லா வள்ளியூரில் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

வாழ்க, சங்கர் — லக்ஷ்மி!

கவனிக்கவும் இல்லை. அது எனக்குப் புரியவும் இல்லை.

ஆனால் செஷன்ஸ் கோர்ட்டில் தீர்ப்புச் சொல்லிய பிறகு என்னால் அவ்விதம் மனத்தை இரும்பாக வைத்துக் கொள்ள முடியவில்லை. 'நமக்கோ மரண தண்டனை விதித்து விட்டார்கள். நான் இறப்பதற்கு முன் என் இதயத்தை அவர் தெரிந்து கொள்ள வேண்டாமா?' என்று தோன்றும்.

அவர் தீர்ப்புக் கூறிய மறுநாள் என்னை வந்து பார்த்த போது நான் கனிந்து பேசினேன். அவர் என் கரங்களிரண்டையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு, "இந்து! உனக்குத் தண்டனை நிறைவேறுவதாக இருந்தாலும், எப்படியாவது அனுமதி பெற்று அதற்கு முன்னால் கல்யாணம் செய்து கொண்டு விடுகிறேன். நீ என் மனைவியாக ஒரு நாளாவது இருந்தே ஆகவேண்டும்" என்றார். அதைக் கேட்டு அப்படியே உருகிப் போய் விட்டேன். அதன் பிறகுதான் இந்தச் சுய சரிதத்தை எழுத ஒப்புக் கொண்டேன். அவருடைய விருப்பத்தை நிறைவேற்றினால்தான் எனக்கு நிம்மதி கிடைக்கும்.

அதன் பிறகுதான் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள். என்னை


யும் சென்னைக்கு அழைத்து வந்தார்கள். யார் செய்த தீவினையோ? ஜாமீனில்கூட விட மறுத்து விட்டார்கள். எல்லாம் அந்தப் பாவி ஈசுவர மூர்த்தியின் வேலையாகத்தான் இருக்க வேண்டும். ஆம்! இந்தப் பாதகர்கள் வசிக்கும் உலகத்தை விட்டுப் போய் விடுவதே நல்லது.

சில சமயங்களில் மட்டும் என் தந்தை காசிலிங்கம் வந்து என்னை விடுவித்துக் கொண்டு போய் வைத்துக் கொள்ளக் கூடாதா என்று எண்ணியதுண்டு. சில சமயம் இரவில் என் தந்தை என்னைப் போலீஸாரிடமிருந்து தப்ப வைக்க வருவதாகக் கனவு கண்டதும் உண்டு. நாளடைவில் இதுவும் நடக்காதென்று எனக்குத் தோன்றி விட்டது.

கடைசியில் ஸெஷன்ஸ் கோர்ட்டில் எனக்கு மரண தண்டனை விதித்தார்கள். இந்த விவரங்களெல்லாம் நான் யாருக்காக இவைகளை எழுதுகிறேனோ அவருக்கு நன்றாகத் தெரியுமாதலால் நான் வளர்த்த விரும்பவில்லை. நான் எழுதி யிருப்பதிலிருந்து என் உள்ளம் அவருக்கு நன்றாகத் தெரிய வேண்டுமென்ற நோக்கம் நிறைவேறி யிருக்கும் என்று நம்புகிறேன்.

அவர் நாளைக்கு வருவதாகக் கடிதம் எழுதியிருக்கிறார். வரும்போது ஒரு அதிசயமான சுய சரிதத்தைக் கொண்டு வருகிறாராம். எனக்கே தெரியாமலிருக்கும் பல விஷயங்களையெல்லாம் அதில் எழுதியிருக்கிறாராம். எனக்கு இப்போதே அதைப் படிக்க வேண்டுமென்று மனம் துடிக்கிறது. நாளை இதை அவரிடம் கொடுத்து விட்டு, அவருடைய சரிதத்தை வாங்கி நான் படிப்பேன்.

எங்களைப் போன்ற அதிசயக் காதலர்களைப் பார்க்க முடியுமா? ஒருவ




ரைப் பற்றி ஒருவர் எழுதித் தெரிந்து கொள்ள வேண்டி யிருக்கிறது.

அவருடைய கதையைப் படித்து அவரைப் பற்றி முழுதும் தெரிந்து கொண்டு விட்டாலே என் மனம் பூரண அமைதியடைந்து விடுமென்று தோன்றுகிறது. 'ஆம்! அவரை அடுத்த ஜன்மத்திலாவது கணவராக அடைய வேண்டுமென்று பிரார்த்தித் துக் கொண்டே நான் இறப்பேன். இறக்கும் தருணத்தில் பிரார்த்தனை செய்து கொண்டால் அது நிறை வேறும் என்று சொல்கிருர்கள். ஆனால் இன்னொரு ஆசையும் இருக்கிறது. அடுத்த ஜன்மத்தில் நான் அவரை மணந்து கொள்ளும்பொழுது நான் இந்துமதி என்றும், அவர் ரங்கதுரை என்றும் தெரிந்திருக்க வேண்டும். இத்தனை துன்பங்களுக்கு இடையிலும் எங்கள் அன்பு மாசு மறுவின்றிப் பிர காசித்து வந்ததினால்தான் மறுபடியும் அவரையே காதலித்து என் மணவாள ராக அடைந்தே னென்று நான் தெரிந்து கொள்ள வேண்டும்' என் றெல்லாம் நினைக்கிறேன்.


இவைகளிலெல்லாம் அர்த்த மிருக்க லாம்; இல்லாமலு மிருக்கலாம். ஆனால் என் அன்பருக்கு என் இதயக் கிடக் கைகளைச் சொல்ல வேண்டுமல்லவா?

நான் அவருக்கு அளிக்க எண்ணிய ஒரே ஒரு பரிசைக் கொடுக்க முடியா மல் போயிற்று. இத்தனை நாட்களுக் குப் பிறகு என்னையே அவருக்குப் பரிசாக அளிக்க வேண்டு மென்று நினைத்தேன். அதுவும் முடியாமல் போய் விட்டது. ஆகவே அவருக்கு நான் அளிக்கும் கடைசிப் பரிசு இந் தச் சுயசரிதம்தான். இத்துடன் என் இதய கமலத்தையும் அவருடைய பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.


இத்துடன் இரண்டாம் பாகம் முடிவடைந்தது. அடுத்த இதழில் மூன்றாம் பாகமான ரங்கதுரையின் கதை ஆரம்பமாகும்.







ஒவ்வொரு ஆனந்தமான நிகழ்ச்சியையும் அந்தந்த நேரங்களில் நடந்ததைப் போலவே **குதூகலமாயும் உணர்ச்சிபாவத்திலும்** வைத்துக் கொள்ளவும்



வெறுமனே ஒரு பொத்தானை அழுத்தி 'கோடக்' ஸ்னாப் ஷாட்டுகளில் அந்த ஆனந்த சந்தர்ப்பங்களை எப்போழுதும் புத்தம் புதிதாய் வைக்கவும்.

நீங்கள் குறிவைத்து அந்த ஒரு பொத்தானை அழுத்தக் கூடுமானால் இந்தக் கோடக் காமிராக்களைக் கொண்டு நேர்த்தியான படங்களை உண்டாக்க முடியும். ஒரு குழந்தைகூட உபயோகிக்குமாறு அவ்வளவு சுலபமாக இவை செய்யப்பட்டவை. நீங்கள் 'போகஸ்' கூட செய்யத் தேவையில்லை.

இந்தியாவிலுள்ள நேர்த்தியான காமிராக்களின் பற்பல ரகங்களைக் காட்டுமாறு உங்கள் கோடக் வியாபாரியிடம் கேளுங்கள். அவற்றில் உங்களுக்குப் பிடித்தமான ஒரு காமிரா அவசியம் கிடைக்கும்.

வெளிக்காட்சிகளைப் போலவே சுலபமாக வீட்டிற்குள் ளும் படங்கள் எடுக்க உதவும். 'கோடக்' பிளாஷ் ஹோல்டர்களைப் பற்றி விசாரியுங்கள்.



'ப்ரௌனி' 127 காமிரா : சுத்தமான வெள்ளை டைப் வியூபைண்டருடன் கூடியது, எல்லாவற்றைக் காட்டிலும் சுலபமாய் உபயோகிக்கக் கூடியது. குறைந்த விலையான 'கோடக்' 127 பிலிம்களில் எட்டு ஸ்னாப்கள் ரூ. 17/8

ஸிக்ஸ்–20 'ப்ரௌனி' காமிராக்கள் : உலகிலேயே மிகவும் பிரபலமான இந்தக் காமிராக்கள் ஒவ்வொரு சுருள் பிலிமிலும் எட்டு ஆல்பம் சைஸ் ஸ்னாப்புகள் எடுக்கக் கூடும். மாடல் C மிகவும் எளிது. மாடல் D கூட நேர்த்தியான போர்ட்ரேட் க்ளோசப்புகள் உண்டாக்கும். உட்புற பிளாஷ் ஷாட்டுகள் எடுக்க மாடல் E அல்லது புதிய அழகான மாடல் F உபயோகியுங்கள்.

விலைகள் ரூ. 24/-லிருந்து ரூ. 36/8 வரை. நேர்த்தியான 'கோடக்' ப்ளாஷ்ஹோல்டரின் விலை ரூ. 22/12 அல்லது ரூ. 31/4 மட்டுமே.



கோடக் லிட்.
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)
பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்

மேலே குறிப்பிட்ட விலைகள்
விற்பனைவரி சேராதவை

ஹேமாவின் வாழ்வு

கே. பி. நீலமணி



கிருஷ்ணபவனத்தின் அழகிய கடிகாரம் ஒன்பதடித்து ஓய்ந்தது. அத்தனை நேரமாகியும் இரவு சாப்பாட்டிற்கு எழுந்து வராத தன் கணவர் மீது கோபம் கொண்டவளாக ஸ்ரீதரனின் அறைக்குள் நுழைந்த ராஜி, அப்படியே ஒருகணம் அசைவற்று நின்று விட்டாள்.

"நன்றாய்த்தானிருக்கிறது, நீங்கள் இந்தக் கடிதத்தை இரண்டு நாளாக வைத்துக் கொண்டு, கரைந்து உருகுவது. இந்தத் திருச்சி வரனை நம்பித்தான் நம் பெண் பிறந்திருக்கிறாளா? இல்லை, அவனுக்குப் பிடிக்க வில்லை யென்று, ஹேமாவுக்குக் கல்யாணமே ஆகாமல் நின்று விடப் போகிறதா? பேசாமல் அந்தக் கடுதாசியைக் கிழித்துக் கூடையில் போட்டு விட்டுச் சாப்பிட வாருங்கள்" என்று தன் கணவருக்கு உத்தரவு பிறப்பித்து விட்டு உள்ளே சென்று விட்டாள் ராஜி.

கடிதத்தைச் சுலபமாகக் கிழித்துக் கூடையில் கசக்கி எறிந்து விடலாம். ஆனால் அதில் எழுதியிருக்கும் வார்த்தைகள் குத்தீட்டிகள் போல் அவன் இதயத்தையல்லவா பிளந்து விட்டன! அதை எப்படி அவனால் மறக்க முடியும்?

மூன்று மாதங்களுக்கு முன்பு டில்லியிலிருந்து வந்து பார்த்துச் சென்ற வரனை ஸ்ரீதரன் தம்பதிகளுக்கும் முக்கியமாக ஹேமாவுக்குமே அதிகம் பிடித்திருந்தது. பையனுக்கு அழகுடன், படிப்பும் சேர்ந்து அமைந்திருந்தது. ஐ. ஏ. எஸ். பாஸ் செய்து விட்டு வருமான வரி இலாகாவில் ஓர் உயர்ந்த சம்பளத்தில் இருந்தான்.

தேக அசௌக்கியத்தினால் பையனின் தாயார் வர இயலவில்லை. ஆகவே, பெண்ணைப் பார்த்த பையனின் தந்தை தம் சம்மதத்தைத் தெரிவித்ததுடன், ஊர் சென்று தம் மனைவியையும் கலந்து கொண்டு பதில் எழுதுவதாகச் சொல்லிச் சென்றார். ஆனால் இன்று வரை டில்லியிலுள்ள அவர்களிடமிருந்து எவ்வித பதிலும் வரவில்லை. எனவே, எல்லோரையும்விட இந்த ஏமாற்றம் ஹேமாவின் களங்கமற்ற உள்ளத்தைத் தான் அதிகம் பாதித்தது.

ஸ்ரீதரனது உள்ளத்தில் இந்த நம்பிக்கை ஓரளவு ஓயும் தருணத்தில் தான் திருச்சி வரன் நிச்சயமாயிற்று. வளர்த்தாமல் எப்படியாவது சீக்கிரம் கல்யாணத்தை முடித்து விட வேண்டுமென்று விரும்பிய ஸ்ரீதரன் தன்னுடைய சக்திக்கு மீறி, சீர்வகைகள் கூடச் செய்யச் சித்தமாயிருந்தான். ஆனால் திருச்சிப் பையனிடமிருந்து வந்த பதில் அவன் எண்ணக் கோட்டைகளை யெல்லாம் தகர்த்ததும் அன்றி ஸ்ரீதரனது இதயத்தையே அல்லவா சுக்குநூறாகச் சிதற அடித்து விட்டது?

"சீர் வகைகள் சற்று முன்பின் இருப்பினும் நான் ஆயுள் முழுவதும் அன்பு காட்ட வேண்டிய பெண், அழகில்லாமல் இருப்பதை என் மனம் ஏற்க வில்லை. மனம் விட்டு எழுதியதற்கு மன்னிக்கவும்" என்கிற அந்த வார்த்தைகள் பெண்ணைப் பெற்றவன் உள்ளத்தை என்ன பாடு படுத்தியிருக்கும்?

ஸ்ரீதரன் கையிலே எடுத்த சாதம் மீண்டும் உள்ளே செல்ல மறுத்தது. அப்படியே கையை அலம்பிக் கொண்டு விர்ரென்று தன் அறைக்குச் சென்று விட்டான். ஆனால் அத்தனையையும் பார்த்துக் கொண்டிருந்த ராஜி ஒன்றுமே புரியாமல் சிலை போல் செயலற்று நின்று விட்டாள். அப்போது தன் கணவரிடம் ஒரு வார்த்தை பேசக் கூட அவளுக்குப் பயமாயிருந்தது. தன் பொருட்டுப் பெற்றோர்கள் படும் வேதனையைக் காணச் சகிக்காத ஹேமா அன்றிரவு சாப்பிடாமலே தன் அறையில் சென்று படுத்துக் கொண்டு விட்டாள்.

மணி பன்னிரண்டாகியும் ஸ்ரீதரனின் அறைப்பக்கமே நித்திராதேவி வர அஞ்சினாள். இரவு என்னும் போர்வையைப் போர்த்திக் கொண்டு உலகமே உறக்கத்தில் மூழ்கிக் கிடந்தது. புரண்டு, புரண்டு


படுத்த ஸ்ரீதரனது இரு கன்னங்களிலும், காய்ந்து போன கண்ணீரின் தடங்கள் இலேசாகத் தெரிந்தன. அவனது உடலிலே அசைவும், உள்ளத்திலே சலனமும் சிறிதும் ஓய்ந்த பாடில்லை.

ஹேமா பிறக்கும்போதே, அழகில்லாமல் பிறந்திருந்தால் கூட ஸ்ரீதரன் இத்தனை கவலைப்பட்டிருக்க மாட்டான். உருக்கி வார்த்த தங்கச் சிலை போல் ஹேமாவைப் பெண்ணாகப் பெற்றதற்கே ஸ்ரீதரன் தம்பதிகள் பெருமை கொண்டிருந்தனர்.

வைசூரியின் கொடுமையினால் ஹேமாவின் அழகு குறையாடப்பட்டு விட்டது. முகத்தில் விழுந்த அம்மைத் தழும்புகள் அவள் உருவத்தையே மாற்றி விட்டன.

விளக்கை யணைக்கப் போன ஸ்ரீதரனின் கண்களில் எதேச்சையாகச் சுவரின் மூலையில் இருந்த ஒரு படம் தென்பட்டது. இளமை ததும்பி நிற்கும் அப்படத்தையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். அவனையும் மீறி, “காமு” என்று அவனது வாய் முணுமுணுத்தது. வற்றியிருந்த ஊற்று மீண்டும் சுரந்து விட்டது. வழிந்தோடும் கண்ணீருடன் விளக்கை யணைத்து விட்டுக் கட்டிலில் வந்து சாய்ந்தான்.

அறையிலே இருள் ஆட்சி செய்து கொண்டிருந்தது. ஆனால் ஸ்ரீதரனது உள்ளத்தில் காமுவின் நினைவு ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. தன்னையே முற்றிலும் கதியென நம்பியிருந்த காமுவுக்குத் தான் செய்த துரோகமே, இப்போது தன் மகளைச் சூழ்ந்திருப்பதாக ஸ்ரீதரன் பூரணமாக நம்பினான். அவளுக்கு அவன் செய்த பாபம், இமயம் போல் அவன் முன்பு எழும்பி நின்றது. அதன் உச்சியிலிருந்து தனது இறந்த காலத்தைத் திரும்பிப் பார்த்துக் கொண்டேயிருந்தான் ஸ்ரீதரன்.



சேங்காலிபுரம் குஹதாஸ் அவர்களின் பேரனும் தஞ்சாவூர் கே. எச். ஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீ சிவகுமாரன் பி. ஏ., எல். டி., அவர்களின் குமாரனுமான ஸ்ரீ. குஞ்சிதபாதத்துக்கும் மாந்துறை ஸ்ரீ கு. நாராயணசாமி சாஸ்திரிகள் குமாரத்தி சௌ. சரோஜாவுக்கும் ஆகஸ்டு மாதம் 28-ந் தேதி திருவாரூரில் திருமணம் மிகச் சிறப்பாக நடந்தது. சென்னையில் உள்ள பிரபல பத்திரிகாசிரியர்களிடமிருந்தும் மற்றும் ஏராளமான பிரமுகர்களிடமிருந்தும் மணமக்களுக்கு வாழ்த்துச் செய்திகள் வந்தன.

வாழ்க குஞ்சிதபாதம் – சரோஜா!

2

சிறுவயதிலேயே பெற்றோரை யிழந்து அனாதையாகிவிட்ட காமு, தன் மாமன் வீட்டிலேயே வளர்ந்து வந்தாள். சிறுவனாயிருந்த ஸ்ரீதரனும் தன் வீட்டைத் தஞ்சமடைந்திருக்கும் காமுவிடம் அன்பாகவேயிருந்து வந்தான். ஹைஸ்கூல் படிப்பு முடியும்வரை இருவரும் ஒன்றாகவே படித்து வந்தனர். பின்னர் காலேஜ் படிப்பு வந்ததும் ஸ்ரீதரன் சென்னை சென்று படித்தான்.

ஒவ்வொரு கோடை விடுமுறைக்கு வரும் போதும் ஸ்ரீதரன் காமுவுக்கென்று பட்டணத்திலுள்ள ஏதாவது புதுமைப் பொருளை வாங்காமல் வரமாட்டான். அழகு என்கிற வார்த்தைக்கு அதி முக்கியத்வம் கொடுக்கும் ஸ்ரீதரனது உள்ளப் போக்குக்கு ஒரு இலக்கணமாகத் திகழ்ந்தாள் காமு. பெயர் சற்றுக் கர்நாடகமாயிருப்பினும், அவனுடன் காலேஜில் படிக்கும் அத்தனை, நாகரிகப் பெண்களிலும், காமுவே, அவனது உள்ளத்து அழகுப் போட்டியில் முதற் பரிசு பெற்றாள்.


அவளையடையப் போகும் தான் ஒரு நிரந்தர அதிர்ஷ்டசாலி என்று எண்ணி அவன் மனம் பூரித்தான். ஆனால் அது நீடிக்க ஆண்டவன் அருள் புரியவில்லை. விதியென்கிற விசித்திரமான விசையில், திசை மாறிச் சுழற்றப்பட்டாள் காமு. கடுமையான விஷ ஜுரக் காய்ச்சலிலே ஒரு மாதம் அவஸ்தைப் பட்டாள். பணத்தை லட்சியமில்லாமல் வாரியிறைத்த ஸ்ரீதரனின் தந்தையினால் காமுவின் உயிரை மட்டுந்தான் காப்பாற்ற முடிந்தது. அவளைச் சுற்றி அரவணைத்துக் கொண்டிருந்த அழகு என்னும் பொக்கிஷம் அவளிடமிருந்து கொள்ளை போய்விட்டது.

வழக்கம்போல் அந்த வருஷமும் தன்னுடைய பரீட்சையை முடித்துக் கொண்டு ஸ்ரீதரன் வந்திருந்தான். ஆனால் துள்ளிக் கொண்டு வந்த அவன், காமுவைக் கண்ட மறுகணம் கல்லாய்ச் சமைந்து நின்று விட்டான். தன்னையும் மீறி அவன் கண்கள் நீரைச் சொரிந்தன.

பரீட்சை சமயத்தில் அவன் அப்பாவிடமிருந்து காமுவுக்குச் சற்று உடம்பு சரியாயில்லை என்கிற கடிதம் மட்டும்தான் வந்ததே யொழிய, இத்தனை விபரீதம் அவள் வாழ்வில் ஏற்படுமென்று அவன்

பற்களைப் பரிசுத்தமாக்கும் மக்ளீன்ஸ்!

இம் மூன்று கோப்பைகளைப் பற்கள் என பாவனை செய்வீர்களானல் இவைகளின் வெளிப்புறம் மற்றும் உட்புறத்தைத் தவிர, ஊத்தை சேர்ந்து அபாயகரமான கிருமிகள் வசிக்கும் இடுக்குகளை சுத்தம் செய்வது மிகக் கடினம்.




மக்ளீன்ஸ் பற்களுக்கு இடையிலுள்ள சந்துகளை துப்புரவாக சுத்தம் செய்து

ஊத்தையை அகற்ற சிறந்த சாதனம்

பற்களின் மேல் படிந்திருக்கும் பாசியில் விப்பாயிட்ஸ் என்று சொல்லப்படும் அசுத்தம் கலந்துள்ளது. விப்பாயிட்டை எளிதில் சுத்தம் செய்யமுடியாது. இவை தவருமல் சுத்தம் செய்யப்பட வேண்டும். இல்லையேல் இவைகளின் உட்புறத்தில் தங்கும் திராவகச்சத்து பற்களை அரித்தே விடுகின்றது. இத்தகைய விப்பாயிட்ஸை அறவே அகற்ற ஒரே வழிதான் உண்டு. அதாவது இதை கரையச் செய்யவேண்டும். விப்பாயிட்ஸை கரைக்கக்கூடிய விசேஷமான திரவம் மக்ளீன்ஸில் இருப்பதால், வாயில் நுரை கூட்டாமல் மக்ளீன்ஸ் விப்பாயிட்ஸை லகுவாக ஜாக்கிரதையுடன் துரிதமாக கரையச்செய்கின்றது. பற்களின் சிதைவைத் தவிர்க்க இது மிகவும் முக்கியம்.

மக்ளீன்ஸ் பற்பசையை தினந்தோறும் இரு முறை உபயோகியுங்கள். பற்கள் வெண்மையாகவும், ஆரோக்கியத்துடனும் விளங்கும்.

க்ளோரோபில் சேர்ந்த வகையும் கிடைக்கும்



MTY-41 TAM

எண்ணவேயில்லை. 'அத்தான்! அத்தான்' என்று ஊரிலிருந்து ஸ்ரீதரன் வந்ததும் வராததுமாக, துள்ளிக் குதித்து நிற்கும் காமு, இன்று பிரதிஷ்டை செய்யப்பட்ட கற்சிலை போல் உள்ளேயே அடைந்து போய்க் கிடந்தாள்.


முன்பெல்லாம் காமுவின் சௌந்தர்யத்தை ஒவ்வொரு கோணங்களிலும் கண்டு ரசித்த ஸ்ரீதரன் இப்போது அவளைக் கண்டால் கூட, ஏதோ பெரிய குற்றமொன்றைச் செய்து விட்டவன் போல் ஒளிந்து விலகினான். இந்தச் சமயத்தில் தான் கல்கத்தாவில் இருக்கும் ஸ்ரீதரனின் சின்ன அத்தை, தன் பெண்ணின் கல்யாண நிமித்தம் வரன் தேடி, கணவருடனும், பெண் ராஜியுடனும் அங்கு வந்திருந்தாள்.

ராஜியின் வருகைக்குப் பிறகு தன் அத்தானிடம் காணும் விசேஷ மாறுதல்களைக் காமு கவனிக்கத் தவறவில்லை. ராஜியை அத்தனை அழகி என்று சொல்வதற்கில்லாவிடினும், நாகரிகம் மிகுந்த ஊரில் வளர்ந்த அவள் தன் அழகைப் பன்மடங்காகப் பெருக்கி வைத்திருந்தாள். அவளது சுருண்டு விழும் கருங் கூந்தலும், அஞ்சனம் தீட்டிய கயல் விழிகளும், அடிக்கொரு தரம் மெருகேற்றப்படும் அவளது அதரங்களும் ஸ்ரீதரனைப் பித்தாயடித்து விட்டன.

ஸ்ரீதரனின் போக்கைக் காமு புரிந்து கொண்டு விட்டாள். 'அத்தான் தன்னைக் கைவிட்டு விட்டார்' என்பதைத் தன்னுடைய அடக்கமான சுபாவத்தினாலும், ஆழ்ந்த அறிவினாலும், அதைப் பிறருக்குத் தெரியாவண்ணம் எவ்வளவுதான் மறைத்து வைத்தாலும், தாங்க முடியாத அந்த மிகப் பெரிய அதிர்ச்சி அணுவணுவாக அவள் உள்ளத்தை அரித்துத் தின்று கொண்டுதானிருந்தது.

இந்தச் சமயத்தில்தான் வெளியூர் சென்றிருந்த ஸ்ரீதரனின் தந்தை ராஜிக்காக ஒரு நல்ல வரனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தார். காமுவுக்குத்தான், தன் பிள்ளை ஸ்ரீதரன் இருக்கிறானே என்கிற திடமான நம்பிக்கை அவருக்கு. இரண்டு கல்யாணத்தையும் ஒரே பந்தலில் நடத்தி விட வேண்டுமென்பது அவரது அடக்க முடியாத ஆசை.

ஸ்ரீதரனால் அதற்கு மேலும் மௌனம் அனுஷ்டிக்க முடியவில்லை. விருப்பமில்லாத காமுவை மணந்து கொண்டு அவளுடன் போலி வாழ்வு வாழ அவன் உள்ளம் ஒப்பவில்லை. தன் மனத்தில் உள்ள எண்ணத்தைத் தந்தையிடம் விட்டுக் கூறி விட எண்ணினான். தக்கதொரு சமயத்தில், காமுவுக்குப் பதில் ராஜியையே தான் விரும்புவதாகவும் கூறி விட்டான். அன்றிரவு தந்தைக்கும் மகனுக்கும் நடந்த பேச்சைக் கேட்டு அத்தனை பேரும் மிகவும் நடுங்கியே போய் விட்டனர்.



சென்னை ஜெம் & கம்பெனியின் பாகஸ்தர் ஸ்ரீ M. C. கண்ணன் அவர்களின் குமாரன் சிரஞ்சீவி அல்லின் குமாருக்கும் ஸ்ரீ D. கோபாலகிருஷ்ணன் அவர்களின் குமாரி சௌபாக்கியவதி ரவி குமாரிக்கும் சென்னையில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.

வயோதிக காலத்தில் தன் பிள்ளையின் இந்த விபரீதப் போக்கைக் கண்டு மனம் பொறுக்காத ஸ்ரீதரனின் தந்தை இரவு முழுவதும் தாங்க முடியாத மார்பு வலியினால் அவஸ்தைப் பட்டார். காமுவின் அன்பு உள்ளத்தைத் தன் மகன் உணரவில்லையே என்று ஏங்கினார். செல்லமாக வளர்த்த பெண் காமுவையும், அவள் தாயான தன் சகோதரிக்குக் கொடுத்த வாக்கையும் எண்ணும்போது அவரது இருதயமே நின்று விடும் போலிருந்தது. அவரது ஆசைக் கோட்டையெல்லாம் அஸ்திவாரமற்றுக் கீழே சாய்ந்து மண்ணோடு மண்ணாகியது.

தன் பொருட்டு, உயிருக்குயிரான தந்தையும் மகனும் போட்டுக் கொண்ட சண்டை காமுவின் உள்ளத்தைச் சல்லடைக் கண்களாகத் துளைத்தது. அத்துடன் தன் சகோதரிக்குப் போட்டியாகத் தான் மேலும் அந்த இடத்தில் இருக்கவும் அவள் மனம் விரும்பவில்லை.

பொழுது நன்றாக விடிந்து விட்டது. கொல், கொல் என்று இருமிய வண்ணம் எழுந்து உட்கார்ந்த ஸ்ரீதரனின் தந்தையின் காதில், கீழே, 'காமுவைக் காணோமே'' என்று பேசிக் கொள்வது நன்றாக விழுந்தது. அதைத் தொடர்ந்து ஒரு பெரிய இருமல் அவருக்கு வந்தது. அத்துடன் அவர் தன்னுடைய உயிரையே காறி உமிழ்ந்து விட்டார்.

அத்தனை காலம் அடைபட்டுக் கிடந்த அன்பு ஊற்று ஸ்ரீதரனின் உள்ளத்தில் பெருக்கெடுத்து ஓடியது. தந்தையின் திடீர் மறைவும், காமுவின் எதிர்பாராத பிரிவும்

அவன் உள்ளத்தையே வாட்டி வதைத்தன. காமுவைத் தேடியலைந்து அவன் மனம் சோர்ந்தது. அவள் இனிமேல் தன் கண்ணில் படுவாள் என்கிற நம்பிக்கையையே இழந்து ஸ்ரீதரன் வேதனைப்பட்டான்.

காலம் என்னும் இயற்கையின் அற்புத ஓட்டத்தில் மாருத மனக் கவலைகள் எல்லாம் தேய்ந்து கொண்டே வந்தன. ராஜி அவன் வாழ்வில் புகுந்தாள். அழகானதொரு பெண்ணையும் பெற்று விட்டான் ஸ்ரீதரன். ஆனால் பெற்றோர்கள் செய்த பாவம், பிள்ளைகள் தலைமேல் என்பார்களே, அதுதான் எத்தனை உண்மை? காமுவுக்கு அவன் செய்த துரோகத்தின் எதிரொலியைத்தான் ஸ்ரீதரன் அப்போது அநுபவித்துக் கொண்டிருந்தான்.

3

"அப்பா! அப்பா!" என்று தட்டியெழுப்பிய தன் பெண்ணின் அழைப்பைக் கேட்டதும், வாரிச் சுருட்டிக் கொண்டு தன் படுக்கையினின்றும் எழுந்திருந்தான் ஸ்ரீதரன். காலைக் கதிரவனது ஒளி கண்ணைப் பறித்தது. பொழுது நன்ருக விடிந்து விட்டது. கடந்த இரவு வெகுநேரம் வரை விழித்துக் கொண்டிருந்ததால் தன்னை மறந்து தூங்கி விட்டான்.

ஹேமாவை நிமிர்ந்து நோக்கிய ஸ்ரீதரனுக்கு ஒரு கணம் தனது கண்களின் மீதே சந்தேகம் வந்தது. அவளது முகத்திலே வழக்கத்துக்கு மாருக அளவு மீறிய மகிழ்ச்சிதான் தாண்டவ மாடிக்கொண்டிருந்தது. கால்கள் தரையில் பாவவேயில்லை. வார்த்தைகளிலே காணப்பட்ட புதுப் பரவசம் அவனைப் பிரமிக்க வைத்தது. ஆனால் இத்தனைக்கும் காரணம், அவள் கையில் டில்லியிலிருந்து அப்போது வந்திருக்கும் அவசரத் தபால்தான் என்பதை ஸ்ரீதரன் புரிந்து கொள்ள அதிக நேரம் ஆகவில்லை. கடிதத்தைப் படித்த அவனது உள்ளத்தில் விவரிக்க இயலாத இன்ப உணர்ச்சி பாவோடியது. இதற்குள் ராஜியும் அங்கு வந்து விட்டாள்.

அதில், தம் பிள்ளை சுகுமாருடைய கல்யாணத்துக்குச் சம்மதம் தெரிவித்து எழுதியிருந்தார் அவன் தந்தை. பையனுக்கு லீவ் கிடைக்காததால், தாமும் தம் மனைவியும் அங்கு புதன்கிழமை வந்து சேருவதாகவும், அதற்குள் நிச்சயதார்த்தத்திற்கு ஒரு நல்ல நாள் பார்க்கும்படியாகவும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது.

தன் பிரார்த்தனைக்கு இறைவன் செவிசாய்த்து விட்டதாக ஹேமாவின் உள்ளம் மகிழ்ந்தது. அவள் மனம் கவர்ந்த சுகுமாரே அவளுக்குக் கணவனுக வாய்க்கப் போகிருன் அல்லவா? ஆனால் அவளுக்கு அந்த அதிர்ஷ்டத்தை அள்ளிக் கொடுத்தது ஆண்டவனு? அல்லது மனித தெய்வமா?

குறிப்பிட்டபடி புதன்கிழமை காலை ஸ்ரீதரன் பங்களா வாசலில் அழகிய கார் ஒன்று வந்து நின்றது. அவர்களை வரவேற்க ஸ்ரீதரன் வாசலுக்கு வந்தான். முதலில் காரிலிருந்து சுகுமாரின் தந்தையும் அதைத் தொடர்ந்து அவரது மனைவியும் கீழே இறங்கினார்கள். அடுத்தவினாடி ஸ்ரீதரனுக்கு இந்தப் பிரபஞ்சமே தலைகீழாகத் திசைமாறிச் சுழல்வது போலிருந்தது.

"அந்த அம்மாள் யார்?" என்கிற இந்த ஒரு நிமிஷ நேர யோசனைக்குள் அவனுக்குப் பயித்தியமே பிடித்து விடும்போலிருந்தது. ஆனால் நொடிப் பொழுதிற்குள், அவள் யார் என்பதை அவன் உள்ளம் உணர்ந்து கொண்டு விட்டது.

'அதிர்ஷ்ட தேவதையின் அரவணைப்பிலே சிக்கி, செல்வச் சீமாட்டியாகக் காட்சியளிக்கும், அந்தப் பழகிய முகம், அவனால் ஏமாற்றப்பட்ட "காமு" தான்.

அனாதையாகச் சென்ற காமுவின் வாழ்வில் இப்படியொரு அதிர்ஷ்டத்தை அள்ளிச் சொரிய எந்தத் தெய்வம்தான் காத்துக் கொண்டிருந்ததோ? புரியாத புதிராக இருக்கும் அவளது வாழ்க்கையைப் பற்றிய சிந்தனையில் அமிழ்ந்து கிடந்த ஸ்ரீதரனைக் காமுவின், "நமஸ்காரம், அத்தான்" என்கிற இனிய குரல் சுய உணர்வுக்குக் கொண்டு வந்தது. அவனும் பதிலுக்கு நன்றி தெரிவிக்க விரும்பினான். ஆனால் சொற்கள் தொண்டையிலேயே பாறையாக உறைந்து விட்டன. ராஜி, காமுவைக் கட்டி யணைத்துக் கொண்ட வண்ணம் உள்ளே சென்றாள். அவள் கணவரை வரவேற்ற வண்ணம் பின்னே தொடர்ந்தான் ஸ்ரீதரன். அப்போது தன் கண்களிலிருந்து வழிந்தோடும் கண்ணீரைப் பிறர் காணாதவண்ணம் துடைத்துக் கொண்டான் ஸ்ரீதரன்.

எல்லோர் மனத்திலும் ஆனந்தம் கரை புரண்டோடியது. மத்தியானச் சாப்பாட்டின் போது, சுகுமாரின் தந்தை, "என்ன ஸ்ரீதரன், நீங்கள் கூட என் மனைவிக்கு நெருங்கிய சொந்தமாமே. அதை ஏன் நீங்கள் முன்பே என்னிடம் சொல்லவில்லை? இந்தக் கல்யாணமே அவளால்தான் நடக்கிறது. என் கூட இங்கு வந்த சுகுமாரன் ஊருக்கு வந்ததும் ஏதோ மேதாவி போல், பெண்ணைப் பற்றிப் பேசினான். என்னைக் கூட அவன் லட்சியம் செய்ய வில்லை. ஆனால் என் மனைவியின் வார்த்தைகளுக்கு அவன் என்றும் குறுக்கே நின்றது கிடையாது. சித்தியின் அபிப்பிராயம் இதுதான், என்று திடமாக அறிந்ததும், தனக்கும் சம்மதம் என்று சொல்லி விட்டான்" என்றார் அவர். அச்சமயத்தில், "காமு! என் குடும்பத்தில் விளக்கேற்றிய நீயே என் தெய்வம்" என்று ஸ்ரீதரனின் உள்ளம் முணுமுணுத்தது.

சுதந்திர பாரதத்தில் சத்யாக்கிரகம்

பாரத வாசிகளாகிய நாம் இந்நாட்டில் பிறந்ததைப் பற்றிப் பெருமை கொள்ளுகிறோம். ஆனால் எதைக் கருதி இவ்வளவு பெருமைப் படுகிறோம்! நமது நாட்டின் பூகோள அமைப்பைப் பற்றிப் பெருமை கொள்ளுகிறோமா! செல்வ நிலையைப் பார்த்துப் பெருமை அடைகிறோமா! கங்கை பாய்வதால் பெருமைப்படுகிறோமா! இப்படி யெல்லாம் யோசித்துப் பார்த்தோமானால் மேற் கூறிய எந்தக் காரணத்தை உத்தேசித்தும் இல்லை என்பது தெரியும். ஏனெனில் பூகோள அமைப்பில் நம் நாட்டைவிடச் சிறந்த அமைப்புள்ள நாடுகள் உலகில் எத்தனையோ இருக்கின்றன. கங்கையை விட நீளமும் அகலமும் கொண்ட நதிகள் பாயும் நாடுகள் எவ்வளவோ இருக்கின்றன. நம் நாட்டைவிடச் செல்வச் செழிப்புள்ள நாடுகள் எத்தனையோ இருக்கின்றன. ஆனால் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் மற்ற நாடுகள் நம் நாட்டுடன் போட்டியிட முடியாது. உலகிலேயே மிக உயர்ந்த எவரெஸ்ட் மலைச் சிகரம் நம் நாட்டில்தான் இருக்கிறது. அப்படியானால் நாம் இவ்வளவு பெருமைப் படுகிறோமே, அதற்குக் காரணம் இந்த இமய மலையும் எவரெஸ்டும் தானா! இல்லை. பின் நம் முன்னோர்களை



"அரிது அரிது பாரத வாசியாய்ப் பிறத்தல் அரிது" (துர்லபம் பாரதே ஜானுமஹ) என்று உலகத்துக்குப் பறை சாற்றச் செய்தது எது?

விஞ்ஞான உலகிலே நியூடன் மகா மேதாவி. அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இடையாது என்று உலகம் போற்றுகிறது. நெப்போலியன் என்ற சக்கரவர்த்தியைத் தோற்கடித்த விலிங்டன் என்ற போர்வீரருக்கு ஒப்பான வீரர் உலகில் இடையாது என்று சரித்திரம் கூறுகிறது.



சுரேஷ் ராம்

இப்பொழுது மகாத்மா காந்தி கூறுவதைப் பாருங்கள்:

"நம் முன்னோர்களாகிய வேதகால ரிஷிகள், ஹிம்சைக்கு நடுவிலே அஹிம்சை என்னும் தத்துவம் இயங்குகிறது என்று கண்டு பிடித்தார்கள். அவர்கள் நியூடனை விடச் சிறந்த மேதாவிகள், விலிங்டனைவிடச் சிறந்த வீரர்கள். அவர்களுக்கு ஆயுதங்களின் உபயோகம் நன்கு தெரியும். தெரிந்துமே ஆயுதங்களினால் ஒரு பிரயோஜனமும் இல்லை என்பதைக் கண்டார்கள். உலகத்துக்கு விமோசனம் ஹிம்சை வழியில் இல்லை; அஹிம்சையில்தான் இருக்கிறது என்று கண்டு போதித்தார்கள்."

இந்த உண்மையை நடைமுறையிலும் கொண்டு வந்தார்கள் அவர்கள். அதன் பயனாக பிரம்ம வித்தை என்னும் ஆத்மீக லட்சியத்தையும் நிலச் சாகுபடி, ஆடு மாடு பராமரிப்பு ஆகிய லௌகீக காரியங்களையும் அவர்களால் மேற்கொள்ள முடிந்தது. அன்று அவர்கள் புலால் உண்ணலை மறுத்ததின் காரணமாக இன்றும் நம் நாட்டில் கோடிக்கணக்கான பேர் புலால் உண்பதில்லை. நமது பண்பாட்டின் ஊற்றுக் கண்களாக விளங்கும் புலால் மறுத்தல், பிறருக்குத் தீங்கு செய்யாமை என்னும் கொள்கைகளே நம் நாட்டைப் பிற நாடுகளினின்றும் பிரித்து ஓர் உயரிய நிலையில் வைக்கின்றன. இவையே நாம் பாரதத்தைப் பற்றிப் பெருமை கொள்ளக் காரணங்களாகின்றன.

* * *

பாரதப் பண்பாட்டின் ஆதார சுருதியாக விளங்கும் இந்த அஹிம்சைக் கொள்கைக்கு நம் காலத்தில் புது வேகம் ஊட்டியவர் காந்தியடிகள். அஹிம்சை தனி மனிதர் அனுஷ்டிக்க வேண்டிய கொள்கை மட்டும் அல்ல; ஒரு பெரிய ஜன சமுதாயமே கூட்டாக அனுஷ்டிக்கலாம் என்று காண்பித்தவர் காந்தி மகான். இந்தக் கூட்டு அஹிம்சை முறைக்குசத்யாக்கிரகம்என்று பெயரிட்டவரும் அவரே.

ஆனால் ஒரு விஷயம் ஒப்புக் கொண்டுவிட வேண்டும். சத்யாக்கிரக தத்துவம் எதிர்பார்க்கும் அளவுக்கு லட்சிய புருஷர்களாக உலகத்தின் முன் நாம் உயர்ந்து விடவில்லை. எத்தனையோ குறைபாடுகள் கொண்ட மனிதர்களாகவே இருந்தோம். அதனால் சத்யாக்கிரகம் எந்த அநீதியையும் கொடுமையையும் எதிர்த்து வெல்லக்கூடிய ஆயுதம் என்று உலகத்துக்கு நிரூபித்துக் காண்பிக்க முடியவில்லை. எனினும் நமது இந்த சத்யாக்கிரகமே அரசியல் துறையில் புரட்சி யுண்டாக்கும் அளவுக்குச் சக்தி வாய்ந்தது என்று எடுத்துக் காட்டியது. அந்த சத்யாக்கிரக ஆயுதம், சுதந்திரம் அடைந்து விட்ட இன்றைய நிலையில் உபயோகமாகக் கூடிய ஆயுதமா என்பதுதான் கேள்வி.

இன்று பதவியிலும் செல்வாக்கிலுமுள்ள பல அரசியல் தலைவர்கள் 'இனி சத்யாக்கிரகத்தினால் யாதொரு பயனுமில்லை' என்று கூறி விட்டார்கள். ராணுவ பலம், சட்ட சபை அதிகாரங்கள் கொண்ட அரசாங்கமே நமது சமுதாய வாழ்வில் மாறுதல்கள், சீர்திருத்தங்கள் எல்லாம் செய்து விடும் என்று சொல்லி விட்டார்கள். ஆனால் சத்தியாக்கிரகத்தின் கர்த்தாவாகிய காந்தி மகான் 1929 லேயே கூறிய மொழிகளைப் பாருங்கள்:

"பாரத தேசம் அஹிம்சா முறையில் சுதந்திரம் பெற்றால் அது பெரிய ராணுவப் படையையோ, பெரியதோர் கப்பற் படையையோ

அதைவிடப் பெரிய ஆகாய விமானப் படையையோ நிர்வகித்து நாடாள வேண்டியிராது. சுதந்திரப் போரில் அஹிம்சா முறையில் வெற்றி காணும் அளவுக்கு அதன் ஆத்ம பலம் உயர்ந்து விட்டால் உலகில் பல மாறுதல்கள் நிகழும். யுத்த ஏற்பாடுகள் யாவும் உபயோகமற்றவை என்று உலகம் உணரும். அத்தகைய பாரதம் ஏற்படும் என்று நான் நினைப்பது பகற்கனவாக இருக்கலாம்; அஹிம்சா முறையில் சுதந்திரம் பெறும் பாரதம் உலகுக்கு உணர்த்தும் படிப்பினை இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதே என் அபிப்பிராயம்.''

காந்திமகான் வகுத்த அந்த அளவுக்கு நாம் நடத்திய சத்யாக்கிரகப் போரில் நமது ஆத்ம பலம் உயர்ந்து விடவில்லை என்பதைக் கூறத் தேவையில்லை. சமூகத்திலுள்ள மூடப் பழக்க வழக்கங்கள் அன்றிருந்தாற் போலவே இன்றும் இருக்கின்றன. உடலுழைப்பில் நாம் கொண்டிருந்த வெறுப்பு, மூளை வேலையே உயர்வு என்ற தவறான எண்ணம் யாவும் இன்றளவும் நம்மிடையே நிலவி வருகின்றன. அதிக வருவாயும் செல்வமும் உள்ளவனே இன்றும் பெரியவனாகக்கருதப்படுகிறான். நிலம் இன்னும் வியாபாரப் பொருளாகக் கருதப் படுகிறது.

• • •

மேலே குறிப்பிட்ட பிற்போக்கு எண்ணங்கள் எல்லாம் ஒழிந்து நாடு முன்னேறுவதற்கு வழிதான் என்ன? அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அதுதான் சத்யாக்கிரகம் என்று மீண்டும் சொல்லவேண்டியிருக்கிறது.

சத்யாக்கிரகம் நிறைவேற்ற வேண்டிய காரியங்கள் இரண்டு. ஒன்று அரசாங்கம் தவறுகள் இழைக்காமல் கண்காணித்து வரவேண்டும். மற்றொன்று: மக்கள் நேர்மையாக நடந்து கொள்ளும்படி செய்ய வேண்டும்.

சத்யாக்கிரகம் அரசியல் புரட்சி ஆயுத மட்டுமல்ல, மக்களுக்கு அறிவூட்டும் சாதனமுமாகும். அதனால் காந்திமகான் சத்யாக்கிரகப் போர் முறையை தர்ம யுத்தம் என்றார்.

"சத்யாக்கிரகத்தைத் தேடிக் கொண்டு ஒருவர் போக வேண்டிய அவசியமே இல்லை. அது தானாகவே வந்து அடைகிறது. அதுதான் அதன் சிறப்பு. இதன் உள்ளடங்கி யிருக்கும் தத்துவமே இதுதான். தர்மயுத்தத்தில் காப்பாற்றப்பட வேண்டிய ரகசியங்கள் கிடையாது; சூழ்ச்சி, தந்திரத்துக்கு வழி இல்லை; பொய்ம்மைக்கு இடம் கிடையாது. தர்ம யுத்தம் நம்மை நாடி வருகிறது. ஆண்டவன் மீது பக்தி செலுத்தும் மனிதன் அதைச் சமாளிக்க எப்பவுமே தயாராக இருக்கிறான். முன்கூட்டியே திட்டம் வகுத்துப் போடப்படும் யுத்தம் தர்ம யுத்தம் ஆகாது. தர்ம யுத்தத்தில் திட்டம் போடுபவன் ஆண்டவன்; போர் நடத்துபவன் அவன். தர்ம யுத்தம் கடவுளின் பேரால்தான் போட முடியும். சத்யாக்கிரகி சண்டையிட்டுச் சண்டையிட்டுக் களைத்துப் போய், நாற்புறமும் இருளைத் தவிர வேறு ஒன்றும் காணாத கையற்ற நிலையிலிருக்கும் போதுதான் ஆண்டவன் அவனுக்கு உதவ முன் வருகிறான். ஆம், தன் காலடியிலிருக்கும் மண்ணைவிட அற்பமானவனாக எப்பொழுது தன்னைக் கருதுகிறானோ அந்த நிமிஷத்தில் ஆண்டவன் உதவ முன் வருகிறான்.''

• • •

இந்தச் சோதனைகளைக் கொண்டு சென்ற எட்டு ஆண்டுகளாக நம் நாட்டில் நடந்த சத்யாக்கிரகங்களைப் பார்த்தால் அவை யெல்லாம் பெயரளவில் சத்யாக்கிரகங்களே தவிர வேறு அல்ல என்பது தெரியும். உண்மை சத்யாக்கிரகத்தின் எல்லாச் சோதனைகளிலும் வெற்றி பெற்று நடக்கும் இயக்கம் ஒன்றே ஒன்றுதான். அதுதான் வினோபா அடிகள் நடத்தும் பூதான இயக்கம். முன் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் சத்யாக்கிரகத்துக்கு எவ்வளவு தேவை இருந்ததோ அதைவிட அதிகமாகவே இப்பொழுது தேவையிருக்கிறது.

முன்பிருந்த சூழ்நிலை இப்போது இல்லை. அன்னிய ஆட்சியிலிருந்து அதிகாரத்தைப் பறிக்க வேண்டும் என்ற தொல்லை இப்பொழுது இல்லை. இப்பொழுது அதிகப்படியாகத் தொல்லை ஏற்பட்டால் அதிகாரத்திலிருக்கும் கட்சியை வீழ்த்தி விட்டு வேறு கட்சியை அதிகாரத்தில் வைக்க வேண்டிய தொல்லைதான் இருக்கும். இந்தக் காரியத்தைச் சாதிக்கத் தேர்தல்கள், வரிகொடாமை, ஒத்துழையாமை முதலியவை இருக்கவே செய்கின்றன. ஆனால் முக்கியமான மாறுதல் சமுதாயத்தின் அடித்தளத்திலிருந்து செய்ய வேண்டியிருக்கிறது. மக்களுக்கு அறிவு புகட்ட வேண்டும், அவர்கள் சக்தியை நல்ல வழியில் திருப்ப வேண்டியிருக்கிறது. இதைச் சாதிப்பது பூதானம்.

பிரிட்டிஷ் ஆட்சியில் நடத்தப்பட்ட ஒத்துழையாமை வேகம் கொண்டிருந்தது. ஆனால் வினோபா இப்பொழுது நடத்தும் சத்யாக்கிரகத்தில் நிதானம் அதிகம்.

"நமது அன்புடன் கலந்த நிதான முறை சத்தியாக்கிரகம் எதிர்பார்க்கும் பலன் அளிக்கவில்லை எனில், குறைபாடு நம்முடைய அன்பில் தான் இருக்கிறது என்று உணர வேண்டும். பின்னர் இன்னும் அதிக அன்பு, அதிக அன்பு, என்று செலுத்த வேண்டும். இப்படிச் செய்யும் சத்யாக்கிரகத்தின் சக்தியும், பலனும் நாளுக்கு நாள் அதிகமாகும்!'' என்கிறார் வினோபா.


அதனால் சுதந்திர பாரதத்தில் சத்யாக்கிரகம் மிக மிக அவசியமானதாக இருக்கிறது. நியாய வாழ்வுக்கும், சேவை புரியவும் சத்யாக்கிரகம் முடிவற்ற வழி வகுத்து விடுகிறது.

கடைசியில் காந்தியடிகளுடன் நாமும் சேர்ந்து பிரார்த்தனை செய்வோமாக.

"அஹிம்சையைக் காங்கிரஸ் கட்சி தனது கொள்கையாகக் கொண்டது. அந்தக் காங்கிரஸ் மூலமாக பாரதம், உலகத்துக்கு வழி காட்ட வேண்டும். அஹிம்சைக் கொள்கையின் காரணமாகத் தினமும் உலகத்துக்கு, தனி நபர்களின் விஷயங்களில் மட்டுமல்ல தேசிய விஷயங்களிலும் ஆத்மாவே முடிவில் வெல்வது என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும் என்று விரும்புகிறேன்.''

காந்திமகானின் பிரார்த்தனை நிறைவேறும் என்று நம்புவோமாக!


சூப்பர்
இந்தியா
டயர்களையே
கேட்டு
வாங்குங்கள்
"டயர்களில் மிகச் சிறந்தவை"


கஷ்டமான நாட்களில்
ஆச்சரியமான நிவாரணி
ஸாரிடான்
வலியை
விரட்டுகின்றது
நிவாரணமளிக்கிறது
ஸாரிடான், வலியை உடனே நீக்குகிறது—பெரும்பாலும் ஒரு இரண்டு வில்லைகளே போதும்.
இதமளிக்கிறது
ஸாரிடான், உங்கள் நரம்புகளுக்கு சாந்தியளிக்கிறது. வலியினால் உண்டான கஷ்டமான உணர்ச்சியை நீக்க உதவுகிறது.
தெம்பூட்டுகிறது
ஸாரிடான், உங்களுக்கு இலேசாக உற்சாகமளிக்கிறது. சில நிமிஷங்களில் மறுபடியும் சோம்பலாகவும், பலத்துடனும் உணரச் செய்கிறது!
வயிற்றுக்கோளாறுகளோ, பின் தளர்ச்சியோ கொடுப்பதில்லை.
பெண்கள் 'அந்த கஷ்டமான நாட்களில்' ஸாரிடானை ஒரு ஆச்சரியமான உதவியாகக் கொள்கிறார்கள். ஸாரிடான் உங்கள் வயிற்றைக் கெடுக்காமலும், சோர்வு உண்டாக்காமலும் பெரும்பாலும் உடனேயே வலியிலிருந்து நிவாரணம் அளிக்கிறது.
ஆனால் இது அத்துடன் நிற்காமல் மேற்கொண்டும் உதவியளிக்கின்றது. அனேகம் பெண்கள் உணரும் கவலையான நிலைமை நிறைந்த நேரத்திற்கெல்லாம் தணிக்கும். பின் உங்களை நிதானத்துடனும் சந்தோஷமாயுமிருக்கச் செய்கிறது. விரைவில் நீங்கள் தெம்புடனும் மறுபடியும் சுறுசுறுப்புடனும் இருப்பீர்கள்.
உங்களிடம் எப்பொழுதும் கொஞ்சம் ஸாரிடான் வில்லைகளை வைத்திருங்கள். இது ஏன் சாதாரண வலி மருந்தினின்றும் சிறந்தது என்பதை உணருவீர்கள்.
ஒரு வில்லை 2 அணா
ஒவ்வொரு வில்லையும் ஒரு பூர்த்தியான டோஸ்.
ஆஸ்பிரின் கலக்காதது.
(அஸிடில் ஸாலிஸிலிக் ஆஸிட்)
ஸாரிடான் ரேடியோ தரங்—ஸாரிடான் சார்பில் அளிக்கும் சிறந்த சினிமா நிகழ்ச்சியை ரேடியோ ஸிலோனில் ஒவ்வொரு கிழமை இரவு 8 மணிக்கு 41 மீட்டர்களில் கேளுங்கள்.

டி. கே. சி. யின் கடிதங்கள்

திருக்குற்றாலம்
15—9—43

வேலையென்று ஒன்று வந்துவிட்டால் பிசாசைப் பிடித்துக் கொள்ளுகிறது என்று சொல்லுகிறீர்கள். முருகப் பெருமானிடத்துள்ள பக்தி போலத்தான்.

தங்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் இருவர்—ஒருவர் **பேயாழ்வார்**; மற்றவர் **குலசேகர ஆழ்வார்**. குலசேகர ஆழ்வார் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதைப் பாருங்கள்.

பேய ரே எனக் கு
யாவரும்; யானும் ஓர்
பேய னே எவர்க் கும் —
இது பேசி என்?
ஆய னே அரங் கா!
என்ற ழைக்கின் றேன்
பேய னாய் ஒழிந் தேன்
எம்பி ரானுக் கே!

இந்தப் பாசுரம் பக்தி நிலை இன்னதென்று நன்றாய்க் காட்டுகிறது. தங்களுடைய மனசுக்கு மிகவும் உவந்த பாடல். தாங்கள் பாடினால் Autobiographical என்றுதான் என்போலியருக்குச் சொல்லத் தோன்றும். பாட வேண்டிய அவசியம் இருக்கலாம் என்று அலகு பிரித்திருக்கிறேன்!

* * *

குற்றாலத்திலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் **இலஞ்சிக் குமரர் கோயில்** என்று வெகு அழகான ஸ்தலம்; இயற்கை வனப்பையும் வளத்தையும் பார்த்துத்தான் ஆசாமி முருகன் அங்கே வந்து சம்மணம் போட்டு உட்கார்ந்து கொண்டாரோ என்று சொல்லத் தோன்றும். கோயில் உள்ளும் புறமும் மனசைக் கவரும்படி அமைய வைத்திருக்கிறார்கள். மூர்த்தி காட்சி கொடுக்கிற தென்றால் பேசவே செய்யும். நல்ல கவிகள் நம்மிடம் பேசுகின்றன அல்லவா, அந்த முறையில் மூர்த்தி பேசும். அகப்பட்டுக் கொண்டால் தீர்ந்தது தான் காரியம். மீளுவது ரொம்பக் கஷ்டம்.

இந்த ஸ்தலத்துக்குப் போனேன். உடம்பு இடம் கொடுத்தது. மாலை எட்டு மணிக்குச் சேவை. கார்த்திகையான நாள் தீபாலங்காரம் ஒரே ஜோதி மயமாய் இருந்தது. எல்லாருமே மிக்க ஆசையோடு அனுபவித்தோம். இதை எழுதும்போதும் காட்சி அப்படியே வந்து கண்முன் நிற்கிறது.

தாங்கள் அங்கே ஒரு தரம் வரவேணும் என்று தர்மகர்த்தா-நல்ல சில முன்னவர்- சொன்னார். "ஏன் ஒரு தடவை? பல தடவை வருவார்கள். பஜனையெல்லாம் கோலாகலமாய் நடத்த வேண்டும்" என்று சொல்லியிருக்கிறேன்.

பிரசாதம் இத்துடன் அனுப்பியிருக்கிறேன்.

டி. கே. சிதம்பரநாதன்

தெய்வப் பணி!



லை. சுப்ரமண்யன்

பட்டாணிக் கடை வாசலில் ஒரு நாள் சாயங்காலம் நின்று கொண்டிருந்தேன். கடைக்காரர் எனக்காகச் சூடாகப் பட்டாணியை ஒரு காகிதத்தில் மடித்துக் கொண்டிருந்தார்.

கடை வாசலில் ஒரு பஜனை கோஷ்டி வந்து நின்றது. பஜனை கோஷ்டியின் பிரதானமான அம்சங்கள் இரண்டு ஜோடி ஜாலராக்கள், ஒரு ஹார்மோனியப் பெட்டி, ஒரு மிருதங்கம்—இவைகள்தான். வயசான கிழவர் ஒருவர் ஹார்மோனியத்தைக் கழுத்தில் சுமக்க மாட்டாமல் கட்டிச் சுமந்து கொண்டே அதை வாசித்துக் கொண்டிருந்தார்.

பட்டாணிக்காக நான் ஓரணா கொடுத்தேன். அதை வாங்கின கடைக்காரர் அப்படியே அதை வாசலில் தண்டலுக்கு வந்து நின்றிருந்த பையனிடம் கொடுத்தார். அவன் அதைக் கொண்டு போய் பஜனை கோஷ்டி முன் நிறுத்தியிருந்த 'ஸ்டாண்ட் தீவட்டி'யில் எண்ணெய்க்குள் போட்டு விட்டான். அதிலே இன்னும் நிறைய நாணயங்கள் கிடந்தன. கார்ப்பொரேஷன் விளக்குகள் கூட இன்னும் தெருவில் எரிய ஆரம்பிக்கவில்லை. ஆனால் இந்தப் பஜனை தீவட்டி ஜ்வாலை விட்டு அதற்குள்ளாக எரியத் தொடங்கி விட்டது.

"என் வியாபாரத்தினால் உங்களுக்குப் பைசாக் கூட லாபமில்லாவிட்டாலும் கூட ஓரணா முதலும் அல்லவா நஷ்டமாகிவிட்டது!" என்று கடைக்காரரிடம் சொன்னேன்.

"இப்படியே இந்தப் பேட்டையிலே போட்டுப் பழக்கமாகப் போச்சுங்க. தேவர் இருந்தாரே, அவராலே வந்தது இந்த நடப்பு."

"எந்தத் தேவர்!"

"சுந்தரலிங்கத் தேவர்! அவரை உங்களுக்குத் தெரியாதுங்களா! இந்த ஊரு பஜனை மடம் அவுரு பேராலேதான் நடக்குது!"

"எனக்குத் தெரியாது. நான் இந்த ஊருக்கே புதிசு."

"ஓ! அதுதான் அப்படிக் கேக்குறீங்க...ம்... தேவருதான் இந்தப் பஜனை கோஷ்டிக்கெல்லாம் ஆதிகர்த்தாவா யிருந்தாருங்க. இவங்களெல்லாம் வவுத்துக்காகப் பஜனை பண்றவங்க. என்னமோ அவுரு பேரைச் சொல்லிக்கிட்டு வருகிற கோஷ்டிக்கெல்லாம் 'இல்லே'ங்காமே போட்டுடறது வாடிக்கைங்க...... மனுஷன் இந்த ஊரிலே ஒரு பொது பஜனை மடம் கட்டணும்னு ஆசைப்பட்டாருங்க......ஏதோ... நினைப்பு வந்ததை யெல்லாம் சொன்னா ஒரு கதை போலிருக்குங்க. மனுஷனுக்கு மனுஷன், தகப்பனுக்குப் பிள்ளை எப்படி லோகத்திலே வித்தியாசப்படுது தெரியுங்களா...!" என்று, பட்டாணிகளை இரு கைகளாலும் அளந்துக் கும்பாரமாக்கிக் கொண்டே சொன்னார்.

"பட்டாணிக்காரரே! கதையை வரிசையாக முழுக்கச் சொல்லுங்க. கேக்கறேன். எனக்கு ஒண்ணும் ரயிலுக்குப் போக வேண்டியதில்லே, இப்போ" என்றேன். அப்புறம் அவர் கதையைச் சொன்னார்:

*　　　*　　　*

சுந்தரலிங்கத் தேவர் அரைக் காசு சம்பாதித்தாலும் அரசாங்கத்தில் வேலை செய்து விட்டு 'ரிடையர்'ஆகி, 'பின்ஷன்' வாங்கிக் கொண்டிருந்தார். டபேதார் சுந்தரலிங்கம் என்றால் அந்தப் பேட்டையில் யார் வேண்டுமானாலும் யாருக்கும் அடையாளம் சொல்லி அனுப்பும்படி ஒரு கணிசமான வீடு கட்ட ஆசைப்பட்டிருந்தார் தேவர். அந்த ஆசையும் நிறைவேறி விட்டது. இரண்டாயிர ரூபாயில் ஒரு வீடு கட்டிக்கொண்டு விட்டார். பிக்கப் பிடுங்கல் இல்லாமல் ஒரே பையன். தேவர் அவனை டவுனுக்கு அனுப்பிப் படிக்க வைத்துப் பார்த்தார். படிப்பு அவனைக் கண்டு பயந்தது!

"தம்பி, உனக்கு அந்த வம்புத் தண்டாவெல்லாம் வேண்டாம். ரெண்டு உழவுக் கட்டையை வாங்கி உன் தலையிலே கட்டிடறேன். அதை மேய்ச்சுக்கிட்டு, ஊரிலே இருக்கிற பத்து மா நெலத்தைப் பார்த்துக்கிட்டு சிவனேன்னு இரு. எனக்கும் உனக்கும் சோத்துக்கும் துணிக்கும் கவலை இல்லே" என்று கூறினார்.

"எனக்கும் அது உத்தமம்னு படுதுப்பா" என்று ததாஸ்து பாடி விட்டான் பையன். பையனுக்கு இப்படி ஒரு 'வழியைக் காண்பித்து'க் கொடுத்து விட்டதில் தேவருக்குப் பரம திருப்திதான். இனிமேல் அவருக்கு என்ன வேலை! அவருக்குப் பொழுது எப்படிப் போகும்!

இதற்கு வழி கண்டு பிடிக்கத் தேவர் சிரமப்படவில்லை. அவர் சிறந்த பக்திமான். நல்ல படிப்பாளி. தேவாரம், திருப்புகழ் எல்லாம் கரைகண்டு வைத்திருந்தார். பொழுது போகவில்லையே என்று ஒருநாள் ஜாலராக்களை எடுத்துக் கொண்டு, பிள்ளையார் கோயில் என்று சொல்லப்பட்டு வந்த கொட்டகைக்கு முன்னால் போய் உட்கார்ந்து கொண்டு பஜனை பண்ணத் தொடங்கினார். அன்று முதல் அவருடன் பாடி, பஜனை பண்ண ஒரு பெரிய கோஷ்டி சேர்ந்து விட்டது.



பஜனை கோஷ்டி சில நாட்களில் வீதி பஜனை செய்யவும் ஆரம்பித்து விட்டது. முப்பது பேருக்குக் குறையாத அந்தக் கும்பல் தெருவையே யடைத்துப் போவதைப்பார்த்தால் ஏதோ காலாட்படை அணிவகுத்துப் போகிறாற்போல் இருக்கும். ஆனால், தேவரின் மதுரமான கண்டத்திலிருந்து 'கிண்கிண்'ணென்று பிறந்து வருகிற நாமாவளிச் சந்தத்தை அவர்கள் முறை வைத்துப் பெரிதாக்கும்போது கந்தர்வ கோஷ்டி பூலோகத்தில் இறங்கி யிருக்கிறதோ என்று எண்ணத் தோன்றும்.

பத்து வருஷங்கள் தாண்டிவிட்டன. இந்தப் பத்து வருஷ காலத்தில் எத்தனையோ மாறுதல்கள் நிகழ்ந்து விட்டன. தேவரின் பத்து மாநிலத்தை அவர் பையன் அழிக்க முடியுமா என்று பரிசோதனை செய்து பார்க்கத் தொடங்கி வெற்றி யடைந்து விட்டான். பத்துமா நிலத்தோடு கூடச் சில மாதங்களுக்குப் பிறகு வீடும் போய் விட்டது.

இதெல்லாம் சாதாரண மாறுதல்கள். சுந்தரலிங்கத் தேவர் திடீரென்று ஒரு நாள் இரண்டு கண்களையும் இழந்து விட்டார். படுக்கக்கூடச் சாண் இடம் இல்லாத அவர் பிள்ளையார் கோயில் வாசலில் படுத்திருந்தார். ஒரு நாள் இரவு. மின்னல் அவர் கண்களைக் கௌவிக் கொண்டு போய் விட்டது. பரிதாபத்துக்குரியது இந்த மாறுதல்.

ஆனால் அவர் பஜனையில் மாறுதல் இல்லை. தேவாரமும், திருவாசகமும், திருப்புகழும் பாடி அவர் ஆண்டவனைத் துதிக்கிறதிலே மாறுதல் இல்லவே இல்லை.

தேவருக்கு ஒரு நாள் ஒரு ஆசை ஏற்பட்டது. ஊருக்குப் பொதுவாக ஒரு பஜனை மடம் கட்ட வேணும் என்று விருப்பம் கொண்டார் அவர்.

"இது என்ன பிரமாதங்க, தேவரே! உங்க விருப்பத்தை யாராவது ஒரு பெரிய மனுஷன் கிட்டே சொன்னால் நிமிசத்திலே கட்டி முடிஞ்சுடும்" என்று யாரோ ஒருவர் சொன்னார்.

"அப்படிக் கட்ட ஆசைப்படல்லே தம்பி நான். வீதி பஜனையிலே சேகரம் பண்ணிப் பணம் கண்டு புடிச்சுக் கட்டணும். ஊர்ப் பொது மக்கள் கொடுக்கிற காசிலே கட்டின பொது மண்டபமா இருக்கணும். அது தனிப்பட்ட மனுஷன் யாருக்கும் சொந்தமாகவே இருக்கக் கூடாது!" என்றார் தேவர்.

அன்று முதல் தினசரி இரவு பஜனை நடந்தது. ஊர் வீதிகள், சந்து பொந்துகளிலெல்லாம் கோஷ்டி பஜனை பண்ணிக் கொண்டு போய், காலணாவாகவும் பைசாவாகவும் பணம் சேர்த்தது. தேவர் அருமையாக ஹார்மோனியம் வாசிப்பார். கண் பார்வை இழந்த பிறகு ஹார்மோனியத்தை இரண்டு பேர் இரண்டு பக்கங்களிலும் அவருக்கு நேராகப் பிடித்தபடி நகர்வார்கள். தேவரின் விரல்கள் ஹார்மோனியத்திலே நர்த்தனமாடி அருமையான சங்கீதத்தை வாரி வழங்கித் தரும். கடைக்குக் கடை தீவட்டிகளிலே எண்ணெய் விடுவார்கள்; அரிசி வசூல் பண்ணினவர்கள் மூட்டை மூட்டையாகச் சேர்த்தார்கள். தேங்காய்கள் குவிந்தன. எல்லாம் அப்போதைக்கப்போது தேவரின் அநுமதியுடன் பணமாக்கப்பட்டன.

ஆயிரம் ரூபாய் சேர்ந்து விட்டது. மடம் கட்டப் பணம் போதுமென்று சொல்லி விட்டார் தேவர். ஆனால், உடனே கட்ட வேலை தொடங்க முடியாதபடி மழை கொட்டிக் கொண்டிருந்தது.

இந்தப் பெரு மழை சமயத்தில் ஒரு துக்க சம்பவம் நிகழ்ந்து விட்டது. தேவர் காலமாகி விட்டார். சமீப காலமாக அவர் இருப்பிடம் பெரிய கோயிலில் வெளி மண்டபத்தில் போட்டிருந்த வாகனத்துக்குப் பக்கத்தில்தான்.

அவரது அந்திமக் கிரியைகள் செய்வதற்காக அவர் பையன் முத்துவைத் தேடிப் பார்த்தார்கள். ஆள் விலாசமே தெரியவில்லை. ஆனால் எல்லாம் நடந்து முடிந்து ஒரு மாதம் ஆன பிறகு அவன் தென்பட்டான். எல்லாம் போன பின் மிஞ்சிய அவனுடைய தென்னந்தோப்பில் நாலு ஆட்களை வைத்துக் கொண்டு கட்டடத்துக்குக் 'கடைக்கால்' பறித்துக் கொண்டிருந்தான்.

அவனைக் கண்ட ஒருவர் கேட்டார், தகப்பனார் தகவல் தெரியுமா என்று.

"தெரியாமே என்ன! எல்லாம் தெரியும்! அதென்ன அப்படிக் 'காலமாயிட்டார்'னு மதிப்பு இல்லாமே சொல்றீங்களே. 'ஆண்டவன் தன் பாதார விந்தங்களில் ஏற்றுக் கொண்டார்'னு சொல்லுங்க. ஆண்டவனை வேரோடே பறிக்கிற மாதிரி பஜனை பண்ணிக்கிட்டிருந்தாரே, பெத்த மவனைக் கூடக் கவனிக்காமே!......"

"போவுது! போனவரைப் பத்தி ஒண்ணும் சொல்லாதே! இப்ப என்ன, வீடு கட்டக் 'கடகால்' பறிக்கிறியா!"

"வீடு கட்டப் பவுஷு ஏதுங்க! டீ ஸ்டால் வைக்கப்போறேன். அப்பா பஜனைபண்ணினால் மவன் டீக்கடை வைக்காமே வேறு என்ன பண்ண முடியும்!" என்றான் அவன்.

"பணம்...ஏதோ...இதுக்கு மட்டும் சேர்த்து வைச்சிருந்தே போலிருக்கு!"

"சேர்க்கிறது ஏது! மீந்து வைக்கிறது ஏதுங்க! கடைசிக் காலத்திலே அப்பாரு ஒரு ஆயிரம் ரூபாய் கொடுத்தாரு. அவருகிட்டே கொடுத்து வைச்சிருந்தேன்......"

கேட்டுக் கொண்டிருந்தவரின் ஞாபகம் பஜனை வசூல் பணம் ஆயிரம் ரூபாய் மேல் படர்ந்தது. அதற்கு மேல் அதிக நேரம் முத்துவிடம் பேசிக் கொண்டிருக்க வில்லை. நழுவி விட்டார்.

ஆயிர ரூபாய் விஷயம் தீப்போல் பரவிற்று. வசூல் தொகை கடைசிக் காலத்தில் தேவரிடம் தானிருந்தது. தேவர் பஜனை மடம் கட்டத் தான் சமயத்தை எதிர்பார்த்துக் கொண் டிருந்தார். எப்படியோ விஷயம் அறிந்த முத்து தேவரை மிரட்டிப் பணத்தைப் பறித்துக் கொண்டு போயிருக்கிறான்!

ஊரில் பெரிய மனிதர்களா யிருந்த நாலு பேர் அதட்டி மிரட்டி முத்துவை உண்மையைச் சொல்லும்படியும், பஜனை மடத்துப் பணம் அவனிடமிருந்தால் கொடுத்து விடும்படியும் சொன்னார்கள்.

"எங்க அப்பா பஜனை, பண்ணின மாதிரி தான் இருக்குது நீங்க பேசறது. வேணுமானா கோர்ட்டிலே கேஸ் போட்டுக்கிடுங்க. அங்கே வந்து உங்களுக்குப் பதில் சொல்கிறேன்" என்று விறைப்பாகப் பதில் சொன்னான்.

* * *

தீகப்பனாரைக் கௌரவப்படுத்தவோ என்னவோ அவர் பெயரில் 'தேவர் டீ ஸ்டால்' என்றுதான் முத்து கடையைத் தொடங்கி யிருந்தான். அந்த இடத்தில்தான் பஜனை மடம் கட்ட வேண்டுமென்றிருந்தார் தேவர்.

'தேவர் டீஸ்டா'லில் இன்னொரு புதுமை என்னவென்றால், டீ குடித்து விட்டுப் போனவர்களிடமிருந்து காசை வாங்கிப் பெட்டிக்குள் போட்டுக் கொண்டிருந்தவள் ஒரு சிங்காரி என்பதுதான்.

பக்கத்து டவுனில் ஒரு டீக்கடையில் வேலை செய்து கொண்டிருந்தபோது முத்து அவளை அடிக்கடி சந்திக்க நேரிட்டது. அந்தக் கடைக்குப் பால் விற்றுக் கொண்டிருந்தவள் அவள். அவளுக்கும் முத்துவுக்கும் சிநேகம் ஏற்பட்டு விட்டது. அவர்கள் சிநேகம் கடைசியில் முத்து அந்தக் கடையை விடும்படி கொண்டு விட்டது. அந்தக் கடைக்காரனுக்கு அந்தப் பெண் கோவிந்தம்மா மேல் ஒரு கண். அதனால் அவனுக்கும் முத்துவுக்கும் பகை.

இப்போது முத்துவின் சொந்த டீக்கடையில் அவள் வைத்ததுதான் சட்டம். கோவிந்தம்மாளும் ஜோராகத்தா னிருந்தாள். 'வாழ வாழ' வென்று வளர்ந்த சரீரம். கட்டுவிடாத உடல் அமைப்பு. இளமை அவள்மேல் பொங்கிக் கொண்டிருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக அவள் அந்த அழகான பல் வரிசை தெரியச் சிரித்தபடி முகத்தை எப்போதும் எடுப்பாக வைத்துக் கொண்டிருப்பாள். அந்த எடுப்புக்குத் தான் எல்லாரும் அடிமையாகப் போனார்கள்.

கடை வைத்து ஒரு மாசம் ஆகியிருக்கும். வியாபாரம் கொழித்திருந்தது. அத்தனைக்கு அத்தனை முத்துவிடம் அவன் பகையாளியின் பகையும் வளர்ந்திருந்தது. கடைசியாக டீக்கடைக்கு வரும் வாடிக்கைக்காரர்கள் கொணர்ந்த செய்தி இதுதான்:

"இந்தப் பொண்ணு கோவிந்தம்மா விஷயமா கொலை நடந்திடும் போலிருக்கே. முத்து பாடு ஆபத்தாகல்லவா இருக்கு!"

* * *

வழக்கம்போல் ஒருநாள் டீக்கடை முன் கண்விழித்த ஒரு ஆசாமிக்குப் பெரிய ஏமாற்றமா யிருந்தது. கடை துப்புரவாகக் காலியாகக் கிடந்தது. 'பாய்ல'ரைக் காணோம். மேஜை நாற்காலிகளைக் காணோம். முத்துவையும், கோவிந்தம்மாவையும் கூடக் காணோம். புதுசாய்க் கட்டின டீக்கடைக் கட்டடம் புதுத் தோற்றமே அளித்து நின்றது.

கிழக்கு வெளுக்க வெளுக்க ஏதோ சுவரில் எழுதியிருப்பது போலத் தெரிந்தது.

"தேவர் டீ ஸ்டால்' என்ற விளம்பரப் பலகைகூடத் தென்படவில்லை. அங்கே கூட்டம் கூடிவிட்டது கடை முன்னால். வெள்ளைச் சுவரில் காவியினால் 'கோணமாணு' என்று எழுதி யிருந்ததை ஒருவர் கிறுக்கிப் படித்தார்:

"முத்து அத்தான்மேலே கொலை விழுமின்னு தீர்மானம் பண்ணி நானும் அவரும் ராவுக்கு ராவே ஓடிப்போறோம். நான் அவரைத்தான் கட்டிக்கப் போறேன். எங்களை யாராலும் தேட முடியாது. இன்னொண்ணு: முத்துவே சொல்லிச்சு. பஜனை மடத்துப் பணத்தை அதும் அப்பாருகிட்டே யிருந்து பிடுங்கி இந்தக் கட்டடம் கட்டி யிருக்காம். இந்தப் பாவத்தினாலேதான் கொலை விழும்னு பயந்துது. இதைப் பஜனை மடமாகவே நினைக்கணுமிலே எல்லாரும் நடத்தணும்னு சொன்னுது. இது ஊருக்குச் சொந்தமான பஜனை மடம்தான். தேவர் மடம். —கோவிந்தம்மா."

* * *


பட்டாணிக்கடைக்காரர் கதையை முடித்து விட்டார்.

"தேவர் பக்தி எப்படிப்பட்ட பக்தி, பார்த்தீங்களா!" என்றார் அவர்.

"எனக்குப் படுகிற ஒன்றைச் சொல்லுகிறேன், கேளுங்கள். தேவரைப் பற்றி நீங்கள் சொன்னமாதிரியே நானும் சொல்கிறேன். அந்தக் கோவிந்தம்மாவும் ஒரு தெய்வாம்சம் தான். அவளை உத்தேசம் பண்ணி ஊரை விட்டு ஓடத் தயாராயிருந்த முத்து, தேவரையும், அவர் பக்தியையும், ஊருக்குப் பொதுவான பஜனை மடத்தையும் எண்ணி ஓடத் தயாரா யிருந்திருப்பானா, சொல்லுங்கள்!" என்று கூறினேன்.

"வாஸ்தவந்தாங்க!" என்றார் பட்டாணிக் கடைக்காரர், என் பேச்சை ஆமோதித்து.


தேக ஆரோக்கியத்தை ப்ளிட் உபயோகிப்
பதின் மூலம் பாதுகாருங்கள்
1 வீட்டிலுள்ள பூச்சிகள் அனைத்தையும் கொல்லுகிறது....ஒரு சில பூச்சிகளைத் தான் கொல்லும் என்றில்லை
FLIT
2 நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு அணுவுக்கும் அதிகமான பூச்சி களைக் கொல்லுகிறது
FLIT
FLIT
D.D.T.
KILLS
Esso
மலேரியா, டைபாயிட், காலரா முதலிய பல வியாதி களைக் கொண்டுவரும் பூச்சிகளை இது கொல்லுகிறது
சிவப்பு, வெள்ளை, நீல நிறமும் கொண்ட டின்னில் கிடைக்கும்
V. 1529
ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி



ஸ்வஸ்திக் மருந்தாக உதவும் காஸ்டர் ஆயில்
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ், லிமிடெட்

அந்த இருமலை ஜெப்ரால்

காப் ஸிரப்பினால் அடக்குங்கள்



'ZEPHROL'

Trade Mark Brand

COUGH SYRUP

துன்புறுத்தும் இருமலிலிருந்து
விடுவித்து நிம்மதி யளிக்கிறது
சக்தி வாய்ந்தது★பயமற்றது★ருசிமிகுந்தது
இது ஒரு எம் & பி தயாரிப்பு

Manufactured by: **MAY & BAKER LTD**
Distributed by: **MAY & BAKER (INDIA) LTD**
Bombay - Calcutta - Gauhati - Madras - New Delhi



13. யாரது? ரமணியா!

ஜிப்பாக்காரரைப் பார்த்து, "உங்கள் பெயர் என்ன?" என்று மதுரநாயகம் கேட்டதும் சப் - இன்ஸ்பெக்டரே அந்தக் கேள்விக்குப் பதில் சொன்னார்.

" இவர் பெயரா? தங்கமூடி போட்ட உங்கள் பேனாவைக் கொண்டு வந்து தந்த இவர் பெயரே தங்கவேலுதான்....! சரி, இப்போது உங்கள் சந்தேகமெல்லாம் தெளிவாகி விட்டதல்லவா? ' அது மதுரநாயகத்தின் பேனாதான். போஸ்டாபீஸில் தங்கவேலுவிடம் கொடுத்ததைத் திருப்பி வாங்காமல் அவசர வேலையாகப் போய் விட்டார். யாரிடம் கொடுப்பது என்று தெரியாததால், தங்கவேலு இங்கு கொண்டு வந்து கொடுத்து விட்டார். 'மதுர நாயகம், மறதியால் தமது வீட்டில் இருந்த ரமணிதான் திருடி விட்டான் என்று நினைத்துப் போலீஸில் தகவல் கொடுத்தார். இப்போது, அவர் தவறை உணருகிறார். பேனா அவருடையதுதான். அவரிடமே திருப்பிக் கொடுத்து விடலாம்'— இதே போல் போலீஸ் - கமிஷனர் ஆபீஸுக்கு எழுதி அனுப்பி விடுகிறேன். மிஸ்டர் மதுரநாயகம், இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் உங்களுக்குக் கமிஷனர் ஆபீஸிலிருந்து கடிதம் வரும். அதை நேராக எடுத்துக் கொண்டு போய்க் காட்டினால் பேனாவைத் தருவார்கள். என்ன, சரிதானா?" என்று கேட்டார்.

" சரி சார், உங்களுக்கு ரொம்ப சிரமம். மிஸ்டர் தங்கவேலுவுக்கும் அதிக சிரமம் கொடுத்து விட்டேன். மன்னிக்க வேண்டும் " என்று கூறி விட்டு, அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார் மதுரநாயகம்.

அப்போது சரியாக மணி இரண்டரை. மதுரநாயகத்துக்கு நல்ல பசி. ஆனாலும், அவர் பசியைத் தீர்த்துக் கொள்ள நேராக வீடு செல்லவில்லை. வீட்டுக்குச் சிறிது தூரத்தில் உள்ள போலீஸ் ஸ்டேஷனை நோக்கியே வேகமாகச் சென்றார். ரமணி பேனாவைத் திருடிக் கொண்டு ஓடிப் போய் விட்டதாக பாஸ்கரனும் மதுரநாயகமும் அங்குதான் 'ரிப்போர்ட்' கொடுத்திருந்தார்கள்.

அந்தப் போலீஸ் ஸ்டேஷனை அடைந்ததும், நேராக சப்-இன்ஸ்பெக்டரின் அறைக்குள்ளே வேகமாகச் சென்றார். செல்லும்போதே, "சார், சார்! பேனா சம்பந்தமாக ஒரு 'ரிப்போர்ட்' கொடுத்திருந்தோமே..." என்று தமது பேச்சை ஆரம்பித்தார்.

உடனே அந்த சப்-இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டு, "ஆமாம், கவலையே வேண்டாம். சீக்கிரத்திலே அவன் சிண்டைப் பிடித்துக் கொண்டு வந்து விடுவார்கள். நாலா பக்கமும் ஆட்களை அனுப்பியிருக்கிறேன்" என்றார்.

" இல்லை சார், அந்த 'ரிப்போர்ட்'டை வாபஸ் வாங்கத்தான் நான் ஓடோடி வருகிறேன் " என்றார் மதுரநாயகம்.

" ஏன்? அந்தப் பையனே நேராக உங்களிடம் பேனாவைக் கொண்டு வந்து கொடுத்துச் சரணாகதி அடைந்து விட்டானா!" என்று வியப்புடன் கேட்டார் சப்-இன்ஸ்பெக்டர்.

" இல்லை சார் " என்று ஆரம்பித்து நடந்ததைக் கூறினார் மதுரநாயகம். அதைக் கேட்ட சப்-இன்ஸ்பெக்டர், " நல்ல வேடிக்கை தான்! உங்கள் பேச்சை நம்பி நான் நாலு பக்கமும் ஆட்களை அனுப்பியிருக்கிறேன். இப்போது நீங்கள் இப்படிச் சொல்லுகிறீர்களே! ஒருவருக்கு மறதி இருக்கலாம். ஆனால், இப்படிப்பட்ட விஷயங்களில் எல்லாமா மறதி!" என்று கொஞ்சம் கடிந்து கொண்டார். பிறகு, " நல்ல காலம். உடனேயே நீங்கள் வந்து சொன்னீர்களே. இல்லாத போனால் என் ஆட்கள் தேடு தேடென்று தேடிக் கொண்டேயிருப்பார்கள். வீண் அலைச்சலாகப் போயிருக்கும். சரி, இது சம்பந்தமாக இனி எந்தவித முயற்சியும் எடுக்க வேண்டாமென்று சொல்லி விடுகிறேன் " என்றார்.

மதுரநாயகம் அங்கிருந்து புறப்படும்போது மணி மூன்று. வழக்கமாக இரண்டு மணிக்குச் சபாவுக்கு அவர் வந்து விடுவார். அதனால், " சரி, இனிமேல் வீட்டுக்குப் போனால் நேரமாகி விடும். போகாமல், இப்படியே சபாவுக்குத் திரும்பிவிட வேண்டியதுதான் " என்று அங்கிருந்தபடியே நாடக சபாவுக்கு வந்து விட்டார்.

முதலாளியிடம் நடந்ததைச் சொன்னதும் அவர், " மனுஷனுக்கு மறதி இருக்



கிறதுதான். ஆனாலும், இந்த மாதிரியா? நாலைந்து நாட்களாக உங்கள் வேலையைக் கெடுத்து, என் வேலையையும் கெடுத்து, போலீஸ்காரர் வேலையையும் நீங்கள் கெடுத்து விட்டீர்களே!'' என்று சிறிது கோபமாகப் பேசினார்.

''பாவம், ரமணியைத் திருடன் என்று சந்தேகப்பட்டு விட்டோமே!'' என்று வருத்தத்தோடு கூறினார் மதுரநாயகம்.

''உங்கள் பேனாவைத் திருடாததால், அவன் பரம யோக்கியனாக்கும்! அன்றைக்குப் பட்டுத் துணியை எடுத்து ஒளித்து வைத்தானே, அது என்னவாம்?'' என்று முதலாளி கேட்டார்.

மதுரநாயகம் பதில் எதுவும் கூற விரும்பவில்லை. பேசாமல் தமது அறைக்குச் சென்று விட்டார்.

*　　　　*　　　　*

இரவு வீடு சென்றதும், ''நாலு மணி வரை காத்திருந்தேன். ஏன் மத்தியானம் சாப்பிட வரவில்லை?'' என்று கேட்டாள் கமலா தேவி.

நடந்ததை விவரமாக எடுத்துச் சொன்னார் மதுரநாயகம்.

''என்ன! இது நிஜமா! ஒரு வேளை... நாம் போலீஸில் தகவல் கொடுத்தது தெரிந்து, அந்தத் தங்கவேலு என்கிறவரிடம் பேனாவைக் கொடுத்து இது மாதிரி அவன் செய்யச் சொல்லியிருப்பானோ!...'' என்றாள் கமலாதேவி.

''கமலா, ஏன் இப்படி அர்த்தமில்லாமல் பேசுகிறாய்? உன் பேச்சைக் கேட்டுக் கேட்டுத்தான் இப்படி ஆகி விட்டது! நானே போஸ்டாபீஸில் தங்கவேலுவிடம் பேனாவைக் கொடுத்திருக்கும் போது, ரமணி எப்படி அதை எடுத்துக் கொண்டிருப்பான்?''

''நீங்கள் இல்லாத போது ரமணி இங்கே வந்ததால்தான் நான் சந்தேகப்பட்டேன். இங்கே வந்தவன் உங்களையும் பார்க்கவில்லை; என்னையும் பார்த்து ஒன்றும் சொல்லவில்லை. உடனே திரும்பி விட்டான். ஏன் திரும்பினான் என்று யோசித்துப் பார்த்தேன். பேனாவைக் காணோம் என்றதும், அவன்தான் எடுத்திருப்பான் என்று நினைத்தேன். இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் யாருக்கும் அப்படித்தானே நினைக்கத் தோன்றும்? கிணற்றிலே போட்ட சாமானைக் குளத்திலே தேடுவது போல், போஸ்டாபீஸில் இரவல் கொடுத்த பேனாவை அறையிலிருந்து தொலைந்து போய் விட்டதாகச் சொன்னீர்களே! அது மட்டும் குற்றமில்லையா? சரி, இதுதான் இப்படியாகி விட்டது. அந்தப் பட்டுத் துணி விஷயம் என்னவாம்? எனக்கு என்னவோ அவன் நல்லவனாகத் தெரியவே இல்லை'' என்று கூறினாள்.

''ஆமாம்! உனக்கு எப்பொழுதும் சந்தேகந்தான். உன்னைப் பார்த்துப் பார்த்து எனக்கும் சந்தேகப் பேய் பிடித்து விட்டது. அதனால் வீண் அலைச்சலும், உள்ளத் தவிப்பும்தான் ஏற்பட்டு விட்டன'' என்றார் அவர்.

''ஆமாம்! இப்பொழுது அப்படித்தான் சொல்லுவீர்கள்! முதலில் நீங்களும் சேர்ந்துதானே திருட்டுப் பட்டம் அவனுக்குக் கட்டினீர்கள்? அப்பொழுதே உங்களுக்கு இந்த விவேகம் இருந்திருக்க வேண்டும்!'' என்று கோபத்துடன் கூறி விட்டு அந்த இடத்தை விட்டுப் போய் விட்டாள் கமலாதேவி. அவளுக்கு அதற்கு மேல் பேச இஷ்டமில்லை.

இரவு மணி பத்து இருக்கும். சாப்பிட்டு விட்டுப் படுத்த மதுரநாயகத்துக்குத் தூக்கமே வரவில்லை. ரமணியைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தார். ''ரமணி எவ்வளவு நல்லவன்! அவன் என்னிடத்தில் எவ்வளவு அன்பாக, பிரியமாக இருந்தான்! எப்படிக் கண்ணியமாகப் பழகினான்! சொந்தத் தம்பிகூட அவ்வளவு மதிப்பும், மரியாதையும்,

உண்மையாக அது
சுவைமிக்கதுதான்
ரொட்டியின் மேலே தடவி
உபயோகிப்பதற்கு



— ஆனால் புளு பாண்ட்
உபயோகித்து எப்பொழுதாகிலும் கேக் முதலியவைகளைச்
சுட்டிருக்கிறீர்களா?



நல்ல சுவைக்கும், புஷ்டியைத் தருவதற்கும், புளு பாண்ட் மார்கரீனை ரொட்டி, சப்பாத்திகளின் மேல் தடவுங்கள். குடும்பத்திலுள்ள எல்லோருமே மிகவும் விரும்புவார்கள்—புளு பாண்டிலுள்ள விடமின் 'ஏ'யும், 'டீ'யும் அவர்களுக்கு ஆரோக்யத்தைத் தரும். புளு பாண்டை உபயோகித்து கேக், பைஸ், பேஸ்டிரீஸ் முதலியவைகளை தயார் செய்வதற்குக்கூட உபயோகியுங்கள். நீங்களே தெரிந்துகொள்வீர்கள், அது எப்படி நீங்கள் சுட்ட எல்லா தின்பண்டங்களுடைய ருசியையும் பரிமளிக்கச் செய்கிறதென்று.

வெகு சுத்தமான தாவர எண்ணெய்களிலிருந்து புளு பாண்ட் தயாரிக்கப்படுகிறது.



புளு பாண்ட் மார்கரீன்

—குறைந்த செலவு, ஆனால் மிகவும் நல்லது!

BB. 23-50 TM

பாசமும் வைத்திருக்க மாட்டானே! வீணாக அவனைத் திருடன் என்று கூறி முதலாளி விரட்டி விட்டாரே! இப்போது அவன் எங்கே இருக்கிறானோ! வழக்கம்போல இந்த மாதமும் சம்பளம் வாங்கியதும் என்னிடம் தந்து விட்டானே! இப்போது அவன் கையிலே தம்படிகூட இருக்காதே! என்ன பண்ணுவான்? எப்படிக் காலம் தள்ளுவான்?'' என்று எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தார்.

அவர் படும் அவதியைக் கண்டு மதுரநாயகத்தின் மனைவியாருக்கு வியப்பு அதிகமாயிற்று. ''என்ன இன்னுமா தூங்காமலிருக்கிறீர்கள்? சொந்த மகனைப் பிரிந்திருந்தால் கூட இப்படி வேதனைப் படமாட்டார்களே?'' என்று அங்கலாய்த்தாள். ஆனால் அவள் வார்த்தைகள் மதுரநாயகத்தின் காதில் ஏறினால்தானே?

சிறிது நேரம் சென்றது. படுத்திருந்த அவர் திடீரென்று எழுந்து உட்கார்ந்தார். ''ஐயோ! ரமணி மிகவும் ரோஷக்காரனாயிற்றே! இப்படி வீண் பழி சுமத்தியதை நினைத்து விபரீதமாக அவன் ஏதாவது செய்து கொண்டால்...?'' என்று நினைத்துக் கலங்கினார். உடனே அவருடைய இரண்டு கைகளும் ஒன்று சேர்ந்தன. கூப்பிய கைகளுடன், ''கடவுளே, ரமணி உயிரோடு இருக்க வேண்டும். விபரீதமாக எதுவும் நடந்து விடக் கூடாது'' என்று கண்களை மூடிப் பிரார்த்தித்தார்.

அதே சமயம், யாரோ கதவு தட்டும் சத்தம் கேட்டது. ''சார்! சார்!!'' என்ற குரலும் அதைத் தொடர்ந்து வந்து கேட்டது.

உடனே மதுரநாயகம் படுக்கையை விட்டு எழுந்தார். வேகமாகச் சென்று வெளிக் கதவைத் திறந்தார். அங்கே ஒரு சிறுவன் நின்று கொண்டிருப்பது அவருக்குத் தெரிந்தது.


அவன் யார் என்பது இருட்டிலே சரியாகத் தெரியவில்லை. கூர்ந்து பார்த்தார் அவர்.

உடனே, ''யாரது? ரமணியா?'' என்று ஆவலாகக் கேட்டார் மதுரநாயகம்! (தொடரும்)

ஐந்து ரூபாய் பரிசு பெற்றவர்கள் :


1. வி. எஸ். ஜெயகுமார், வயது 10, 23, கான்வெண்ட் ரோட் திருச்சி. 2. எஸ். பிரபா, வயது 11, 30, பொன்னுரங்கம் வீதி, ஆர். எஸ். புரம், கோயமுத்தூர். 3. தாக்ஷாயணி, வயது 9, கடைவீதி, சேலம்.

சிறுவர்கள் சித்திரப்போட்டி









தமிழ்நாட்டுத் திருப்பதிகள்

"ஆற்றங்கரையினிலே" என்ற தொடரில் தமிழ் மக்களுள் தெரிந்திராதவர்களுக்கும் தெரிந்து கொள்ளும் வகையில் தமிழ் க்ஷேத்திரங்களைப்பற்றி மிகவும் அருமையான முறையில் இனிமையாகவும் எளிய நடையிலும் எழுதும் பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களுக்கு எங்கள் நன்றி. திருக்காளத்தி பற்றி மிகவும் அருமையாக எழுதியுள்ளார், சேதுப் பிள்ளை அவர்கள். அதில் கண்ணப்பன் தன் கண்களைப் பிடுங்கிச் சிவபெருமானுக்கு அளிக்கும் கட்டத்தை மிகவும் அருமையாகச் சித்திரித்துள்ளார்கள். நாங்கள் படித்துள்ள கண்ணப்பன் கதைப் புத்தகங்களில் இவ்வாறு தூய நடையும், கருத்துக்களும் இல்லை. படங்களும் மிகவும் அம்சமாக விளங்குகின்றன.

சிவகெங்கை
23—9—55

எம். எம். சுந்தரம்
எம். சங்கரன்

கலை விமரிசனம்

"கல்கி"யில் செப்டம்பர் 4-ம் தேதி வெளியான வெள்ளித்திரை விமரிசனம் என்னைக் கவர்ந்தது. ஸ்ரீ "லோமாஸ்" மங்கையர் திலகத்தைப் பற்றி நன்றாய் எழுதியிருக்கிறார். விமரிசனத்தைப் படித்துவிட்டு, இந்தத் தெருவில் குடியிருக்கும் எனக்குத் தெரிந்தவர்கள் குடும்பத்தோடு போய்ப் படத்தைப் பார்த்தார்கள். எல்லாருக்கும் திருப்தியாக இருந்தது. 'கல்கி' யின் விமரிசனம் ரொம்ப சரி. படமே பார்க்காத என் அத்தை கூட வெள்ளித் திரை விமரிசனத்தைப் படிக்கச் சொல்லிக் கேட்டு ரஸிக்கிறாள். "கல்கி"யில் அடிக்கடி சினிமா விமரிசனம் எழுத வேண்டும்.

சென்னை
26—9—55

எஸ். லலிதா

[மக்களுடைய உள்ளத்தின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து வளர்க்கும் முறையில் நமது கலை ஆக்கம் அமைய வேண்டும் என்பதே நமது நோக்கம். இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட விமரிசனங்கள் அவ்வப்போது அவசியம் வெளியிடுகிறோம். —ஆசிரியர்]

பி. ஸி. ஜி

சுதந்திர இந்தியாவின் சிருஷ்டி கர்த்தாக்களில் முக்கியமானவரான ராஜாஜி அவர்கள் பி. ஸி. ஜி யை எதிர்க்க முற்பட்டிருப்பது பொதுஜனங்களின் நன்மையை உத்தேசித்துத்தான் என்பதில் சந்தேகமில்லை. சமீபத்தில் ரஸிக ரஞ்சனி ஸபாவில் பி. ஸி. ஜியை எதிர்த்துப் புள்ளி விவரங்களுடன் சவிஸ்தாரமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விவரித்தார்கள். வைத்திய நிபுணர்களுக்கிடையே சர்ச்சைக்குரிய பி. ஸி. ஜியைப் பொது ஜனங்களின் பேரில் திணிப்பது ஜனநாயக முறைக்குச் சற்றும் ஒவ்வாதது.

கோயமுத்தூரிலே வசந்தா கண் இழந்தாள். தஞ்சாவூரிலே புஷ்பவல்லி நிடாந்திரமாய்ப் பள்ளிக்குச் சென்று அங்கே பி. ஸி. ஜி ஊசி போடப்பட்டு மறுநாள் மாண்டாள். இதையெல்லாம் நினைத்து நம் ஊரிலும் பி. ஸி. ஜி வருகிறதென்றால், துள்ளி விளையாடி மழலை மொழி பேசும் பொற் சித்திரங்களைப் பெற்றவர்களின் மனம் பதறுகிறது.

ஏழைப் பாமர மக்களின் நன்மையை உத்தேசித்து பி. ஸி. ஜியை எதிர்த்துத் தமது தளர்ந்த முதுமையிலும் அயராது போராடும் ராஜாஜி அவர்கள் எங்கள் மக்கள் செல்வத்தைக் காப்பாற்றுவார் என்பது நிச்சயம். கடவுளுக்கு அடுத்தபடி ராஜாஜியை நம்புகிறேன்.

தக்கோலம்
21—9—55

கே. காந்தி

மாணவரின் யோசனை

'கல்கி' யில் ஆனைமுகனின் துதியுடன் ஆரம்பமாகும் தமிழ் இசைப் பகுதியைப் புகுத்தி இருப்பதைப் பாராட்டுகிறேன். இது அனைவரும் வரவேற்கத் தக்க அம்சம்.

'கல்கி' வரை என்னுடைய யோசனை ஒன்று உண்டு. 'கல்கி'யில் நல்ல புதுக் கவிதைகள் வரவேண்டும் என்று என் ஆசை.

சில வாரங்களுக்கு முன், (ஆகஸ்ட் 9ந்தேதி) என்று நினைவு, ராமாயணத்தில் சில உப பாத்தி



திருச்செங்கோடு ஸ்ரீ பி. எஸ். ராமதுரை அவர்களின் குமாரர் சிரஞ்சீவி பி. ஆர். சுப்ரமணியன் பி.ஏ., பி.டி.க்கும் சரபோஜிராஜபுரம் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஐயர் புதல்வி சௌ. லக்ஷ்மிக்கும் செப்டம்பர் 12ந் தேதி வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. மணமக்களுக்கு ராஜாஜியிடமிருந்தும், ஜனாதிபதி ராஜேந்திர பிரசாதிடமிருந்தும், மற்றும் பிரமுகர்களிடமிருந்தும் ஆசிச் செய்திகள் வந்தன. வாழ்க மணமக்கள்!

ரங்கள் என்ற தலைப்பில் உயர்தரப் பள்ளிகளுக்கான நிகழ்ச்சியில் சத்ருக்னனைப்பற்றி ஒரு பேச்சுக் கேட்டேன். பேச்சு என்னை மிகவும் கவர்ந்தது. 'கானுன...என்னே ஆட்சி! இனிதேயம்மா' என்ற பாடல் எனக்கும் என் சக மாணவர்களுக்கும் அப்பொழுதே பாடமாகி விட்டது. பேச்சு ஆரம்பமான பின் தான் நாங்கள் கேட்க ஆரம்பித்ததால் பேசியவர் யார் என்ற விவரமான அறிவிப்பைக் கேட்க முடியவில்லை. கடைசியில் பேசியவர் 'சோமு' என்று அறிவிக்கப்பட்டது. அது, 'கல்கி' ஆசிரியர் சோமுதான் என்று என் நம்பிக்கை.

அந்தப் பேச்சைக் கேட்டதிலிருந்து, சத்ருக்னன், ஊர்மிளா, சுமித்ரை போன்ற துணைப் பாத்திரங்களிடம் நான் பல நாட்களாகவே கொண்டிருந்த அனுதாபம் அதிகமாகி விட்டது. ஆதி கவிகளால் (கம்பர், வால்மீகி) அதிகமாக வர்ணிக்கப்படாத அவர்களைப் பற்றி நம் இன்றையத் தமிழ்க்கவிகள் ஏன் மாணவர்களாகிய எங்களுக்குப் புரியும்படி எளிய கவிதைகள் இயற்றக் கூடாது! அம்மாதிரிக் கவிதைகளைக் 'கல்கி'யில் ஏன் பிரசுரிக்கக் கூடாது! ஒரு சிறு மாணவனின் யோசனை என்று அலட்சியம் செய்ய மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

பவானி
17—9—55 ஆர். எஸ். ராஜகோபால்

['கல்கி'யில் நூதனக் கவிதைகள் பிரசுரமாவதோடு, பழைய கவிதைகளுக்குப் புதிய முறையில் விளக்கச் சித்திரங்களும் விரைவில் வெளியாகும். —ஆசிரியர்]

ரவி சந்திரிகா



சோமு

26. ரவீந்திரன் சிரித்தான்!

சிலம்பப் பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதற்கு வேண்டிய சாமான்களை மலைக் காட்டிலிருந்து கொண்டு வரும்படி, கந்தப்பனிடம் ஒரு பட்டியல் எழுதிக் கொடுத்தார் அல்லவா உஸ்தாத் மீரான்? அதன் பிறகு அவருடைய மனம் ஒரு நிலையில் இல்லை. பகோரானைப் பற்றியும், மஜீதைப் பற்றியும், நாகரத்தினத்தைப் பற்றியும், தமது எதிர்காலத் திட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டார்.

சந்திரிகாவுக்கும் ரவீந்திரனுக்கும் எந்த நிமிஷமும் ஆபத்து காத்திருக்கிறது என்று உஸ்தாத் நினைத்தார். தம்மைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. இந்தத் திருச்சி நகரம் முழுதுமே ஒன்று கூடி எதிர்த்து வந்தாலும்கூட அல்லாஹ்வின் திருநாமத்தைச் சொல்லி ஒரு கை பார்த்து விடுவார் அவர். சந்தேகமே இல்லை. இப்பொழுது அவர் கவலைப்பட்டதெல்லாம் இரண்டே இரண்டு பெண்களைப் பற்றித்தான்.

நாகரத்தினத்தின் சூழ்ச்சியிலே சிக்கி, மஜீதும் பகோரானுடன் ஒன்று சேர்ந்து விட்டால் தம்முடைய மகளின் எதிர்காலம் என்ன ஆவது? அதிலும் ஓட் அவுளின் மகன் சொன்ன விவ



ரத்தைப் பார்த்தால் நாகரத்தினத்துக்கும் பகேரானுக்கும் ஏதோ இரகசியத் தொடர்பு இருப்பதாக அல்லவா தெரிகிறது! உஸ்தாதுக்கு அது விஷயமாகக் கவலை அதிகமாக ஏற்பட்டது. மெஸ்மெரிஸம் என்றும் ஜின் வேலை என்றும் தமது சிஷ்யர்கள் இறங்கி விட்டால், இது வரை உஸ்தாத் என்றும் சிலம்பக் கூடம் என்றும் தாம் பாடுபட்டதில் என்ன அர்த்தம்? இந்த மஜீதும் இப்படிப் பட்ட ஜால விநோதங்களிலே சிக்கிச் சீரழிந்து போய்விட்டால்? ஒருவேளை தம்மை மறுபடியும் ஏமாற்றி மகனை அப்புறப்படுத்திக் கொண்டுபோய் விடுவதற்கான சூழ்ச்சிகளை அவன் செய்ய முனைந்தால்?

உஸ்தாத் இந்த மாதிரி எண்ணிக் கொண்டே மனத்துக்குள்ளே சிரித்தார்! மகன் மகன் என்று இப்படி ஒரு அசட்டுப் பாசம் எதற்காக இருக்க வேண்டும்? அல்லாஹ் அவனுடைய தலையில் என்னென்ன எழுதி வைத்திருக்கிறானோ அப்படியெல்லாம் நடக்கும். அதற்குத் தான் ஏன் இப்படிக் கவலைப்பட வேண்டும்? ஆனால் தான் நிச்சயம் கவலைப்பட வேண்டிய காரியம் வேறு ஒன்று உண்டு. அது தான் சந்திரிகாவின் விஷயம்.

மீராசுதாரிடம் தான் வாக்குக் கொடுத்தாயிற்று. இந்த அகில உலகமே எதிர்த்து வந்தாலும் ரவீந்திரனையும் சந்திரிகாவையும் காவல் செய்ய வேண்டிய பொறுப்பு தன்னுடையதே.

ஆமாம்; பகேரானிடம் சென்று கண்டிப்பாக இரண்டில் ஒன்று தெரிந்து வந்து விட வேண்டும். அயோக்கியன் நாகரத்தினத்தை அறவே மறந்து விட்டுத் தன்னுடன் விசுவாசத்தோடு நிற்கிறானா அல்லது அந்த நாகரத்தினத்தோடு சேர்ந்து தனக்கு எதிராக நிற்கப் போகிறானா?— இந்த விஷயத்தைத் தெளிவாகத் தெரிந்து வந்துவிடவேண்டும். அப்படி அவன் நாகரத்தினத்தோடு உறவு கொள்வதாயிருந்தால் இனி இந்த உஸ்தாதுக்குச் சாகும் வரை பகேரான் ஜவாப் சொல்லியாக வேண்டும், அவனை விடப்போவதில்லை — இவ்வாறு தீர்மானித்தார் உஸ்தாத். ஆனால் ஒன்று. குப்புசாமி ஒருவன் இவர்களோடு சேர்ந்திருக்கிறான். அவன் வெறும் முயல் குட்டி. பயந்தாங் கொள்ளி. அந்த முயல் குட்டி இவர்களோடு சேர்ந்திருப்பதால் எல்லாமே முயல்குட்டி விவகாரமாகத்தான் முடியும்! தைரியமாக இவர்கள் ஒரு காரியம் செய்வது என்று இராது.

மஜீத் ஒருவன் தான் வீரன். மஜீத் விஷயத்திலும் இனிக் கண்டிப்புத்தான். ஒன்று ஆமினாவோடு ஒழுங்காக வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டு நல்ல பிள்ளையாகத் தனது சிலம்பப் பள்ளிக் கூடத்தை நடத்த வேண்டியது. இல்லையென்றால் உஸ்தாத் மீரானுக்கு ஜன்மப் பகைவனாக மாறியாக வேண்டியது. இரண்டில் ஒன்று. அதையும் இன்றே முடிவாகத் தெரிந்து வந்துவிட வேண்டும்.

உஸ்தாத் மீரானுக்கு மனசில் அமைதி இல்லை. இந்த விஷயங்களை யெல்லாம் ஒரு வகையாகத் தீர்த்துக் கட்டினால்தான் அவருக்கு நிம்மதி உண்டாகும். எனவே லுங்கியை வரிந்து கட்டிக் கொண்டு மஸ்லின் ஜிப்பாவை எடுத்து விரைவாக



மேலே போட்டுக் கொண்டு, வீட்டிலிருந்து பகேரானைத் தேடிப் புறப்படத் தயாரானுர் உஸ்தாத் மீரான்.

அப்பொழுது காலை ஏழரை மணியிருக்கும். உஸ்தாத் மீரானுக்கு இம்மாதிரி எப்பொழுதாவது மனக் கிலேசம் ஏற்பட்டது என்ருல் உடனே மஸ்தான் சாகிபு பாடலைத்தான் தமக்குள்ளேயே பாடிக்கொள்ளுவார். குணங்குடி மஸ்தானே தனக்கு உறு துணைவனுக வந்து இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் எத்தனையோ முறை உதவியிருப்பதாக அவருடைய அனுபவம். மனத்துக்குள்ளே பாடலை முணு முணுத்துக் கொண்டே வெளியே வந்தார்.

வேதம்நீ வேதவே தாந்தம்நீ எவையாலும்
வித்தகன் நானும் நீயே
மெய்ஞ்ஞான வீடுநீ வீட்டின் விளக்குநீ
விகிதிச் சுடரும் நீயே
நாதன்நீ நவநாத சித்தன்நீ முத்தன் நீ
நாதாந்த மூர்த்தி நீயே
நற்குணம் குடிகொண்ட பா[illegible]ா வானகுரு
நாதன் முகயித் நீனே!



என்று பாடியவாறு வீட்[illegible] வாசலைத் திறந்து கொண்டு வந்தவர், [illegible]ய திடுக்கிட்டுப் போய் நின்ருர்.

வாசலில் கார் வந்து நின்[illegible]லிருந்து மூதூர் பெரிய மிராசுத[illegible]க் தின் தகப்பனுர்—இறங்[illegible] உஸ்தா துக்குத் தூக்கி வாரிப்[illegible]து. இந்த மாதிரி முன்னதாகச் [illegible]கொள் ளாமல் பெரிய [illegible] இதுவரை வழக்கம் இல்லை.

"மிராசுதார்வாளா? [illegible] சலாம் செய்து கொண்டே ஆச்சா[illegible] வேற்ருர் உஸ்தாத்.

மிராசுதார் படியில் ஏறும்போதே அவருக்குக் கையும் காலும் பதறின.

"உஸ்தாத் நடக்கக் கூடாதது நடந்து விட்டது! என்ன செய்வேன்!" என்ருர் மிராசுதார். அவருடைய குரல் நடுங்கியது. கண்களும் கூடக் கலங்கின.

"என்ன மிராசுதார்வாள்! இப்படி உங்களுடைய உடம்பெல்லாம் ஆடுகிறதே. உட்காருங்கள் திண்ணையில்!" என்ருர் உஸ்தாத் மீரான்.

"உட்காருவதற் கெல்லாம் நேரமில்லை. சந்திரிகா காணுமற் போய் விட்டாள்! ரவீந்திரனுடைய வீட்டில் ஒரே அமளியாக இருக்கிறது!"

"என்ன! சந்திரிகாவைக் காணவில்லையா!"

உஸ்தாதுக்கு அப்படியே உதடு துடித்தது.

"உஸ்தாத்! டாக்டர் சுரேஷ் சொன்னுரென்று அந்த விசித்திரமான குடும்பத்தை முற்றத்து வீட்டிலே குடிவைத்தோம். குடி வைக்கும் போதே எனக்கு முழு மனசு இல்லை. அரை மனசுதான். ஆனலும் அப்பு ரொம்பப் பிடிவாதமாக இருந்தான். சரி என்று சொன்னேன். வந்த அன்றைக்கே அந்த வீட்டில் சண்டையும் சச்சரவுமாக இருந்தது. இப்பொழுது அந்தக் கூத்தாடியைக் காணும் என்று—"

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் நீங்கள். ரவீந்திரனும் அவனுடைய குடும்பத்தார்களும் ரொம்ப நல்லவர்கள் என்று தான் தெரிகிறது. அந்தப் பாழாய்ப் போகிற நாகரத்தினம் வந்து புகுந்துதான் இத்தனை ரகளை செய்து விட்டான்."

"நாகரத்தினமா?"

"ஆமாம்! தாயுமானவர் சந்தில் இருக்கும்போதே திருட்டு வேலை செய்தான். உங்கள் வீட்டு வளைவுக்குள் வந்த பிறகாவது பயப்படுவான் என்று நினைத்தேன். இப்பொழுது சந்திரிகாவையே அபகரித்துப் போயிருக்கிருன்கள். இது நீண்ட நாள் திட்டம் மிராசுதார்வாள்!"

"உஸ்தாத்! என்னுடைய வீட்டுக் காம்பவுண்டுக்குள் இப்படி ஒரு காரியம் நடந்து விட்டது என்ருல் இனி நான் எல்லாம் மனிதன் என்று வளைய வருவதில் அர்த்தம் என்ன இருக்கிறது?—"

"[illegible]ர்வாள், உங்களைப் போலே [illegible] என்னுடைய நிலைமையும். உங்கள் பையன் [illegible]அப்புலிங்கத்திடம் இனிமேல் அந்தக் குடும்பத்தைக் காவல் செய்ய வேண்டிய பொறுப்பு என்னுடையது என்று வாக்குக் கொடுத்தேன். இனிமேல் [illegible] வாக்[illegible] . இல்லை. இந்த உஸ்தாத் இ[illegible]றும் பிணக்தான். [illegible] இருந்திருந்தால், [illegible]ரத்தம் ஓடினுல் அந்த வாக்கைக் காப்பாற்றி யிருப்பேனே—"

மிராசுதார் உஸ்தாத் மீரானின் முகத்தையே பார்த்தார். அதில் வேதனை ஓடிக் கொண்டிருந்தது.

"உஸ்தாத்! நீங்கள்கூட மனம் கலங்குவதை இன்றுதான் பார்க்கிறேன். இனி என்ன செய்வது? உங்களைத் தவிர இதற்கு ஒரு வழி எனக்குத் தோன்றவில்லையே—"

மிராசுதார் திண்ணையில் உட்கார்ந்தார். உஸ்தாதும் எதிரே உட்கார்ந்து கொண்டு கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தார். பிறகு சொன்னுர்:

"மிராசுதார்வாள்! நீங்கள் கவலைப்படாமல் வீட்டிற்குப் போங்கள். நான் நேரே பகேரான் வீட்டுக்குப் போகிறேன். சந்திரிகாவைப் பற்றித் துப்புத் தெரிகிறவரையில் இந்த உஸ்தாதுக்கு இருப்பு இல்லை. இது உறுதி!" என்று சொன்னுர் மீரான். அவருடைய குரலில் கண்டிப்பு இருந்தது.

"உஸ்தாத்! காலையில் எழுந்து பார்த்ததும் சந்திரிகாவை மாடியிலே காணும்.

அந்த விநாடியிலிருந்து ரவீந்திரனுடைய நிலை எப்படியோ பயங்கரமாக இருக்கிறது. இந்நேரம் கல்யாணி அம்மாளோடு என்ன ரகளை நடந்து கொண்டிருக்கிறதோ தெரியவில்லை! எங்கேயோ போகிற தொல்லையை விட்டிலே இழுத்துப் போட்டுக் கொண்டு நான் அவஸ்தைப் படுகிறேன். அந்தப் பயலோ இந்தச் சமயம் பார்த்து மலை நாட்டுக்கு உல்லாச யாத்திரை போயிருக்கிறான். டாக்டருக்கு என்ன வந்தது? காமிராவும் கையுமாக அவர் மலைகளிலே சுற்றிக் கொண்டிருப்பார். வேதனைப் படுவது இந்த முருகானந்தம்! எல்லாம் நம்முடைய தலைவிதி, உஸ்தாத்! தலைவிதி!"

"மிராசுதார்வாள்! நீங்கள் சலித்துக் கொள்ளாதீர்கள். இத்தனை பெரிய ஊரில் இந்த உஸ்தாதுக்கு வேண்டிய குடும்பத்தில் இப்படி ஒரு காரியம் நடந்தது என்றால் நான் உயிரோடு இருந்துதான் என்ன பிரயோஜனம்? நீங்கள் கவலைப்படாதீர்கள். வீட்டுக்குப் போய் அந்த ரவீந்திரனை மட்டும் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள். நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் அங்கே வருகிறேன். இப்பொழுது நேரே பகோரானைப் பார்த்து அந்த நாகரத்தினம் யமனோடு வலுச் சண்டைக்கு வருகிறான் என்பதை மட்டும் தெரியப்படுத்தி விட்டு வருகிறேன்!"

இவ்வாறு சொல்லி மிராசுதாரை அவருடைய வீட்டுக்கு அனுப்பி விட்டு, ஒரே கவலையும் கோபமுமாக உஸ்தாத் மீரான் பாலக்கரையில் பகோரான் வீட்டை நோக்கி விரைவாக நடந்தார். அவருடைய நடையில் இருந்த வேகமும் மனத்தில் இருந்த வேகமும் ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருந்தன. அந்த வேகத்தில் எதிரே நாகரத்தினம் மட்டும் அகப்பட்டிருந்தால் அப்படியே அவனைத் துவைத்து மெழுகித் துடைத்திருப்பார் போலத் தோன்றியது.

* * *

மூதூர் மிராசுதார் நேரே வீட்டுக்குப் போகவில்லை. உஸ்தாத் மீரானிடம் தகவல் சொல்லியிருந்தாலும் கூட, எதற்கும் பின்னொரு சந்தர்ப்பத்தில் உதவியாக இருக்கும் என்று கருதி நேரே மலைக்கோட்டைப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார். அங்கே அவருக்குத் தெரிந்தவர் ஒருவர் ஸப்-இன்ஸ்பெக்டராக இருந்தார்.

மிராசுதார் போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்வது அதிசயமான ஒரு சம்பவமானதால், இவருடைய வரவிலே ஆச்சரியப்பட்டுப் போனார் ஸப்-இன்ஸ்பெக்டர். அவரிடம் மிராசுதார் விவரங்களைச் சொன்னதும் ஸப்-இன்ஸ்பெக்டருக்கு இன்னும் ஆச்சரியம் அதிகரித்தது. காணாமற் போன சந்திரிகா சிறுமி இல்லை, வயது வந்த பெண்மணிதான் என்ற விவரம் தெரிந்ததும் ஸப்-இன்ஸ்பெக்டருடைய குழப்பம் மேலும் அதிகம் ஆயிற்று. ரவீந்திரனுக்கும் சந்திரிகாவுக்கும் உள்ள தொடர்பை அவர் அலசிக் கேட்டபோதோ மிராசுதாருக்குக் குழப்பம் அதிகமாயிற்று. யார் யாரைச் சந்தேகப் படுகிறார்கள், அந்த வீட்டுக்கு வேறு யாரெல்லாம் அடிக்கடி வந்து போகிறார்கள், இரவு படுக்கப் போகு முன் சந்திரிகாவைக் கடைசியாகப்



பார்த்தது யார் என்றெல்லாம் ஸப்-இன்ஸ்பெக்டர் சரமாரியாகக் கேள்விகள் கேட்க ஆரம்பிக்கவே, மிராசுதாருக்குத் தலை சுற்றியது. எவ்வளவு தெரிந்தவராக இருந்துங்கூட ஸப்-இன்ஸ்பெக்டர் இந்தமாதிரி அவரைக் கேள்வி கேட்க ஆரம்பிப்பார் என்று முருகானந்தம் எதிர்பார்க்கவில்லை.

"மிஸ்டர் ஸப்-இன்ஸ்பெக்டர் ஸார்! ஏதோ தெரியாமல் முன் யோசனை இல்லாமல் இங்கே வந்து விட்டேன். எனக்கு ஏற்கனவே புத்தி குழம்பியிருக்கிறது. தயவு செய்து இன்றைக்கு ஒரு நாள் பொறுத்துக் கொள்ளுங்கள். நாளைக் காலையில் நம்முடைய புத்திரபாக்கியம் வந்து விடுவான். அவன் இழுத்து வைத்த வம்புதான் இந்தக் காரியம். தயவு செய்து நாளை அவனுடைய புத்தியைக் குழப்புங்கள். என்னை விட்டு விடுங்கள்" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டார் முருகானந்தம். அவருக்குப் புத்தி சரியில்லை. வயது காலத்தில் இம்மாதிரிக் குழப்பங்களையெல்லாம் தாங்குவதற்கு வேண்டிய பொறுமையும் மன உறுதியும் இல்லாமல், அவருடைய மனம் கலங்கித் தத்தளித்தது.


மிராசுதார் முருகானந்தம் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வெளியே வந்த ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் ஸப்-இன்ஸ்பெக்டருக்கு முன்னால் வந்துநின்றார் ஒரு போலீஸ் ஜவான். புகழ் பெற்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இராணுவ முறைப்படி சித்தகத்திக் கம்பாக நின்று 'டக்' என்று ஒரு 'ஸல்யூட்' அடித்து விட்டு, மறுபடியும் அதே கம்பாக நின்றார் அவர்!

"என்ன நாற்பத்தேழு? என்ன விசேஷம்?" என்றார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"நேற்று ராத்திரி ரோந்து போன ஜவான்கள் ஒரு தகவல் சொன்னாங்க யஜமான்!" என்று இழுத்தார் ஜவான்.

"என்ன சொன்னாங்க?" என்று கேட்டுக் கொண்டே ஸிகரெட்டைப் பற்ற வைத்தார் ஸப் - இன்ஸ்பெக்டர்.

"ராத்திரி மூணு மணிக்கு ஆண்டார் தெருவில் தன்னந் தனியாக ஒரு பெண் மணி நடந்து போனாளாம் யஜமான். எங்கே போகிறாள் என்று பின்னாலேயே பதுங்கிப் போய்ப் பார்த்தார்களாம் நம்முடைய ஆட்கள். அவள் காவேரிப் பக்கமாக நடந்துபோய் விட்டாளாம். துலாக் காவேரி ஸ்நானத்துக்காகச் சிலபெண்கள் சீக்கிரமே போகிறார்கள் அல்லவா, அப்படி இவளும் போகிறாளாக்கும் என்று நினைத்து விட்டார்களாம் ரோந்து போனவர்கள். இப்பொழுது மிராசுதார் வந்து சொல்வதைப் பார்த்தால்......"



"இந்தா நாப்பத்தேழு! நேற்று ராத்திரி ரோந்து போனவர்கள் அந்த இரண்டு பேரையும் இன்று சாயந்திரத்துக்குள் என்னை வந்து பார்க்கச் சொல்லு. ஏண்டா, துலாக் காவேரி ஸ்நானத்துக்குப் போகிறது என்றால் பதினெட்டு வயதுக் கன்னிதான் போவாளோ? சரி அப்படியே தான் போனாள் என்று வைத்துக் கொள்ளுவோம். துலாக் காவேரி இந்தச் சித்திரை மாசத்துக் கோடையிலேதான் ஓடுமோ? ஏண்டா, உங்களுக்கெல்லாம் வர வர மூளை காவேரியோடு போய் விட்டதா? அப்படித்தானா?"

"இல்லீங்க, யஜமான்!"

"என்னடா, இல்லை. மூளை தானே?" என்று ஒரு அதட்டு

அதட்டி விட்டு ஸப் - இன்ஸ்பெக்டர் கண்டிப்போடு சொன்னார் :—

"சரி சரி; இருந்து போனவர்கள் அத்தனை பேரையும் இன்று சாயந்திரத்துக்குள் இங்கே வந்து என்னைப் பார்க்கும்படி சொல்லு !"

மிராசுதாருடைய குழப்பம் போலீஸ் ஸ்டேஷனோடு நீங்குவதாக இல்லை. உண்மையில் இத்தனை குழப்பங்களையும் விட மிக மிக அதிர்ச்சி தரக்கூடிய ஒரு பெருங் குழப்பம் வீட்டிலே அவருடைய வரவுக்காகக் காத்திருந்தது!

காரிலிருந்து கீழே இறங்கித் தமது பங்களாவுக்குள் முருகானந்தம் அடியெடுத்து வைக்கும்போதே பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தான் பங்களாக் காவல்காரன்.

"ரவீந்திரனுக்கு, ரவீந்திரனுக்கு, அவருக்கு—"

இதற்கு மேல் அந்த வேலைக்காரனுக்கு யஜமானிடம் சொல்ல வார்த்தைகள் வெளிவரவில்லை.

"என்னடா விஷயம்? ரவீந்திரனுக்கு என்ன?" என்று கேட்டுக் கொண்டே படிகளில் ஏறினார் முருகானந்தம். என்ன ஆச்சரியம்! முற்றத்து வீட்டிலிருந்து கூக்குரல் கேட்டது. ரவீந்திரனுடைய குரல் தான் அது.

"கொண்டா அவனை! அடே நாகரத்தினம்! கொண்டாடா அவனை! கல்யாணி! நீயும் உடந்தையா! எங்கே அவனை? சொல்லு! சொல்லி விடு!"

இப்படி ஒரே கூக்குரலாக இருந்தது. அந்தக் கூக்குரலுக்கு மத்தியில் கல்யாணி அம்மாளின் அழுகுரலும் கேட்டது.

கையும் காலும் பதறியவராக முருகானந்தம் நேரே முற்றத்து வீட்டுக்குள் நுழைந்தார்.

ரவீந்திரனைக் கையும் காலும் கயிற்றினால் கட்டிப் போட்டிருந்தார்கள். பக்கத்தில் நாலைந்து பேர் இருந்து அவன் எழுந்து ஓடிவிடாதவாறு பிடித்துக் கொண்டிருந்தார்கள். ஏதேதோ கூப்பாடு போட்டுக் கொண்டு தன்னைப் பிடித்திருந்தவர்களையெல்லாம் திமிறி, ஓடுவதற்கு முயன்றான் ரவீந்திரன்.

மிராசுதார் உள்ளே நுழைந்தார். இவரைக் கண்டதும் "பெரியப்பா!" என்று ஓரேபடியாகக் கதறிக் கொண்டே கல்யாணி அம்மாள் ஓடோடி வந்து அவர் காலிலே விழுந்தாள்.

"பெரியப்பா! நீங்கள்தான் எனக்கு அப்பா! எனக்கு வேறு அப்பா இல்லை. எனக்கு அண்ணன் இல்லை. தம்பி இல்லை. எல்லாரும் லால்குடியிலே செத்துப் பிணமாகப் போய் விட்டார்கள். இனிமேல் நீங்கள்தான் எனக்கு எல்லாம். ஐயோ! நான் என்ன செய்யப் போகிறேன். இனிமேல் நான் என்ன செய்வேன்? அவரைப் பாருங்களேன்! அப்பா! அப்பா!" என்று மிராசுதாரின் கால்களிலே விழுந்து கதறினாள் கல்யாணி. உலகில் உள்ள மனித இதயங்களின் சோகம் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு அபலையின் குரலிலே கதறுவது போல் இருந்தது அது. மிராசுதாருக்குக் கண்ணீர் பொங்கியது.

"எழுந்திரு அம்மா கல்யாணி! என்ன செய்யலாம். ஏதோ கஷ்ட காலம்! கவலைப்படாதே அம்மா!" என்று சொல்லிக் கொண்டே ரவீந்திரனுக்கு அருகிலே வந்து அவனைக் கூர்ந்து பார்த்தார். அவன் இவரை அடையாளம் தெரிந்து கொண்டதாகவே காணவில்லை. அவனுடைய விழிகள் அங்குமிங்கும் 'திருதிரு' என்று ஓடி விழித்தன. அறிவு என்ற ஒளி அந்த விழிகளிலே அணைந்து போய் இருந்தது. புத்திசாலித்தனமும், மேதா விலாசமும் சுடர்விட்ட அந்தக் கண்களில் இப்பொழுது ஒரு சூனியம் படர்ந்திருந்தது. ஜீவ களை மின்னிக் கொண்டிருந்த அந்த முகம் இருண்டு போய் வெறிச்சோடி யிருந்தது. மிராசுதாருக்கு அந்த முகத்தையே பார்க்க முடியவில்லை.



"கொண்டா அவனை! எங்கே அந்த நாற்காலி. எடு அதை! தூக்கிப் போடு. நான் சாகிறேன் முதலில். அதன் பிறகு தான் மற்றப்பேர் சாக வேண்டும். ஆமாம் நான்தான் முதலில் சாக வேண்டும்—" இப்படிச் சொல்லிக் கொண்டு பயங்கரமாக ஒரு சிரிப்புச் சிரித்தான் ரவீந்திரன். அந்தச் சிரிப்பிலே மூளையின் துண்டுகளே சிதறி விழுவது போல் இருந்தது. எண்ணங்களும், கற்பனைகளும் ஏதோ ஒரு நுட்பமான கயிற்றினால் கட்டப்பட்டு மனம் என்ற மையத்திலே சுழல்கின்றன அல்லவா, அந்தக் கயிற்றை அறுத்துக் கொண்டு சிதறியது ரவீந்திரனுடைய சிரிப்பு. அந்த கோரமான பயங்கரச் சிரிப்பின் சிதறலில் கல்யாணி அம்மாளுடைய இதயம் அப்படியே சுக்கு நூறாகச் சிதறி விழுந்து ரத்தக் கண்ணீர் கொட்டியது.

இந்த அலங்கோலக் காட்சிகளுக்கெல்லாம் களமாக அமைந்த அந்த முற்றத்து வீடு ரவீந்திரனுடைய பயங்கரச் சிரிப்பையும், கல்யாணி அம்மாளின் துன்பமயமான அழு குரலையும் இதயத்துக்குள்ளே வைத்துப் பொருமுவது போல விம்மி விம்மி நான்கு சுவருக்குள்ளும் எதிரொலித்துக் குமைந்தது. (தொடரும்)

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor : Mi. Pa. Somasundaram


"என்ன நறுமணம்!
என்ன புதுமலர் இனிமை!"
என்கிறார் குசலகுமாரி
"லக்ஸ் டாய்லட் சோப்பிலுள்ள மனோகரமான புது நறுமணத்தை விரும்புகிறேன்."
சினிமா நட்சத்திரங்களைப்போல்— உலகத்தின் மிக்க அழகுடைய பெண்மணிகளைப்போல், நீங்களும் செய்யுங்கள்! சுத்தமான, வெண்மையான லக்ஸ் டாய்லட் சோப்பின் மிகுந்த நறுமணமுள்ள நுரை உங்களுடைய வதனத்திற்கு ஒரு புதுமையான பொலிவையும், நேர்த்தியான புதியதொரு வனப்பையும் அளிக்கட்டும்.
உங்கள் தினசரி எழிலளிக்கும் ஸ்னானத்திற்கு பெரிய சைஸ் சோப்புக் கட்டியை உபயோகியுங்கள்.
LUX
லக்ஸ்
டாய்லட் சோப்
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
LTS 457-50 TM
இந்தியாவில் தயாரித்தது

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

